இவர்கள்

பி.ராமச்சந்திரன்

ஜோதி

ஜோதி மலர் 34
முதற் பதிப்பு 1947

விலை ரூ. 1-8-0.

PRINTED AT JOTHI PRESS, TRIPLICANE, MADRAS,
AND PUBLISHED BY A. K. JAYARAMAN.
FOR JOTHI NILAYAM. Q. H. M. S. NO. 489.

இவர்கள்

ஹாஸ்யச்சித்திரங்கள்

பி. ராமச்சந்திரன்

ஜோதி நிலையம்
திருவல்லிக்கேணி, : : சென்னை.

ஆசிரியரின் இதர நூல்கள்
விரைவில் வெளிவரும்

நபால் (நாவல்)
நாடோடியின் படகு (கதைகள்)
இது என்ன தொல்லை (ஹாஸ்யச் சித்திரங்கள்)

உள்ளடக்கம்

			பக்கம்
1.	சமையற்காரன்	...	9
2.	பால்காரன்	...	24
3.	தோட்டக்காரன்	..	39
4.	தபால்காரன்	...	51
5.	வண்டிக்காரன்	...	65
6.	வேலைக்காரன்	...	82
7.	தையற்காரன்	...	98

எதைப் பார்த்தாலும் சிரித்து
வாழ்வையே சிரிப்பு மயமாக்கும்
குழந்தை பூர்ணிமாவுக்கு.

முன்னுரை

(படிப்பதற்குத்தான்)

கையிலிருந்தசரக்கு ஒரு புஸ்தகமாக அச்சாகி முடிந்ததும் எதிர்பாராத ஒரு பாரம் மனதை அழுத்த ஆரம்பித்தது. "முன்னுரையாக ஏதேனும் எழுதப் போகிறீர்களா?" என்று கேட்டார் ஸ்ரீ ஜயராமன். "முன்னுரை எதற்கு?" என்றேன், சங்கோசத்துடன் மென்று விழுங்கிக்கொண்டு. உண்மையில் அவர் கேள்வி என் மனதில் சபலத்தைத் தூண்டிவிட்டது. முன்னுரை இருந்தால் தான் புத்தகம் வெளிவந்த முழு ஆனந்தத்தையும் அனுபவிக்க முடியும்போல் தோன்றியது. முன்னுரை இல்லாவிட்டால் புத்தகமும் கொஞ்சம் மூளிபோல்தானே இருக்கும். அதற்குத்தான் இடம் வைப்பானேன்?

சரி, முன்னுரை அவசியம்தான். அதற்கு யாரேனும் பிரபல எழுத்தாளரையோ தலைவரையோ கொண்டு எழுதச் சொல்லக்கூடாதா? நீரே எழுதுவானேன்?- என்ற கேள்வி உங்கள் மனதில் எழலாம். சம்பிரதாயமான கேள்விதான். ஆனால் அவர்கள் எல்லாரையும்விட இது விஷயத்தில் என்னிடம்தான் யோக்யதாம்சம் அதிகம் இருக்கிறதென்று சொல்வேன். புத்தகத்தில் என்ன அடங்கியிருக்கிறதென்ற ரகசியம் எனக்குத்தானே முழுக்க முழுக்கத் தெரியும். விஷயம் தெரியாத ஒரு புள்ளியைத்தேடி அலைந்து புத்தகத்தை வாசிக்கச் சொல்லி கெஞ்சுவானேன்?

முன்னுரை என்ன எழுதுவது என்ற பிரச்னையோடு பிரச்னையாக இவ்வளவும் எண்ணிப் பார்த்தேனென்று வைத்துக்கொள்ளுங்கள். அப்போது தான் உதயமாயிற்று, சரியான முன்னுரை எது என்ற ஞானம். புத்தகம் முழுவதும் பொறுமையுடன் படித்து முடித்துவிட்டு நீங்கள் சப்புக் கொட்டிக்கொண்டு கூறும் பின்னுரையே புத்தகத்துக்கேற்ற முன்னுரை என்ற தீர்மானத்துக்குவந்தேன். இந்த ஞானோதயம் முதலிலேயே உண்டாகியிருந்தால் முன்னுரை எழுத உட்கார்ந்தே இருக்கமாட்டேன். உட்கார்ந்த பிறகு அரைகுறையாய் விடுவதற்கும் மனமில்லை. குறையும் சொல்லித்தீர்த்து விடுகிறேன்.

நான் முன்பு சொன்னதுபோல் இந்தப் புத்தகத்தில் உள்ள ஹாஸ்யச் சித்திரங்களைப் படிக்கப் பொறுமை தேவைதான். பேசும் நடையையே எழுத்தில் பார்க்கும்போது படிப்பதில் கொஞ்சம் தடுமாற்றம் ஏற்படும். இந்தத் தடுமாற்றத்தைப் போக்கிக்கொண்டு சுலபமாக வாசிக்க ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. பேசும் பாத்திரம் நாம்தான் என்று கற்பனை செய்துகொள்ளுங்கள். முதல் வார்த்தையைப் படித்ததுமே அப்புறம் வருவது இன்னதென்று படிக்காமல் நீங்களே பேச ஆரம்பித்து விடுவீர்கள். ஆனால் புஸ்தகத்தை மட்டும் தயவுசெய்து மூடிவிட வேண்டாம்.

நாம் தினசரி சர்வசகஜமாகப் பழகிப் பேசி வரும் ஆசாமிகள் சிலரைச் சித்திரிப்பதுதான் இச்சித்திரங்களின் நோக்கம். அதாவது இச்சித்திரங்களை எழுதத்துணிந்த (?) என் நோக்கம். இவ்வளவு நல்ல சமையல்காரன், பால்காரன், வண்டிக்காரனும் இருக்கிறார்களா என்று அதிசயித்து, சங்

கரனையும், மருதையையும், சடையனையும் தேடிக் கொண்டு கிளம்பி விடாதீர்கள்.

வாழ்க்கை துன்பமயமானது என்ற அழுமூஞ்சி வேதாந்தத்தில் எனக்கு நம்பிக்கை கிடையாது. எச்சில் பொறுக்கித் தின்று திரிந்துகொண்டிருந்த ஒரு அவதூதர் சொரிபிடித்த தெரு நாயைக்கட்டிக்கொண்டு சிரித்தாராம். அந்த நிலையிலும் எந்த அல்பவிஷயம் அவரது வேதாந்தக் கண்களுக்கு நகைப்பூட்டியதோ? அத்தகைய அவதூத நிலையை நாம் எட்டிப்பிடிக்க முயற்சி செய்யவேண்டாம். ஆனால் நாம் வாழும் உலகத்தில் சிறுக்கும் இடமுண்டு என்ற பரந்த நோக்கம்மட்டும் மனதில் தோன்றிவிட்டால் அப்புறம் சிரிப்பதற்கு ஹாஸ்யத் துணுக்குகளைத்தேடி ஆராய வேண்டியதில்லை. தினசரி வாழ்க்கையே தெவிட்டாத ஹாஸ்யச் சித்திரமாக நம் கண்களுக்குத் தோற்றமளிக்கும்.

நெடுநாள் சோம்பலுக்குப்பின் எழுத ஆரம்பித்த கடிதம்போல் இந்த முன்னுரையும் முடிவில்லாமல் நீண்டுவிடுமோ என்று பயமாக இருக்கிறது. ஆகையால் நானே அதை முடித்து விடுகிறேன். முடிப்பதற்கு முன்னால் இச்சித்திரங்களைப் புத்தக ரூபத்தில் கொண்டுவருவதற்கு விசேஷ சிரத்தை எடுத்துக்கொண்ட ஜோதி ஸ்ரீ ஜயராமன் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றி.

சென்னை
26-2-47

பூ. ராமச்சந்திரன்.

1

சமையற்காரன்

சங்கரன். (வந்துகொண்டே) அண்ணு இந்த டம்ளர் காப்பியைச் சாப்பிடுங்கோ. பன்னெண்டு மணிவரைக கும் பசி தாங்கணும் பாருங்கோ. சமையலுக்குக்கொஞ் சம் டயமாகும் போலேருக்கு......வந்து......

எஜமானர். பேஷ், இப்பத்தான் நினைச்சேன் ஒரு டம்ளர் காப்பி சாப்பிட்டாத் தேவலேன்னு.

சங். இந்தச்சங்கரனை சாமான்யமா நினைச்சுடா தேங்கோ அண்ணு! எள்ளுங்கறதுக்கு முன்னுல் எண் ணெயா நிப்பன் இந்தச்சங்கரன், ஆமாம்! காப்பி எப்படி?

எஜ. ரொம்ப ஜோர், கேக்கணுமா ?

சங். என்னதான் சொல்லுங்கோ, கை விசேஷம்ங் கறது அது தனிதான். நீங்களும் எவ்வளவோ கையாலே காப்பி சாப்பிட்டிருப்பேளே. இந்த ஒரு அலாதி வாசனை எந்தக் காப்பிலேயாவது பாத்திருக்கேளா ?

அம்மாள். அதிருக்கட்டும் சங்கரா, சமையலுக்கு நாழியாவானேன் இன்னிக்கு ?

சங். அதையேன் கேக்கறேள் போங்கோ-அண்ணு, இந்த முனியம் பயலை நீங்க கட்டாயம் கண்டிக்கணும்- விறகு வாங்கிண்டு வாடான்னு, இப்படியா பச்சை மரத்தை வெட்டிண்டு வருவன் ? என் கண் ரெண்டையும் பாருங்கோ, கோவைப்பழமாச் சிவந்துபோயிருக்கு.

புகையிலே, அடுப்புக்கும் பாத்திரத்துக்கும் வித்தியாசம் தெரியலேன்னு!... ஆமாம், அம்மா, உங்களுக்குக் காப்பி கொண்டுவரட்டுமா ?

அம். எத்தனை தரம் காப்பி? சமையலைச் சீக்கிரமா ஆக்கறதுக்கு வழி பாப்பயா ?

சங். அண்ணுவுக்கு இன்னிக்கு ஆபீஸ் கூட இல்லே. ஒருநாள் மெள்ளத்தான் ஆகட்டுமே. என்ன அண்ணு நான் சொல்றது ?

அம். காலம்பற டிபன்கூட ஒண்ணும் பண்ணலே. சமையலைச் சிக்கிரம் ஆக்கு சங்கரா.

சங். அதெல்லாம் நீங்க சொல்லவேண்டாம் அம்மா இதோ ஒருநொடியில். அந்தப்பச்சைவிறகு இப்பத்தான் பிடிக்க ஆரம்பிச்சிருக்கு. அடுப்பு மட்டும் சரியா எரிஞ்சு தானு, கண்மூடிக் கண் திறக்கறதுக்கு முன்னுல ஆயி டாதா சமையல் ? (போய்க்கொண்டே) இருக்கட்டும், இந்த முனியம்பயலை லேசிலே விடறதில்லே. இவனுலே எனக்குக் கெட்டபேரு.

சிவகாமு. (வந்துகொண்டே) காமாக்ஷி, இது என்ன அக்ரமம் இது ? கேள்வி முறைகிடையாதா இந்த வீட்டிலே ?

அம். என்ன அக்கா ? என்ன நடந்துடுத்து ?

சிவ. இல்லே, இவன் என்ன சமையல் காரனு, செல்லப்பிள்ளையா, கேக்கறேன்.

அம். யாரு, சங்கரனு ? என்ன பண்ணினுன் சங் கரன் ?

சிவ. இன்னும் என்ன பண்ணனும் ? ஏண்டா நடேசா, சம்பாதிக்கற காசெல்லாம் கரியாக்கறதுக்குத் தான் இந்தச் சமையல் காரனை வச்சிருக்கயா ?

எஜ. என்ன சிவகாமு, என்ன நடந்ததுன்னு சொல்லாமலே, கரி, உமின்னு சொன்னா என்ன புரியும் சொல்லு?

சிவ. நடந்ததா? காலம்பற நமக்கெல்லாம் கரித் தண்ணி மாதிரி, பாலுமில்லாமே மணமும் இல்லாமே குணமும் இல்லாமே என்னத்தையோ காப்பின்னு குடுத் தான். போனாப்போறதுன்னு பொறுத்திண்டிருந்தா, கள்ளிச்சொட்டு மாதிரிப் பாலே எடுத்து ஸ்பெஷல் கோகோ போட்டுச் சாப்பிட்றார் துரைவாள்!—அதுவும் பத்தரை மணிக்கு!

எஜ. இதுக்குத்தானா இவ்வளவு பிரமாதப் படுத் தினே? என்னமோ ஏதோன்னு பயந்து போயிட்டேன்.

சிவ. பிரமாதப் படுத்தினேனா? கோகோ விக்கற விலே யென்ன இந்த நாள்ளே சமையல்காரன் பத்து வேளை கோகோ போட்டுச் சாப்பிட்றதுக்குக் கட்டும்படி யாவா இருக்கு?

எஜ. அதெல்லாம் கணக்குப்பார்த்து முடியுமா, சிவ காமு? அவனும் சாப்பிட்டாத்தானே வேலை செய்ய முடியும்.

சிவ. சாப்பிட்றதை யாரு கையைப் பிடிக்கறா? அதுக்காக நொடிக்கு நூறுதரம் கோகோப் போட்டுச் சாப்பிடச் சொல்லிருக்கா? அப்படிஎன்ன சலுகை சமை யக்காரனுக்குன்னு கேக்கறேன்.

அம். அவனுக்குக் காப்பி சாப்பிட்டு வழக்கமில்லே யாம், அக்கா. கோகோ தான் வழக்கமாம்.

சிவ. கோகோதான் வழக்கமோ துரைக்கு? ஏன்னா, மகாராஜா பிள்ளை பாரு. அப்புறம் டிபனுக்கு பாதாம் ஹல்வாதான் வழக்கம்னு சொல்லுவன். இப்படி ஒவ்

வொரு வழக்கத்துக்கும் ஈடுகுடுக்கறதாலு, உருப்பட்டாப்பல தான் விடு.

எஜ. இதுக்கெல்லாம் கோவிச்சிண்டு என்ன பிரயோசனம் சிவகாமு?

சிவ. நான் கோவிச்சுக்கறதுதான் பெரிசாப் போச்சு உனக்கு. வீடு கொள்ளை போறது பெரிசாத் தோணலை.

அம். என்ன செய்யறது அக்கா? வீட்டுவேலை அவனாலே ஆகவேண்டியிருக்கே.

சிவ. என்னவேலை செஞ்சுட்ருன், பிரமாதவேலை? இவன் இல்லாட்டா வேலையே நின்னு போயிடுமோ? உனக்குச் செய்யசாமர்த்திய மில்லேன்னு தெரிஞ்சுண்டு தான் அவன் இவ்வளவு ராஜரீகம் நடத்தருன்.

எஜ. என்ன இது சிவகாமு? சமையக்காரனை வியாஜமா வச்சுண்டு உங்களுக்குள்ளே சண்டைவந்துடும் போலேருக்கே.

சிவ. எனக்கேன் வம்பு? கண்ணில உறுத்தித்து, சொன்னேன். இல்லாட்டா உங்கபாடு, உங்க சமையக்காரன்பாடு. (போகிருள்)

அம். (சற்றுப் பொறுத்து) நானும் பாத்திண்டிருக்கேன். அவர் வந்த மூணு நாளா இப்படித்தான். ஒண்ணுமாத்தி யொண்ணு அவர் கண்ணில உறுத்திண்டிருக்கு. "இவளுக்கென்ன பவிஷு சமையக் காரன் வச்சுக்க?"—அந்த ஆங்காரம்தான்.

எஜ. போரும் காமாக்ஷி, அவதான் தெரியாத்தனமா சொன்ன நீ அதுக்குமேலே இருக்கயே.

அம். பின்னே என்னன்னு கேக்கறேன். அஸூயையா ஒண்ணு மில்லையா?

சங். (வந்துகொண்டே) அம்மா, இனிமே இந்த வீட்டுவேலை நம்மால சரிப்படாது, சமையக் காரனுகிள்ளுக் கிஷரயா? இல்லை, தெரியாமத்தான் கேக்கறேன்.

எஜ. என்ன நடந்துது சங்கரா? என்ன நடந்துடுத்து?

சங். பின்னே என்ன அண்ணு? செய்யறதானு, ஒண்ணு நீங்க செய்யணும், இல்லேன்னு நான் செய்யணும். நீங்களும் செய்யறது, நானும் செய்யறதுன்னு அந்த வியவகாரம் நம்மகிட்டக்கட்டி வரா து.

அம். என்ன சொல்லறே சங்கரா? நான் இங்கே விட்டு நகரவே இல்லையே.

சங். நீங்கன்னு நீங்களா அம்மா? அத்தை,தயம் மான்னு;தான் வச்சுக்கு ங்கோளேன். சமையல் கட்டுக்கு அந்தண்டை நம்ம ராஜ்யம். என்ன அண்ணு நான் சொல்லறது?

எஜ. சரிதான் சங்கரா, யாரு இல்லேன்னு?

சங். என் ராஜ்யத்தில யாருதலையிட்டாலும் எனக்குக் கோவம்வரும் அம்மா. அத்தையம்மாளாயிருந்தா உங்களுக்கு! என்ன அண்ணு, நானும் வாயிலே பல்லு முளைச்ச நாள்ளேருந்து பதினைஞ்சுவருஷமா கரண்டிபிடிச்சு ஸர்விஸ் பாத்திருக்கேன். ஒரு கத்தரிக்காய்க் கூட்டுக்கு உப்புப்போடவா எனக்குத் தெரியாது? இல்லை, தெரியாமத்தான் கேக்கறேன். இதுக்குத் தான் அத்தையம்மா நம்ம வீட்டுக்கு வந்திருக்காங்களா!

சிவ. (பிரவேசித்து) பாத்தயோனே நடேசா, உங்க சமையக்காரன் யோக்யதையை? கூட்டுக்கு உப்புப் 'போட்டாச்சான்னு கேட்டது குத்தமாப்போச்சாம். விச்வரூபம் எடுக்கறுன்.

சங். அண்ணா, இந்தவீட்டு சர்விஸ் நமக்குப் போரும். கணக்குத் தீத்து என்னை அனுப்புங்கோ ஜல்தி.

எஜ. சிவகாமு, உப்போ புளியோ அவன் பாத்துக் கட்டுமே, உனக்கேன் வம்பு ?

சிவ. வாஸ்தவந்தாப்பா, வாஸ்தவம் தான். எனக்கேன் வம்பு ? நான் ஒரு மனுஷியாட்டாமா அவன் கிட்ட உப்புப் போட்டயான்னு கேட்டேன்பாரு தப்புத்தான், தப்புத்தான். கன்னத்தில போட்டுக்கட்டுமா ? (போகிறாள்)

எஜ. என்னசங்கரா, இந்த அல்ப விஷயத்துக்கெல்லாம்......

சங். உங்களுக்கு அல்ப விஷயமாத் தோணறது அண்ணா. தொழிலாளிக்குத்தெரியும் தொழிலோட அருமை. கூட்டுக்கு உப்புப்போடத் தெரியாதவனா பதினைஞ்சு வருஷமா சர்விஸ்லே இருக்கான் ? இல்லே, தெரியாமத்தான் கேக்கறேன். சங்கரன் கிட்ட பேச்சுன்னா பேச்சுத்தான். என்ன அண்ணா நான் சொல்லறது ?

அம். சரிதான் சங்கரா. சீக்கிரம் சமையல்கற வழியைப் பாரு, போ.

சங். அதுக்குச் சொல்லலே அம்மா, வேலையிலே மிஸ்டேக் இருந்தா சொல்லுங்கோ. கூட்டுக்கு உப்பைச் சொல்லவாராங்களே. பதினைஞ்சு வருஷ சர்விஸ்லே ஒருநா ஒரு குழம்புக்கு பெருங்காயம் ஊத்தறதையாவது மறந்திருப்பேனா ? என்ன அண்ணா நான் சொல்றது?- இல்லே, ஒரு பேச்சுக்குச் சொல்லவரேன்.

எஜ. இல்லேன்னு யாரு சொல்லறா சங்கரா? மணி பத்தே முக்கால்லாகறது. பதினொண்ணரைக்குள்ளேயா

வது சாப்பாட்டுக்கு ரெடிபண்ணு. சாப்பாட்டுக்குமேலே ஸ்நேகிதாளைப் பாத்துட்டு வரணும்.

சங். அதெல்லாம் இன்னம் அரைமணி டயத்தில் ரெடியாயிடும் சமையல். பருப்பு வெந்தாச்சானா சமையலாகறதா பிரமாதம்?—அடேடே, இன்னிக்கு அண்ணா எண்ணெய் தேச்சு ஸ்நானம் பண்ணினதை மறந்துட்டேனே. காரசாரமா ஒரு மிளகுரஸம் வைக்கறேன் பாருங்கோ. குடிச்சுப்பாத்துட்டு என்னு கேப்பேள்.

எஜ. மிளகுரஸமா? வேண்டாம் சங்கரா, வீணா சிரமப் படுத்திக்காதே.

சங். சிரமமா? யாருசொன்னது? எண்ணெய்தேச்சு ஸ்நானம் பண்ணிட்டு மிளகுரஸம் சாப்பிடாட்டா உடம்பு என்னத்துக்காகும்?—அண்ணா, சாப்பட்டப்புறம் எங்கே யாவது போகப்போறேளா என்ன?

எஜ- லீவுநாளா இருக்குபாரு. சிநேகிதா சில பேரைப் பாத்துட்டு வரணும்.

சங். லீவு நாளாவது கொஞ்சம் சிரமபரிகாரம் பண்ணிக்க வேண்டாமா அண்ணா? சாப்பாட்டுக்கு மேலே கொஞ்சம் விச்ராந்தியாத்தூங்கறதை விட்டுட்டு வீணா எதுக்கு அலையறேள்? இப்படித்தான் அம்மா, எஜமானர் உடம்பு க்ஷீணமாறதெல்லாம்,

எஜ. அடே சங்கரா. நீ சிக்கிரம் சமையல் பண்ணணும்ங்கறதுக்காகச் சொன்னேனப்பா.

சங். என்ன அண்ணா, வெளியிலே போறதாகச் சொன்னாத்தானா சிக்கிரமாச் சமையல் பண்ணுவேன்?—அடேடே அடுப்பிலே சாதம் கொதிக்கிறதை மறந்துட்டு இங்கே பேசிண்டு நிக்கறேனே. இதோ வந்துட்டேன்.

(போகிறான்)

அம். என்னமோ, எத்தனையோ பசங்க வந்துவந்து போயாச்சு. இவன் ஒருத்தன் தரிச்சு வேலை செய்யரு னேன்னு பார்த்தா, இவனையும் விரட்டப் பார்க்கறார், அக்கா.

எஜ. இந்தா பாரு, நீங்க ரெண்டு பேரும் பேசாம இருந்தா, நயமாப் பேசியே அவன்கிட்டே வேலை வாங்கு வேன்.

முனி. (வந்துகொண்டே) அம்மா, இன்னும் வேலை எதனாச்சியும் இருக்குதுங்களா?

அம். தோட்டத்துக்குத் தண்ணி ஊத்தியாச்சா? இன்னம் வேலை ஒண்ணுமில்லை. நீ வீட்டுக்குப் போற தானா போயிட்டு மத்தியானம் மூணு மணிக்கு வந்துடு.

சங். (பிரவேசித்து) முனியனை அதுக்குள்ளேயுமா வீட்டுக்குப் போகச் சொல்றேள்? அந்தவிறகெல்லாம் வெய்யில்லே காயப்போடணும். ஏண்டா, என்ன விற குடா வாங்கிண்டு வந்திருக்கே, ஒரே பச்சைமரம்!

அம். ஆமாம் முனியா, மறந்தே போயிட்டேன், விறகை எடுத்து வெய்யில்லே காயப்போட்டுட்டுப்போ.

முனி. செய்றேனுங்க—அம்மா, பசியாருக்குதுங்க. எதுனாச்சும் சாப்பிட்டாத்தான் தெம்பா இருக்கும்.

சங். அதை அப்பவே கேட்டுத் தொலைக்கறது தானே. பட்டக சாலைக்கு வா ஜல்தி. சாப்பிட்டுட்டு வேலையை ஒழுங்கா பார்க்கணும்.

(போகிறான்)

(சற்றுப்பொறுத்து வந்து கொண்டே) அடேமுனியா, பழைய சாதம் ஒண்ணும் இல்லையேடா. என்ன பண்ண றது?

முனி. பசி தலையைச் சுத்துதுங்க. எதனாச்சும் குடுப்பீங்கன்னு பாத்தா......

சங். இந்தா, இந்தக் காப்பியைச் சாப்பிட்டுட்டு விறகை எடுத்துப்போட ஆரம்பி. அதுக்குள்ளேயும்...

முனி. காப்பியா எசமான்? நீங்க நல்லாருக்கணும். ஆனா என் பசிக்கு இது எப்படிப்போதும்?

சங். அதுதான் சொல்ல வரத்துக்குள்ளே நீ என்னடா? இதோ அஞ்சு நிமிஷத்தில உப்புமா தயாராயிடும், சாப்பிட்லாம்.

முனி. என்னங்க, எனக்காகவா உப்புமா செய்யப் போறீங்க? அம்மாவுக்குத் தெரிஞ்சா......

சங். அம்மாவுக்குத் தெரிஞ்சா பயமோ? அடே, இந்த சமையல்காரச்சிங்கானே லேசுன்னு நினேச்சுடாதே' அவன் ராஜ்யத்தில் அவன் வச்சுது தான் சட்டம். ஆமாம்.

[தாமதம்]

சிவ. (வந்துகொண்டே) காமாக்ஷி, காமாக்ஷி! அக்ரமத்தைப் பாத்தயோனே? நல்லயோக்யதை, சமையல்காரன் யோக்யதை.

எஜ. என்ன சிவகாமு, மறுபடியும்?

சிவ. நமக்கெல்லாம் காலம்பற ஒருடிபனுக்கு வழியைக்காணும். வேலேக்காரனுக்கு சுட்ச்சுட உப்புமாப் பண்ணிக்குடுத்தாகறது! காப்பி வேறே! ஒழுங்காயிருக் கோல்லியோ சேதி!

அம். பழயசாதம் போட்டறேன்னு தானே அழைச்சிண்டு போனன்!

சிவ. கோக்கோ சாப்பிட்ற துரையோனே? உப்புமா பழய சாதம் மாதிரி இளப்பமா இருக்கு போலேருக்கு.

எஜ. முனியன் பச்சை விறகு வாங்கிண்டு வந்தான்னு அவன் மேலே கோவமா இருக்கான். அவனுக்கு உப்புமா பண்ணிக் குடுக்கறதாவது?

சிவ. அப்போ நான் சொல்லறது பொய், இல்லையா ?

எஜ. நீ கொஞ்சம் பேசாத இரு. சங்கரனே வரான். நான் கேக்கறேன்.-ஏண்டா சங்கரா, முனியனுக்குப் பழய சாதம் குடுத்தாச்சா ?

சங். நம்ம வீட்டில பழய சாதம் ஏது அண்ணா? ஒவ்வொரு மணி அரிசியும் எண்ணின்னா வடிக்கறேன்! பய பாவம், பசிச்சுதுன்னு சொன்னானா? இரக்கமா இருந்துது. பழயரவை கொஞ்சம் இருந்ததை எடுத்து சுட்ச்சுட உப்புமாக் கிளறிக் குடுந்தேன்,- போகட்டும், நம்ம பேலரச் சொல்லிண்டு சாப்பிட்டும்னு.

எஜ. உப்புமாவும் காப்பியுமா?

சங். பில்டர்லே இருந்த காப்பிச்சக்கையில் தண்ணி வூத்திக்குடுத்தேன்.-ஏன், நான் செஞ்சது குத்தமா? குத்தம்னா சொல்லிடுங்கோ அண்ணா.

எஜ. குத்தத்துக்குச் சொல்லவரலே, சங்கரா. வேலைக்காரனுக்கு இதெல்லாம் வழக்கப்படுத்தினா......

சங். அப்போ, வழக்கமா அவனுக்கு உப்புமாவும் காப்பியும் குடுக்கறேன்னு சொல்றேளா? அவ்வளவு தூரம் பொறுப்புத் தெரியாதவனா அண்ணா?

சிவ. ஆயிரம் பொறுப்பைக் கண்டேட நீ.

ஜெ. சிவகாமு, நீ பேசாம இரு.

சங். அண்ணா,அந்த ரவை வண்டரிச்சிண்டிருந்தா இருப்தி. வேலைக்காரன் வயத்துப் பசிக்குக் குடுத்தா நஷ்டம். அப்படித்தானே? பில்டர் காப்பிச் சக்கையைக்

கண்ணை முடிண்டு தூரப்போட்டா சம்மதம். அதிலே கொஞ்சம் தண்ணி ஊத்தி அவன் களைப்புத்திரக் குடுத்தா குறைஞ்சு போயிடும். இல்லையா, அண்ணா?

எஜ. சங்கரா, நான் ஒண்ணும் சொல்லாதே இருக்கிறபோதே...

சங். சரி அண்ணா, இந்த சுதந்திரம்கூட இல்லேன்னா வேண்டாம். இந்தத்தப்புக்குப் பரிகாரமா நான் மூணு நாள் காப்பியும் சாப்பிடலை, டிபனும் சாப்பிடலை. போறுமா?

எஜ. சங்கரா, நான் சொல்றதைக் கொஞ்சம் கேட்டுட்டுப்போ!

சங். [தூர இருந்து] எனக்கு அடுப்புக்காரியம் காத்துப் போறது அண்ணா.

சிவ. என்ன கர்வமா பேசிட்டுப் போறான் பார்த்தாயா நடேசா.

அம். இதெல்லாம் கர்வமா அக்கா? வீட்டோடு வீடா அவ்வளவு நெருங்கிப் பழகிட்டான்.

எஜ. அவன் சொல்றதும் வாஸ்தவந்தானே சிவகாமு?

சிவ. வாஸ்தவம்தான். வாஸ்தவமில்லாம என்ன? நான் சொல்றதுதான் அபாண்டம்.

சங். [வந்துகொண்டே] அப்பா, தாங்கமுடியலையே ஸ் ஸ்...ஆ...

எஜ. என்ன சங்கரா, என்ன உடம்புக்கு?

சங். ஆ.....உடம்போட நடுக்கறது அண்ணா. குளிர் ஜுரம் மாதிரி வந்திருக்கு. ஸ் ஸ்.....ஆ.....

முனி. ஐயா உடம்பு நெருப்பாக் கொதிக்குதுங்க'

சங். அண்ணா, நான் பிழைக்க மாட்டேன். எங்கம் மாவுக்கு தந்தி குடுத்துடுங்கோ. ஐயோ அப்பா...... உடம்பே பிடிபடலையே.

எஜ. முனியா, ஐயாவுக்குப் பாய் தலைகாணி எடுத் துப்போடு. சங்கரா, கொஞ்சநேரம் படுத்துக்கோ, சரி யாப் போயிடும்.

சங். ஜன்னி மாதிரிவந்திருக்கு அண்ணா. டாக் டரை வரச் சொல்லுங்களேன். எங்கம்மாவை ஒரு தரம் பாத்தா இருப்பியர் செத்துப்போவேன், அண்ணா

அம். என்ன சங்கரா, இப்படி அசடு மாதிரி புலம் பறே?

சங். அடுப்பில சாதம் அடிப்பிடிச்சுப் போயிடும் அம்மா. கொஞ்சம் பாருங்கோ. குழம்புக்கு வெங்கல உரு ளியிலே புளி கரைச்சு வச்சேன்,கைச்சுப்போகாம இருக்க ணும்...அப்பா...என்னாலே தாங்க முடியலை போங்கோ.

எஜ. சங்கரா. அலட்டிக்காமே படுத்திரு. குளிர் ஜுரம்தானே. அரைமணியிலே சரியாய்ப்போயிடும்!

சங். எனக்கென்னமோ பிழைக்க மாட்டேன்னு தோணறது அண்ணா.

சிவ. நல்ல சமையக்காரன், நல்லசிராட்டல். சகிக் கலை எனக்கு. [போய்க்கொண்டே] காமாக்ஷி, சமையக் கட்டுக்கு வா. என்ன பண்ணிருக்கானோ, என்ன பண்ண லையோ.

சங். அம்மா, அண்ணாவுக்கு மிளகு ரஸம் மறக்காம பண்ணிடுங்கோ. ஸ் ஸ்...அப்பா...

[தாமதம்]

எஜ. சங்கரா, உடம்பு எப்படி இருக்கு.

சங். [ஆயாசத்துடன்] என்ன, அண்ணாவா? நான் எங்கே இருக்கேன்? நீங்க இன்னும் சாப்பிடலையா?

எஜ. இதோ சாப்பிட்டுத்தான் போறேன்.

சிவ. [தூர இருந்து] வாயேன் நடேசா. அவன் தான் என்னமோ மாய்மாலம் பண்ணினுன்னு நீ அதுக்குமேலே

சங். அண்ணு, எங்கம்மாவுக்குத் தந்தி கொடுத் தாச்சா?

எஜ. அதெல்லாம் கவலைப்படாதே.

சிவ. வாயேன், நடேசா.

எஜ. [போய்க்கொண்டே] இதோ வந்தாச்சு. [உள்ளே போகிருர்] என்ன காமாக்ஷி, ஜுரக்காரி மாதிரி கண்ணும் முகமும் சிவந்து போயிருக்கே!

அம். இந்த அடுப்புப் புகையை யாராலே சகிக்க முடியறது?

சிவ' ஆனலும் காமாக்ஷி, கடுகு எங்கேருக்கு, மிளகு எங்கேருக்குன்னு கூடத் தெரியாம நீ குடித்தனம் பண்ண றது கட்டோட பிடிக்கலே எனக்கு.

அம். என்ன அக்கா செய்யறது? கையாலாகாத வளாத்தான் தெய்வம் வச்சிருக்கே என்னை.

எஜ. இதென்ன கூட்டு ஒரே உப்பு இப்படி?

அம். கூட்டுலே உப்பா? சரியாத்தானே போட் டேன்.

சிவ. நீயும் போட்டியா காமாக்ஷி? நீ போடலையாக் கும்னு நினைச்சு நானும் போட்டேனே.

அம். சரியாப்போச்சு.

எஜ. பரவாயில்லை. கறியிலே உப்பே இல்லாம இருக் கறதுக்கு...

சிவ. என்ன, கறியிலே உப்பில்லையா?—காமாக்ஷி, கறிக்கு உப்புப் போடலை நீ?

அம். நீங்க போட்டாச்சாக்கும்னு நினைச்சுன்னு நான் போடாம இருந்தேன்.

சிவ. லக்ஷணம் தான்.

எஜ. இதென்ன சாதமா ஐவ்வா?

சிவ. குழைஞ்சு போயிருக்கா என்ன?

அம். பழக்க மில்லையோனு, அரிசி நிதானம் தெரியலே.

சிவ. சமையக்காரன் இருந்தா அதுக்காக இப்படி அடுப்புங் கிழே போகாமலே இருப்பளா ஒருத்தி?

அம். எனக்குத்தான் தெரியலே. நீங்க பார்த்து வடிக்கறது தானே.

சிவ. ஓகோ, நான் உங்க வீட்டுச் சமையக்காரியாப் போயிட்டேனே?

எஜ. சரி சரி, அதுக்காக நீங்க சண்டை போட்டுக்க ஆரம்பிக்கவேண்டாம.—அவன் எனனமோ மிளகு ரஸம்னு சொன்னுனே, அது இருந்தா ஊத்து. அதும் பலம் கொண்டாவது...

அம். மிளகு ஜீரகம் தேடித்தேடிப் பாத்தும் ஒரு இடத்திலேயும் இடைக்கலே,

முனி. [தூர இருந்து] அம்மா, குழந்தைங்கபள்ளிக் கூடத்திலிருந்து வந்திருக்குங்க.

அம். அக்கா, நீங்கள தான் அதுகளைக் கவனிச்சு சாதம் போடணும்.

சிவ. நான்தானே? உன் குழந்தைக படுத்தற ரகளைக்கு என்னுலே ஈடுகுடுக்க முடியாது.

அம். எங்கிட்ட ஒரேயடியா நிர்த்தூளிப் படுத்தும் அக்கா.

எஜ. சங்கரன் தினமும் அதுகளுக்குச் சாதம் போட்டு அனுப்பத்தனே செய்யருன். அவன வாயிலே ருந்து குழந்தைகளைப்பத்தி ஒரு புகாரையும் காணுமே.

அம். அதுதான், அவன் உழைச்சிண்டிருக்கற வரைக்கும் அவன் அருமை யாருக்குத் தெரியறது?

எஜ. குழம்புக்கென்ன பெருங்காயமே ஊத்தலையா. மணமே இல்லையே!

மூனி. [தூர இருந்து] எசமான், யாரோ விருந்தாளிங்க வந்து இறங்கறாங்க.

எஜ. [தணிவாக] விருந்தாளியா? யாரது?

அம். ஐயையோ, மாமா, குழந்தை குட்டிகளோட வந்து இறங்கறார்.

சிவ. இன்னமே இந்தப் பரிவாரத்திற்கு வேறே சமையல் ஆக்கணுமோ? என்னால் ஆகாது காமாக்ஷி.

அம். இந்த சமயம் பார்த்தா சங்கரா, ஏன் எழுந்திருந்துவரே. உடம்போட? சங்... [ஒடுக்கத்துடன்] பரவா யில்லேம்மா. இத்தனை பேருக்கு நீங்க எப்படி சமையல் பண்ண முடியும். நான் பாத்துக்கறேன், நீங்க போங்கோ.

எஜ. சங்கரா, அடுத்த மாசத்திலேருந்து உனக்குச் சம்பளம் உசத்தித் தரேன்.

சங். எனக்குச் சம்பளம் பெரிசில்லை அண்ணா உங்க மனசு தான் பெரிசு.

எஜ. [போய்க்கொண்டே] வாங்கோ மாமா, வாங்கோ, வாங்கோ.

அம். உடம்புஜுரமா இருக்குன்னுபடுத்திண்டயே சங்கரா, அதோட...

சங். பரவா யில்லேம்மா. அத்தையம்மா என்ன வேணும்னாலும் சொல்லிக்கட்டும். அதுக்காக உங்களை தவிக்க விடமாட்டேன.

அம். உன் அருமை அத்தையம்மாளுக்கு எங்கே தெரியும் சங்கரா? (போய்க்கொண்டே) வாங்கோ மாமா வாங்கோ மாமி

சங். (போய்க் கொண்டே) ஸ் ஸ்...அப்பா தாங்க முடியலையே...

2

பால்காரன்

மருதை. என்னம்மா, இந்தப்பாலு தண்ணிங்க றீங்களே, அடுக்குமா? நான் என்ன கைப்பாலைக்குடுத்து மோசம் பண்றேனு, ஒத்தொத்தனைப்போலே? கண்ணெ திரே கரவைப்பசுவைக் கட்டிக்கறந்து குடுக்கறேனே; இத்தைப்போய்த் தண்ணின்னு சொன்னு அப்புறம் மழைபெய்யாதுங்க.

அம்மா. ஆமாமாம், நீ பால்லே கலக்கற தண்ணி யைப் பார்க்கறபோது மழைபெய்யாம இருந்தாலாவது தேவலைன்னுதோணுது.

மருதை. மறுபடியும் பாத்திங்களா? நீங்கசொல் றதே மெய்யாப்போகுது, நான் சொல்றது பொய்யா? நான் என்ன செப்பிடுவித்தை கத்திருக்கேனு, உங்க கண்ணெதிரே பால் பாத்திரத்தில் தண்ணிவரவுளைக் கறதுக்கு? ஒரு நாளைப்போல அம்மான்னு குரல்குடுத்து கண்காண பாத்திரத்தைக்கவுத்துட்றேனே, அப்படியும் அதிலே தண்ணிவரும்னு - மாயவித்தையா கத்திருக் கேன், ஏம்மா?

அம். மாயவித்தையோ, மந்திரவித்தையோ எனக் குத் தெரியாது. பால்தண்ணியா இருக்கு, அவ்வளவு தான் தெரியும்.

எஜமான். (வந்துகொண்டே) என்ன, தண்ணிப் பால் கொண்டுவந்துட்டானு மறுபடியும்? ஏண்டா மருதை......

மரு. தண்ணிப்பால் கொண்டுவரது எங்கேங்க? தண்ணிப்பால் கறந்திருக்கேனும். எப்படி இருக்கு அம்மா சொல்ற கதை? இது மாட்டுக்குத்தமனு சொல்றதா, மனுசாகுத்தம்னு சொல்றதா? இந்தப்பால் தண்ணிறன்னு அப்பறம் நல்லபாலுக்கு எங்கே போறதுங்க?

எஜ. பால் தண்ணியில்லாம என்ன, ஏண்டா? கரந்தபால் இப்படியா இருக்கும்?

மரு. என்னங்க இந்தப்பாலு கறக்காம மானத்திலேருந்து மழையாப்பெய்ய வச்சேனு? சொல்றதிலேயும் நாயம் வேணுங்க. நீங்களே பாருங்க, கள்ளிச்சொட்டுன்னு கள்ளிச்சொட்டா இருக்குதுங்களே,...கிளே ஊத்தினு தோசை மாவு மாதிரி இந்தண்டை அந்தண்டை நகருதா பாத்திங்களா?

அம்மா. இன்னும் கொஞ்சம் நுரையை எடுத்துப் போடு, பாலு கெட்டின்னு சொல்லிக்கலாம்.

எஜ. ஏண்டா இப்படி வம்பு பண்ணறே மருதை? வாங்கற விலையையும் வாங்கிண்டு குடுக்கிற பால் இவ்வளவு மோசமாகவா குடுக்கறது?

மரு. விலையைப்போய்ச் சொல்லறேங்களே பிரமாதமா. விலைகுடுத்தாலும் பாலு ஏதுங்க இப்போ. நானு பளய விசுவாசத்துக்காக ஊத்திவரேனே ஒளிய பணத்துக்காக இல்லிங்க. பணமா பெரிசு? பணம் இன்னிக்கு வரும், நாளைக்குப்போகும். மருதையை அப்படி நினைக்காதிங்க.

அம. ஆமாமாம், பணம்னு சமுத்திரத்திலே போட்டடமாட்டயா நீ? வருஷ ஆரம்பத்தில் ரூபாய்க்கு நாலு படிபால் ஊத்திண்டிருந்தவன் எட்டு மாசத்திலே ரூபாய்க்கு ஒண்ணரைப்படி ஆக்கினதிலே குறைச்சலைக்

கர்னும். பணம் பெரிசில்லையாம். பெரிய தியாகிதான் போ.

மரு. அம்மா, உங்களுக்குத் தெரியாதது இல்லிங்க, மாடுன்னு இருந்தா அதுக்குப் பருத்திக்கொட்டை புண்ணாக்குவைக்காம பட்டினிபோட்டா பாலு எங்கே ருந்து குடுக்குங்க. பால்வியாபாரம் பண்ணி சீமானுப் போயிட்டேன்னு நினைச்சிங்களா. வாங்கறகாசெல்லாம் இந்தக் காமதேனு வவுத்துக்குத்தான் போவுதுங்க.

அம். நிஜம்போல சொல்றதைப்பாருங்களேன்.

மருதை. நீங்களே சொல்லுங்க எசமான். பாலு ரூபாய்க்கு ஒரு படியானது தான் அம்மாவுக்குத் தெரியுதே ஒளிய மாட்டுத் தீவனம் என்ன விலைக்கு விக்குதுன்னு கொஞ்சமாவது ஓச்னை பண்றுங்களா? விலையைச் சொல்லறேனே, விலை குடுத்தா வேண்டிய புண்ணாக்கும பருத்திக் கொட்டையும் கிடைச்சுதுன்னு இருந்தாலாவது எவ்வளவோ நிம்மதியா யிருப்பேனுங்க. பணம் பெரிசில்லிங்க. காமதேனு வயறுவாடாமே இருக்கறதுதான் பெரிசுங்க.

அம். என்னமோ கதை அளந்திண்டே தண்ணிப் பாலை ஊத்து. உன் காலக்ஷேபம் எப்படி நடக்கறது பின்னே?

மரு. அம்மா, இவ்வளவுக்கும் மேலே நீங்க இந்தப் பாலைத் தண்ணின்னு சொன்னு...மனசு ரொம்பச்சங் கடப் படுதுங்க. என் காமதேனுவை உங்களுக்குன்னே தத்தம் பணணி வச்சிருக்கேனே, அது கறக்கற பாலு உங்களுக்குனனே தீநதுபோனப்பறமும் இப்படிச் சொ்னு என்ன செய்யறது சொல்லுங்க.

அம். ஆமாம், முக்கால்படி வைத்தினையே, அவ்வளவுதானு பாலு?

மரு. பதிவு பால் அதுதானுங்களே.

அம். பதிவு பால் போருது. இன்னிக்கு கூட அரைப்படி வேணும். விருந்தாளி வராங்க.

மரு. விருந்தாளி வராங்களா? அத்தை முன்னு லேயே சொல்றதுக்கென்னங்க? இப்பசொன்னு என்ன பண்றது?

அம். ஏன், முன்னுலேயே சொன்னு பால்சொம்பில் இன்னும் கொஞ்சம் தண்ணி கொண்டு வந்திருப்பயோ கையோடே?

மரு. அம்மா, அம்மா, பாத்திங்களா! எசமான், நான் பாத்தாச்சு, தர்மநியாயத்துக்குப் பயப்படறவனுக்கு இது காலமில்லிங்க. ஒத்தொத்தனைப்போலே சொம்புத் தண்ணிகொண்டு வந்து மடியை அலம்பறதா போக்குக்காட்டினு அப்போ என்னதான் சொல்லுவிங்களோ!

அம். நீ ரொம்ப யோக்யன்னு மனசிலே எண்ணமோ?

மரு. யோக்யதைக்கு என்ன குறைச்சலுங்க? அடித்தண்ணிவைக்காதபாலு அவிசேகத்துக்கு உதவாதுன்னு சொல்லுவாங்க...நான் அதைக்கூட லச்சியம் பண்ணும...

அம். பால்காரன் சாஸ்திரமோ இது?

எஜ. அதென்னப்பா புதுசாஸ்திரம்? அடித் தண்ணி வைக்காத பால் அபிஷேகத்துக்கு உதவாதா?

மரு. ஆமாங்க. நான்சொல்றது பொய்யானு நாலு பேரைக் கேட்டுப்பாருங்க. வெறும்பித்தளேயிலே பால் பட்றதே பாவம்னு சொல்லுவாங்க பெரியவங்க. பொய் யில்லிங்க.

அம். அளக்காதேடா. பால்லே தண்ணி விட்றதுக் குன்னு ஏற்படுத்திண்ட சாஸ்திரமோ் இது.

மரு. எதுக்குச் சொல்லவந்தேன்னு...அப்படியெல் லாம் சாஸ்திரம் இருந்துங்கூட, நான் பித்தளேச் செம் பைத் துணிபோட்டுத் துடைச்சிட்டில்லே கறக்கறேன் பாலு.அப்படியாவது உங்கமனசு திருப்தி யடையும்னு பாத்தா...

அம். அதுகிடக்கு, அதிகப்படி பாலுக்கு என்ன சொல்லறே?

மரு. அதான் சொன்னேனுங்களே, திடீர்னு அதி கப்படி பால்வேணும்னு என்ன செய்யறதுங்க? மானத் திலேருந்து கரக்கறதுங்களா?

எஜ. அடே, விருந்தாளி வராங்கன்னு சொன்னுங் களே அம்மா.

மரு. நான் இல்லேன்னு சொல்லலேயே. உங்களுக் குத் தெரியாதது இல்லிங்க. நான் என்ன பால் பண்ணே வச்சு நடத்தறேனு? இருக்கறசெல்லாம் இது ஒரு காம தேனுதானுங்க. ஆச்சு. இதுவும் இன்னும் எத்தனை நாள் பால் குடுக்கப் போவுதோ?

அம். எனக்கு அதிகப்படி பால் வேணுமே என்ன செய்யறது. ஒரு சமயத்துக்கு அதிகப்படி கொண்டு வரலேன்னு என்ன பதிவு பால்காரன் வேண்டியிருக்கு?

மரு. இல்லேன்னு சொல்லலிங்க. வீட்டு வாசல்லே மாட்டைக் கட்டிக்கரக்கற போதே தண்ணிப்

பால்ங்கறேங்க. கைப்பால் கொண்டு வந்தா என்னதான சொல்லுவிங்களோ ?

அம்மா. கைப்பால்னு தண்ணி விட்டாம கொண்டு வரப்படாதா ; நீங்க இப்படி அக்ரமம் பண்ணினு சொல்லாம என்ன செய்யறது ?

மரு. சொல்லுங்க, யாரு வேண்டாங்கருங்க ? நான் கைப்பால் வியாபாரம் பண்ணினுத்தானே அந்த வம்பு ! ஒத்தொத்தனைப்போலே தெருக்குளாயைத் திருப்பி விட்டு கைப்பால்னு மோசம் பண்றுங்களே, அந்தக்காசு நமக்குவேண்டாமுங்க. மாட்டுத் திவனத்துக்குக் கட்டினுப்போதும் நமக்கு.

அம். அந்தக் கதையெல்லாம் இருக்கட்டும். மணி ஏழரை யாரது. எட்டடிக்கறதுக்குள்ளே இன்னும் அரைப்படி பால் கொண்டு வந்துட்டு மறுகாரியம் பாரு

மருதை. உத்தரவு போடறது லேசுங்க. நான் இப்போ பாலுக்கு எங்கே போறது? உங்களுக்குத் தெரியாததில்லிங்க. பெரிய பங்களா வீட்டுக் கல்யாணம் ஊர் அமளிப்படுது. போதாதுக்கு கோவில் கும்பாவிஷேசம் வேறே. ஊர்லே சொட்டுப் பால்னு சொட்டுப் பால் கிடையாது. தெருக்குளாயெல்லாம் திறந்தது திறந்தபடியே இருக்குதுங்க.

எஜ. ஏ மருதை, யார்ட்டேப்பா கதையளக்கறே. நீ நினேச்சா பாலா கிடைக்காது ஊரிலே !

மரு. அதென்னமோ பகவான் புண்யத்திலே அந்த ஒரு ராசி இருக்குதுங்க நம்ப குடும்பதுக்கு. எங்க தாத்தா முத்துக்கோனர் இருந்தாரு தெரியுங்களா. அவர் வாயசக்கினு ஊர்லே பாலாறு நெய்யாறு ஓட ஆரம்பிக்குங்க. ஒரு சமயம் பாருங்க......

அம். அப்போ என்ன, எட்டு மணிக்குள்ளே கொண்டு வரயா பாலு.

மரு. கொண்டு வரதைப்பத்தி இல்லிங்க, நீங்க உத்தரவு போட்டா புலிப்பாலுகூடக் கொண்டுவா மருதை தயாரு. ஆனு தண்ணியா இருக்குன்னு சொன்னு என்ன பண்றதுங்க ?

எஜ. புலிப்பாலே முன்னேப்பின்னே பாத்திருந் தான்னு தண்ணி, கெட்டின்னு சொல்றதுக்கு.

அம். புலிப்பாலே வச்சுண்டு நான் என்ன பண் றது ?

மரு. என்னங்க, ஒரு பேச்சுக்குச்சொல்ல வந்தா அதுக்குள்ளேயும் பயப்படறீங்களே. பசும்பாலு தண்ணி யாக் கொண்டுவந்தாலும் கொண்டு வருவேனே ஒழிய புலிப்பாலு கொண்டு வருவேனு ? அப்போ... அரைப்படி பாலா வேணுங்க? பாக்கறேனுங்க. ஆனு ஒண்ணு சொல்லிட்டேன. சொட்டுச்சொட்டுப் பாலா பத்துப் பேர்கிட்ட சேத்தாத்தான் அரைப்படி கிடைக்குங்க, இந்த நாளிலே, தண்ணி சேத்தேன்னு மட்டும் குறை சொல்லாதீங்க.

அம். தாராளமாத தண்ணி கலக்கறதுக்கு இப் பவே அச்சாரம் போடறயாக்கும்.

மரு. அப்படியில்லிங்க. வாங்கினபாலே அப்படியே கொண்டுவரேனுங்க. ஆனு அவங்க குளாயைத திருப்பி விட்டிருந்தா நான் என்ன பண்றது. நீங்களே சொல் லுங்க. உங்களுக்குத் தெரியாததில்லே.

அம். சரி, சரி. எத்தையேனும் கொண்டுவா ஜல்தி, உன் காட்டில் மழைதான் இன்னிக்கு.

மரு. எசமான், தொந்தரவு பண்றேன்னு நினைக்காதிங்க; உங்க தயவைத்தான் நம்பியிருககேன்.

எஜ. என்ன திடீர்னு என் தயவுக்கு என்ன வந்தது!

மரு. ஒரு அஞ்சு ரூபா குடுத்தா, ரொம்ப உபகாரமாயிருக்குங்க. கையில தம்படி இல்லாம ரொம்ப கஷ்டப்படறேன்,

எஜ. என்னப்பா முதல் தேதிதான் கணக்குத் தீர்த்து இருபத்தஞ்சு ரூபா எண்ணிக் குடுத்திருக்கேன். தேதி பத்தாகலே, அதுக்குள்ளேயும் என்ன?

மரு. அத்தையேன் கேக்கறீங்க போங்க. உங்கிட்ட வாங்கின பணம் ரெண்டு நாள் செலவுக்குக்கூடப் போதலிங்க. மாட்டுத்தீவனத்துக்கே எல்லாம் சரியாய்ப் போகுது. கைமாத்தாக் கேக்கறேனுங்க. இல்லேன்னு சொல்லாதிங்க. வேறே எதுக்கும் இல்லே, வைக்கோல் மலிவா வருது இப்பத்தான். இத்தைவிட்டா அப்புறம்...

எஜ. தெரியும், தெரியும் கைப்பணத்தையெல்லாம் தாறுமாறாகச் செலவு பண்றது. வைக்கோலுக்குப் பணம் இல்லையாம். சொன்னு நம்பிடுவேன்னு நினைக்கறயா?

மரு. நம்பினு நம்புங்க, நம்பாட்டிப் போங்க. நான் சொல்றது நிசந்தானுங்க.

அம். அவனுக்கு இப்படிக் குடுத்து வழக்கம் பண்ணாதேங்கோ. அதெல்லாம் சரிப்படாது.

மரு. என்னங்க, எடுத்துக்கிட்டு ஓடிடுவேன்னு பயப்படுறீங்களா? அப்படியென்ன வெறுமே கேக்கறேனு. சொன்ன வார்த்தை பிசகறாட்டான் இந்த

மருதை. என்ன எசமான், உத்தரவு பண்ணுங்க. இந்த வைக்கோலேவிட்டா அப்புறம்....

எஜ. இப்போ குடுக்கறது சரி. அப்பறம் இதுவே வழக்கமாயிடப் போறது.

மரு. அப்படி ஆவுங்களா? உங்க ஆசிர்வாதத்திலே ஒரு குறைவும் இல்லிங்க இந்த மருதைக்கு. காலம்பர வைக்கோலுக்குப் பணத்தைப் பாத்தேன். தம்படியில்லே. சரி, ஐயா இருக்காரு. என்ன கவலேன்னு ஓடி வந்தேன்.

எஜ. இந்தா. பால்க் கணக்குக்கும் இதுக்கும் சம்பந்தமில்லே.

மரு. அப்படி வச்சுப்பேனா? நீங்க நல்லாருக்கணுங்க.

அம். நல்லாருக்கணும்னு வாயால சொல்றயே ஒழிய நல்ல பாலாக் குடுக்கறதுக்கு வழியைக் காணும்.

மரு. நல்ல பாலுன்னதும் ஞாபகம் வருதுங்க. நம்ம காமதேனு இன்னும் மிஞ்சினா ரெண்டு மாசத்துக்கு மேலே பால் குடுக்காது போலேருக்குதுங்களே. என்ன செய்யறது?

அம். என்ன செய்யறதென்ன, வேறே மாட்டைக் கொண்டுவந்து கறக்கிறது.

மரு. வேறே மாடு விளையுதுங்களா? பணம் போட்டு வாங்கினாத்தானுங்களே வேறே மாடு!

எஜ. இந்த ஒரு மாடுதான் வச்சிருக்கயோ, ஏண்டா!

மரு. பின்னே எங்க தாத்தா நாளைப்போலே வீட்டிலே இருவது மாடு நிக்குதுன்னு நினைச்சிங்களா? அந்தக் காலம் மலையேறிப் போச்சுங்க. அப்படியிருந்தா மருதையைக் கையில் பிடிக்க முடியுமா! இப்படியா

அளுக்குத்துணி கட்டியிருப்பேன்? சாயவேட்டி கண்ணைப் பறிக்காதா!

எஜ. போன வருஷம் மயிலைப் பசு ஒண்ணு வச்சிருந்தயே, அது எங்கே போச்சு?

மரு: அதுவா! அதை வித்துத் தொலைச்சுட்டேனுங்க. கரவை மாட்டை வச்சுச் சமாளிக்கறதே கஷ்டமாயிருக்கே இந்த நாள்ளே. கறக்காத பசுவைக் காப்பாத்தறது லேசா?

எஜ. அப்போ இந்தச் செவலைப் பசுவையும் வித்துட்ப் போறயா, ஏண்டா?

மரு. இந்தக் காமதேனுவையா! பேசுப்படுமா? என்ன ராசியுள்ள மாடு! முதுகிலே இந்தச் சுளி இருக்குதுங்களே. இது ரொம்ப அதிர்ஷ்டங்க. இது தெரிஞ்சு ஒத்தொத்தன் ஐநூத்தம்பது ரூபாவரை கேட்டுட்டான். ஆனு மருதையா அசையறவன்!

எஜ. ஆமாம். இந்த மாட்டைக் குடுத்துடாதே. போனு வராது.

அம். மகாலக்ஷ்மி மாதிரி இருக்கு மருதை. சிரமத்தைப் பாக்காம காப்பாத்தனும்.

மரு. அது நீங்க சொல்லணுங்களா? எனக்கே தெரியாதா. ஆனு ரெண்டு மாசம் பொறுத்து வேறே மாடு வாங்கறதை நினைச்சாத்தான் மலைப்பாயிருக்குதுங்க. நானூறு நானூத்தம்பது ரூபாய்க்குக் குறைஞ்சு நல்ல மாடு ஏதுங்க இப்போ?

எஜ. அது வாஸ்தவந்தான்.

மரு. வாஸ்தவம்னு சொல்றது பெரிசில்லிங்க. உங்களைத்தான் நம்பியிருக்கேன்.

எஜ. சரியாய்ப்போச்சு. மறுபடியும் என்மேலே நம் பிக்கை விழுந்துடுத்தா. ஆபத்துதான்.

மரு. ஒருநூத்தம்பது ரூபாய் குறையுதுங்க. நான் எங்கே போவேன், நீங்களே சொல்லுங்க. அப்படிச் சிமானுயிருந்தா இந்த மாதிரி ஏன்......

அம். நூத்தம்பதும் இருநூத்தம்பதும் உனக்குக் குடுக்கறதுக்கு நீ அண்ணுவியா? அதுக்கு நாங்களே மாடு வச்சுண்டுடலாமே.

மரு. உங்க மாடுதானுங்களே அது. உங்களுக்கு வேணுங்கற பாலு அதுதானே குடுக்கப்போவுது! எச மான், உங்க ஒத்தாசையைத் தான் நம்பியிருக்கேன்.

எஜ. ஏண்டா, இப்படியாவது நீ பால் வியாபாரம் பண்ணலேன்னு யாரு அழுதா ?

மரு. அதான் சொன்னேனுங்களே, இந்த வியா பாரத்திலே சிமானுப் போயிட்டேன்னு நினைச்சிங்களா. என்னமோ பரம்பரைத் தொழிலாச்சே, விடக்கூடா துன்னுதான் விசுவாசத்துக்காக நடத்தி வாரேன். மருதை மனசு வச்சா எத்தனையோ விதத்தில நடக் குங்க பிளைப்பு. சரிங்க, அடுத்த மாட்டுக்கு உங்களைத் தான் நம்பியிருக்கேன்.

எஜ. எல்லாம் இரண்டு மாசம் கழிச்சுத்தானே அப்போ பார்த்துக்கலாம்.

மரு. அது வாஸ்தவந்தானுங்க. எதுக்கும் இப்பவே சொல்லிவச்சாத்தானே நல்லது. அம்மா, உங்களுக்கு எட்டு மணிக்குளளேதானே வேணும் பாலு. இதோ ஓடியாறேன் அஞ்சு நிமிஷத்திலே.

சீனு. (வந்துகொண்டே, கோபமாக) மருதை ஏ, மருதை.

மரு. ஓ, நீங்களா சாமி! உங்க வீட்டுக்காகத்தான் போயிட்டிருக்கேன் இப்போ.

சீனு. மணி எட்டாகப் போறது. இனிமேலா கொண்டுவரப்போறே பாலு?

எஜ. என்ன ஸ்ரீனிவாசன், மருதை கிட்டத்தானு நீங்களும் பால் வாங்கறேள்?

சீனு. ஆமாம் ஸார்ன்னு! தினமும் நானும் பார்க்கறேனே. எட்டுமணிக்குக் குறைஞ்சு பால் கொண்டுவரதில்லே இந்தப்பய.

மரு. ஸாமி, ஒவ்வொரு வீடாத்தானே குடுத்து வரணும். நீங்க ஒரு மூலையிலே இருந்தா அதுக்கு நானு பளி?

சீனு. கேட்டீங்களா ஸார்? இவனுக்காக நான் வீடு மாத்தணுமாம் லக்ஷணமாயிருகோல்லியோ.

மரு. உங்களை வீடு மாத்தச் சொல்லல்லே, ஆனு அதுக்காவ மத்தவங்க வீட்டெல்லாம் தாண்டி உங்க வீட்டுக்குத்தான் வரணுமனு அது நடக்குங்களா?

சீனு. அதுக்கு என்னப்பா அர்த்தம் பின்னே? நீ இந்த மாதிரி யெல்லாம் எட்டுமணிக்குப் பால் கொண்டு வராதாயிருந்தா நமக்குக் கட்டிவராது.

மரு. அப்பறம் உங்க இஸ்டங்க. வேறே பால்காரன் அமர்த்திக்கறதை நானு வேண்டாம்னேன்.

சீனு. பாத்திங்களா ஸார்! ஏண்டா, நீ ஊத்தற தண்ணிப்பால் கிடைக்காத சீமைச் சரக்குன்னு நினைச்சயோ!

மருதை. அப்படி நான் சொல்றவனுயிருந்தா வேறே ஆள் பாத்துக்க சொல்லுவேனு ஸார்?

சீனு. வாய்த் துடுக்கைப் பாத்திங்களா ஸார் இவனுக்கு?

எஜ. நீங்க கோபிச்சுக்கப்படாது ஸ்ரீனிவாசன். அவன் கஷ்டத்தையும் பார்க்கணுமோனே.

சீனு. எனக்கே ஸார், தூங்கி எழுந்திருந்ததும் காப்பி சாப்பிட்டாகணும். அப்பதான் வேறே வேலை ஓடும். இவன் எட்டு மணிக்குப்பால் கொண்டுவந்தா என்ன செய்றது சொல்லுங்க.

மருதை. அதுக்கு நான் வழிசொல்றேனுங்க. நான் வந்து எழுப்பறவரைக்கும் தூங்கிட்டிருங்களேன்! தூங்கி முளிச்சதும் காப்பி கிடைக்கும் அப்போ.

சீனு. என்ன போக்கிரித்தனம் பாத்திங்களா ஸார் இவனுக்கு!

மருதை. பின்னே என்ன செய்வான்? ஒத்தொத் தருக்கும் பள்ளியெழுச்சி பாடறதுதானு பால்காரனுக்கு வேலை?

சீனு. இந்தப்பயலுக்கு என்னெல்லாம் ஒத் தாசை பண்ணியிருக்கேன் தெரியுமா ஸார்? நினைச்ச சம யத்தில் அஞ்சு பத்துன்னு கைமாத்துக் கேப்பான். எத் தனை தட்வை குடுத்திருக்கேன் தெரியுமா?

எஜ. உங்ககிட்டேயுமா கைமாத்து!

மருதை. நிசம்போல சொல்றுங்களே. நாலு மாசம் பால் ஊத்தின பணம் பாக்கி நிக்குது. தம்பிடி பெரளற வழியைக் காணோம்! கைமாத்து வேறயா வாளுது?

சீனு. பாத்திங்களா ஸார்! விசுவாசங்கெட்ட பயல்னு இவனைத்தான் சொல்லணும்.

மருதை. ஸார், மருதை விசுவாசம் நீங்க சொல்லித் தெரியவேண்டியதில்லை ஐயாவுக்கு! உங்க சமாசாரம்

ஊர் முழுதும் தெரிஞ்சிருக்கே. உங்களுக்குப் பால் ஊத்த எந்தப் பயலாவது வருவான்னு நினைச்சிங்களா? நான் தான் ஏதோ இரக்கம் வச்சு தவறுமே ஊத்தியாறேன்.

சீனு. ஒரு தட்டவை மாடு வாங்கப் பணம் வேணும்னு கூடக் கேட்டிருக்கான் ஸார் இந்தப்பய.

மருதை. குடுத்துட்டுத்தான் மறு காரியம் பாப்பிங்க.எனக்கு வேறே ஒண்ணும் வேண்டாமுங்க பால் பாக்கிக்கு மோசமில்லாம வந்தால் போதும்.

சீனு. அவ்வளவு துடுக்காடா உனக்கு? சாயங் காலம் வந்து கணக்குத் தீத்து தம்படியில்லாம வாங் கிண்டு போயிடு. நான் வேறே ஆள் பாத்துக்கறேன்.

மருதை. ஆயிரத்து ஒண்ணுவது தட்வைங்க நீங்க இப்படிச் சொல்றது.

சீனு. இந்தத்தடவை பார்த்திண்டே இரேன். (போகிறார்)

மருதை. (கேலிச்சிரிப்புடன்) பாத்திங்களா எசமான்! பாக்கிப் பணம் குடுக்கறதுக்கு வழியில்லே. வாய் மட்டும் எவ்வளவு கிளியுது பாத்திங்களா?

எஜ. நல்ல மனுஷரப்பா.

மரு. நல்ல மனுஷர்ன்னு இரக்கம் வச்சுத்தான் ஊத்தி வரேனுங்க. இந்த மருதைக்குப்பணம்பெரிசில்லே. அதிலேயே கோவிச்சுக்கிட்டா அப்பறம் என்ன செய்யரது சொல்லுங்க. சரி, நான் வரேன் அம்மா,அதிகப்படி பாலு இதோ கொண்டுவரேன். [போய்க்கொண்டே] நான் சொன்ன விசயம் மட்டும் மனசில போட்டு வையுங்க, மறந்துடாதிங்க.

அம்மா. இவனைவிட்டா நமக்கும் சங்கடமாயிருக்கே, அதைச் சொல்லுங்கோ.

எஜ. ஒரு நாள் அவன் வராட்டா எவ்வளவு தவிச்சுப் போறது! இவனை விடறதாவது.

அம்மா. ஆமாம், அவனுக்குப் பால் மாடு வாங்கப் பணம் குடுக்கப்போறேளா என்ன?

எஜ. என்ன செய்யறது, கட்சிலே குடுக்காம தீராது போலேருக்கு. அவன் இல்லாமதான் நமக்கு சரிப்படலையே.

3
தோட்டக்காரன்

மாணிக்கம். என்ன மாமா, தோட்டத்திலே என்ன வேலே மும்மரமாயிருக்கு.

கருப்பன். புதுசாக்கேள்வி கேக்கறயே மாணிக்கம். எனக்குத் தோட்டத்திலே இல்லாம வேறே எங்கே வச்சிருக்கு வேலே! இந்த மண்ணிலேயே பிறந்து இதிலேயே வளந்தவனுச்சே.

மாணிக். தெரியாம என்ன மாமா? நானும் பல்லு முளேச்ச நாளளேருந்து பாத்து வரேனே. இந்தத் தோட்டத்தை விட்டு வேறே எங்கனுச்சியும் அசைஞ்சிருப்பயா?

கருப். அதென்ன போ, மாணிக்கம். நான் வளர்த்த குழந்தை மாதிரி ஆய்ப்போச்சு இந்த தோட்டம். ஒருநா இந்தச் செடி கொடிகளேப் பாக்காதபோனு உலகமே அஸ்தமிச்ச மாதிரி ஆய்ப்போவுது.

மாணிக். எனக்கென்னமோ மாமா; ஆச்சரியமாத் தான் இருக்கு,

கருப். என்ன ஆச்சரியம் தம்பி?

மாணிக். எப்படி நீ இந்தத்தோட்டத்தில் இவ்வளவு பாடு பட்றயோன்னு தான்.—பாரு, நானும் வயக்காட்டிலே எத்தனே மணி நேரமானுலும் நின்னு உழைக்கத் தயாரு. ஆனு தோட்ட வேலே என்னுலே ஆகாது. ஒவ்வொரு பாத்தியா ஒவ்வொரு செடியாப் பாத்துக்கிட்டு.

கருப். தோட்டவேலை எல்லாராலேயும் ஆயிடுமா தம்பி? உன்னைப் போல முரட்டங்களுக்கெல்லாம் அது கட்டிவராது. அதுக்கு மனசில அபிமானம் வேணும்.—அடேடே, இரு தம்பி, அதென்ன அந்த மல்லிகைச் கொடியிலே அந்த இலை வாடிப்போயிருக்கு .. தண்ணி விட மறந்து போயிட்டேனு? மாகதம், என்பட்டு மாகதம், உனக்கு என்னம்மா?...பாத்தியா மாணிக்கம்?

மாணிக். என்ன மாமா?

கருப். இந்தப் புழுவைப் பாத்தியா? இது வந்துடு மோன்னு பயந்து என்னெல்லாம் பாடுபட்டேன். பட்டு மாதிரி இலையை என்னமா கத்தரிச்சுப் போட்டிருக்கு பாரேன். நல்ல வேளை, ஆரம்பத்திலேயே கவனிச்சது நல்லதாப்போச்சு. இன்னமே தலைகாட்ட விட்றேனு பாரு.—பாவம், இந்த இலை என்னமா வாடிப்போயிருக்கு பாத்தயா மாணிக்கம்!

மாணிக். என்ன மாமா, ஒரு இலை போனதுக்கு இவ்வளவு கண்ணீர் வடிக்கறயே!

கருப், ஒரு இலைன்னு அவ்வளவு இளப்பமா இருக்கா தம்பி! அந்த ஒரு இலை வரதுக்கு என்ன பாடு பட்டிருப்பேன் தெரியுமா! இதே இலை மொத மொத துளிராத் தலை தூக்கினபோது என் மனசு பட்ட சந்தோஷம் உனக்கென்ன தெரியும்! பாவிப்புழு அனியாயமா கத்தரிச்சுப் போட்டுடுத்தே.

மாணிக். ஆமாம் மாமா, ஒரு தோட்டம்னு அதிலே எத்தனை செடி, எத்தனை கொடி? —ஒரொரு செடியா ஞாபகம் வச்சுக்கறதே கஷ்டம். நீ என்ன ஒரொரு இலையாக்கூட ஞாபகம் வச்சிருக்கயே. எப்படி முடியறது உன்னலே?

கருப். ஏன் தம்பி, எங்கேயாவது தாய் தான் பெத்த பிள்ளைகளை ஞாபகம் வச்சுக்காம இருப்பாளா?— பிரமாதக் கஷ்டமா இதைச் சொல்லவரயே. லக்ஷம் செடி இருக்கட்டுமே தோட்டத்திலே. எந்தச்செடி எங்கே எப்போ குருத்துவிட்டப் போகுதுன்னு தெரியாதவன் ஒரு தோட்டக்காரனோட சேத்தியா?

மாணிக். அதென்னமோ, இந்தச் சிண்ரம் பிடிச்ச வேலை என்னாலே ஆவாது மாமா.

கருப். அதுதான் தம்பி எல்லோரும் தோட்டவேலை செஞ்சுட முடியாதுன்னு சொன்னேன். மனசில அபிமானம் இல்லாதவன் தோட்டவேலையிலே இறங்கிட முடியுமா?

மாணிக். நானும் பாக்கறேன் மாமா. என்னதான் முயற்சி பண்ணினாலும் இந்தச்செடி கொடிங்க கிட்டே என்ன அபிமானம் உண்டாயிட்டப் போவுது மனசிலே.

கருப். செடி கொடின்னா என்னன்னு நினைச்சுக் கிட்டே தம்பி! உயிரில்லாத கட்டைன்னு நினைச்சுக்கிட்டயா! இதுக்ளுக்கா உயிரில்லே! இதுக எங்கிட்ட பேசும் தம்பி, பேசும். இதுங்க பேச்சை எத்தனை நேரம் கேட்டுக் கிட்டிருந்தாலும் எனக்கு அலுக்காது தெரியுமா?

மாணிக். [சிரித்து] மாமா, ஒரு பேரக் கொளந்தை இல்லாத குறை உன்னை இப்படியெல்லாம் பேசச்சொல் லுது. முத்தையாவுக்கு ஒரு கல்யாணத்தைப் பண்ணு காலாகாலத்திலே.

கருப். உனக்குக் கேலியாத்தான் இருக்கும் தம்பி கிளவன் என்னமோ பித்துப்பிடிச்சு உளறிட்டிருக் கான்னு தான் நினைப்பே.

மாணிக். பின்னே என்ன மாமா, செடிங்க பேசறதுன்னு சொன்னு நம்பறவனுக்கு மதி எங்கே போச்சு.

கருப். அடே, அதுங்க பாஷை உனக்கு புரியலேன்னு அதுங்க பேசலேன்னு அர்த்தமா அதுகளுக்காக உயிரை விடறவனுக்குத்தான் அதுங்க பாஷை புரியும்.

மாணிக். இப்படிச் சொல்லிட்டா அப்புறம் பேச்சு எது?

கருப். என்னை நீ பைத்தியம்னு நினைச்சாலும் நினைச்சுக்கோ தம்பி, இந்தச்செடி கொடிகளுக்கு இருக்கற அறிவு நம்ம குழந்தைகளுக்கு வருமா? நான் கிட்டப் போயிட்டா அதுகளுக்கு எப்படித்தான் தெரியுதோ? ஒரே சிரிப்புத்தான் கொம்மாளம்தான் அதோபாரு. அந்த ரோஜாச் செடி என்னையே பாத்துக் கிட்டிருக்கு, என்னம்மா வேணும்? ஆங்! என்ன கோவம் அதுக்குள்ளேயும்; மரகதத்தைக் கொஞ்சினேன்னு கோவமா ரோஸு! உனக்கென்ன வேணும் சொல்லு. — என்ன மாணிக்கம், சிரிப்பா இருக்கா கிழவனைப்பார்த்தா?

மாணிக். நான் ஏன் சிரிக்கிறேன் மாமா உனக்குத் தானே தெரியும் நீ வளர்த்த செடியோட அருமை.

கருப். என்குழந்தைகளுக் குள்ளேயே ரோஸுக்கு கொஞ்சம் ரோஸம் ஜாஸ்திதான். என்ன இருந்தாலும் பெரிய வீட்டுப் பெண்ணில்லே. இல்லையா ரோஸு?— ஓகோகோ இந்தக் கொம்பு ரெண்டும் காத்திலே மாட்டிக் கிடுச்சா?—இப்ப சரிதானு சிரி, பாப்போம். ஆம்— இப்பதான் ரோஸு பழயரோஸாயிட்டா!

மாணிக். ரொம்ப அபிமானம் போலிருக்கே மாமா, ரோஸுகிட்டே.

கருப். இது ஒரு கொப்பை நாட்டுப்புட்டு இரண்டு இலே துளுத்தா போதும்னு நான் தவங்கிடந்தது எனக் கில்ல தெரியும்? சொன்னு நம்பமாட்டே. மூணு மாசம்னு மூணுமாசம் பிடிச்சுது இலே வரதுக்கு. இப்ப அது பூக்கா தான்னு ஏங்கிட்டிருக்கேன். அது பூத்தா என்னம்மா இருக்கும் தெரியுமா? இதே பாடுதான். அந்தப்பவள மல்லிகைக்கும் பட்டேன்.

மாணிக். அதிருக்கட்டும் மாமா, ஒரு முக்கியமான விஷயமில்லே கேக்க வந்தேன், நாளன்னிக்கு முருகனுக் குக் கல்யாணமாச்சே. நீ வரலையா?

கருப், முருகனுக்குத்தானே? நாம்போகாம கல்யா ணம் நின்னு போயிடுமா?

மாணிக். அதுவா பேச்சு மாமா? குடும்பத்துக்கும் பெரியவன்நீ.—நீ இல்லாம கல்யாணம் நடக்கறதாவது?

கருப். அது சரிதான் தம்பி. கல்யாணத்துக்குப் போயிட்டு வரதுன்னு லேசா? குறைஞ்சது ஒரு வாரம் பத்து நாள்னு இளுத்துடுமே.

மாணிக். பின்னே கல்யாணம்னு ஒரு நாள்லே முடி யற காரியமா? ஒரு வாரமும் ஆகும், பத்துநாளும் ஆகும்.

கருப், அதுனலேதான் போறதில்லேன்னு தீர்மா னிச்சுட்டேன்.

மாணிக். ஏன்? அத்தனை நாள்னு ஐயா சரின்னு சொல்ல மாட்டார்ன்னு பயப்பட்றியா?

கருப். கருப்பன் கேட்டு ஐயா சரின்னு சொல்லாமலா! அப்படி ஏதாவது ஆவாததைக் கேட்டாதானே, ஆச்சு, இத்தனை நாளாவுது இந்த பங் களாவிலே வேலைக்கமர்ந்து சேர்ந்தாப்போல மூணுநாள் வெளியே போயிருக்க மாட்டேன்.

மாணிக். பின்னே இப்போ வரதுக்குஎன் தயங்கறியாம்?

கருப். ஒருவாரம் பத்துநாள் நான் வந்துட்டா என் குழந்தைங்களை யாரு கவனிச்சுக்கறது. என்னைக் காணுமே அதுக எப்படி இருக்கும் வாடி வதங்கிப் போயிட்டாது?

மாணிக். பார்த்துக்கறதுக்கா ஆள் இல்லே மாமா. நான் வேணும்னு யாரேனும் ஆளை ஏற்பாடுபண்ணிட்டுப் போறேன்.

கருப். அதெல்லாம் சரிவராது ,தம்பி. நான் வரதா யில்லே கல்யாணத்துக்கு.

மாணிக். நீ வரலேன்னு சொல்லிட்டா வீட்டிலே சும்மா இருப்பாங்களா; மாமி போகணும்னு சொல்லலையா என்ன?

கருப். அவளுக்குப் போவணும்னு ஆசையில்லாம இருக்குமா. அதுக்காக நானும் வந்தாத்தான் ஆச்சுன்னு எதுக்கு சொல்லணும்?

மாணிக். ஸ்...மாமா, மெள்ளப் பேசுங்க. அதோ மாமியே வராங்க.

தங். என்னது இங்கேவந்து குந்திட்டீங்களா, வீட்டுக் கவனமே இல்லாமே இப்படி தோட்டம் தோட்டம்னு உசுரைவிட்டா என்னபன்றது. ஓ மாணிக்கமா, வா தம்பி!

மாணிக். என்னங்க, முருவன் கல்யாணத்துக்கு வரலேன்னு சொல்றுங்களே மாமா.

தங். மாமாவுக்கு என்ன. தோட்டத்தில ஒவ்வொரு செடியா உசுரை விடறதுக்குத்தான் நேரம் சரியா

இருக்கும். வீட்டில உப்பிருக்கா புளியிருக்கான்னு பாக்க றது கூட கிடையாது. எல்லாத்துக்கும் ஈடு குடுக்கறது நான்.

கருப். எனக்கு தோட்ட வேலையிலிருந்து ஒழிவு எப்போ, நீயே சொல்லு தங்கம்.

தங். நீங்க ஒத்தர் தான் அதிசயமா தோட்டவேலை பாக்கறீங்களா. உடனெருத்தவங்களெள்ளாம் பாக்காமலா இருக்காங்க. கொத்திக்குடுத்து தண்ணி ஊத்திக் களை பிடுங்கு வாங்க கண்டிருக்கு. இப்படியா ஒரொரு செடியா மாத்தி மாத்திக் கொஞ்சிச்டிருப்பாங்க?

மாணிக். அதுங்க பேச்சை கேட்டுக்கிட்டே இருக்க ணும்னு ஆசை, மாமாவுக்கு.

தங். சொல்லியர்ச்சா உன்கிட்டேயும், அதுங்க பேச்சைப்பத்தி. இது பைத்தியமில்லாம வேறே என்ன சொல்லு மாணிக்கம். செடிங்க பேசறதாம், அதைக் கேட்டு மகிழ்ந்து போருங்களாம். எப்படி இருக்கு கதை?

கருப். இரு தங்கம், மறந்துட்டேன். அந்த பவள மல்லிகைக்கு தண்ணி ஊத்திட்டு ஒரு நொடியில் வந்து ட்றேன்.

தங்கம். மலைபோல நான்வந்து நிக்கறேன். என்னை விட ஆந்தப் பவளமல்லி பெரிசாப்போச்சா உங்களுக்கு, கேக்கறேன்.

கருப். கோவிச்சுக்காதே தங்கம். உனக்கு வேணுங் கறதைச் சொல்லு. நான் கேக்க மாட்டேன்னு சொல்ல றேன்.

தங். இனிமேலா சொல்லணும். ஆச்சு, நாளை ஒருநா கழிஞ்சா கல்யாணம். போகணும் போகணும்னு

மூனுநாளா சொல்லிட்டிருக்கேன். காதிலேயே வாங்கி னுபபோலே தெரியலேயே.

கருப். தோட்டத்தை அப்படியே விட்டுட்டு நான் எப்படி வாரது. நீயே சொல்லு தங்கம்.

தங். தோட்டமென்ன உங்களுக்குத்தான் பட்டயம் எழுதிக் குடுத்திருக்காங்களா. என்னமோ கூலிக்கு வேலே செய்யருெம். வாங்கற கூலிக்கு செய்யறவேலே போதாது?

கருப். தங்கம், நீ கூடவா இப்படிப் பேசறே!

தங். பின்னே என்ன. ஒரு கல்யாணம் கார்த்திகை கூட இல்லாமே தோட்டத்திலேயே உயிர்விடறது என்ன வேண்டியிருக்கு?

கருப். கூலிதானு முக்கியம் தங்கம். இந்த மண்ணி லேயே இத்தனை நாளா உழைச்சப்பறமும்.

தங். உழைச்சு உழைச்சு என்ன பலன்னு கேக்க றேன்? உழைக்கிற அருமை தெரிஞ்சு சம்பளம் உசத்த றதாயிருக்கணும், உழைக்கணும். வெட்டிக்கு உழைச்சு என்ன கண்டது?

மாணிக். நான் சொல்லறேன் மாமா. நீங்க வேறே இடத்துக்கு வரத்தயாராயிருந்தா இதைப்போல ரெண் டத்தனை சம்பளம் குடுக்கத் தயாராயிருப்பாங்க.

கருப். சிவ சிவா, என்ன பேச்சு மாணிக்கம் இது? இருபதுபங்கு சம்பளம் கிடைச்சாலும் இங்கேவிட்டுப் போவேனு?

தங். அது நல்லாத் தெரிஞ்சுகிட்டுதான் ஐயா சம் பளம் உசத்தாமலே தபாய்க்கருரு.

மாணிக். அது போவுது, நீங்களாவது முருவன் கல்யாணத்துக்கு வருவிங்க, இல்லேயாம்மா?

தங். நான்மட்டு மென்ன. உன் மாமாவை இங்கே விட்டு வைப்பேன்னு நினைச்சயா ?

கருப். தங்கம், ஐயா வராரு. அவர் காது கேக்க...

தங். ஐயாகிட்ட நான் நேத்தே சொல்லியாச்சு.

கருப். என்னைக் கேக்காம ஏன் சொன்னே தங்கம்?

ஐயா. என்ன கருப்பா, இன்னிக்குப் போறயா, நாளைக்கா, கல்யாணத்துக்கு?

தங். இன்னிக்கு சாயங்காலமேதான் போறதா இருக்கோம்.

ஐயா. நான் வேறே ஆளுக்கு ஏற்பாடு பண்ணிருக்கேன் கருப்பா.

கருப். வேறே ஆளுக்கா ?

ஐயா. நீ போய்வர எப்படியும் ஒரு வாரத்துக்கு மேலே ஆகுமில்லே. அதுவரைக்கும் தோட்டத்தைப் பாத்துக்கத்தான்.

கருப். எசமான், நான் போறதாயில்லே கல்யாணத்துக்கு.

ஐயா. என்ன, போகலேயா ? அவசியம் போயாகணும்னு தங்கம் சொன்னு நேத்து.

கருப். நான் போயிட்டா இங்கே என்ன ஆறதுங்க?

ஐயா. நான்தான் வேறே ஆளுக்கு ஏற்பாடு பண்ணிருக்கறதாச் சொன்னேனே அப்பா.

கருப். என்ன இருந்தாலும் நான் இருந்து கவனிச்சாத்தான் என் மனசு நிம்மதியா இருக்குங்க.

தங். அவங்களுக்கு என்ன வேலை. அப்படித்தான் சொல்லுவாங்க.

ஐயா. சும்மா போய்வா, கருப்பா. வீட்டுக்கு முக்கியமான கல்யாணம்னு சொல்லி நீ போகாம இருந்தா...

மாணிக். யோசனை பண்ணுறிங்க மாமா. சாயங்காலமே இளம்பற வழிபாருங்க.

கருப். எனக்கென்னமோ, போவறதுக்கே மனமில்லிங்க. போவாட்டி பொல்லாப்புன்னுதான் போக வேண்டிருக்கு.

(ஒருவாரம் கழித்து)

ஐயா. என்னசுப்பையா, இந்தப்பாத்திக்கெல்லாம் தண்ணி ஊத்தலையா இன்னிக்கு?

சுப். தண்ணி ஊத்தினேனுங்களே ஊத்தாம இருப்பேனு?

ஐயா. தண்ணிஊத்தியுமா இப்படி வாடிக்கிடக்கு?

சுப். அதுதானுங்க எனக்கும் புரியலே.

ஐயா. எப்படி தளதளன்னு இருக்கும் இந்தப் பாத்தியெல்லாம். ஏன் வாடிப்போச்சு?

சுப். சாயங்காலம் கூட ஒருதரம் தண்ணி தெளிச்சேனுங்க.

ஐயா. பாத்திதான் போறதுன்னு செடியெல்லாம் என்னமோ அழுது வழியருப்போல இருக்கு.

சுப். நான் என்ன செய்யறது சொல்லுங்க. நேத்துதான் எல்லாம் கொத்திக் குடுத்து எருவும் சாம்பலும் தூவினேன்.

ஐயா. கருப்பன் இருந்தா செடியெல்லாம் சிரிக்கருப்போலே இருக்கும். அவன் போய் மூணு நாளுக்குள்ளேயே இப்படியாறு...

சுப். அவருமட்டும் என்ன செஞ்சுட்ருருங்க? நான் கொத்திக் குடுக்கறதுக்கும் தண்ணி பாய்ச்சறத்துக்கும் மேலேயா?

ஐயா. அவன் என்ன மந்திரம் போட்ருனே யாரு கண்டது? சொல்லுவானே, செடிகள் பேசறது, சிரிக்கறதுன்னு—பைத்தியம் உளறுதுன்னு நினைச்சேன்.

கருப். (வந்து கொண்டே) கும்பிடறேனுங்க எசமான்!

ஐயா. யாரு கருப்பனு. அதுக்குள்ளேயுமா திரும்பி வந்துட்டே கருப்பா?

தங்கம். அதையேன் கேக்கறிங்க. யாரு சொல்லியும் கேக்காம ஒரே பிடிவாதமா கிளம்பி வந்துட்டாருங்க.

ஐயா. ஏதேனும் மனஸ்தாபமா யாரு கூடயும்?

தங். ஒரு மனஸ்தாபமும் இல்லிங்க. அவங்க புத்தி கல்யாணத்திலே எங்கே போச்சு. பித்துப்பிடிச்சாப்பல இருந்தாங்க. கல்யாணம் ஆச்சோ இல்லையோ, இப்ப புறப்பட்டாத்தான் ஆச்சுன்னு புறப்பட்டு வந்துவிட்டாங்க.

கரு. இதென்ன எச்மான், நம்ம தோட்டமா இப்படி இருக்கு!

ஐயா. எனக்கு வந்த சந்தேகம் உனக்கும் வந்துடுத்தா கருப்பா.

கருப். சுப்பையாவா இந்தமாதிரி தாறுமாருக் கொத்திக்குடுத்தது?

சுப். கொத்திக்குடுத்ததில் என்ன பிசகு மாமா? இப்பத்தான் மம்முட்டி பிடிக்குதா இந்தக்கையி?

கருப். முன்னேபின்னே தோட்டவேலை பாத்திருக்கயாடா நீ? இதுங்க எருக்குச்செடின்னு நினைச்சயாடா,

என்டா? மல்லிகையும் ரோஜாவும் ராணிங்க மாதிரி வச்சிருந்தேன், மண்ணைப்பறிச்சுப் பாழ்பண்ணிருக்க யேடா!

தங். அவன்மேலே ஏன் கோவிக்கிறீங்க?

கருப். ஆமாம், என்மேலே தான் தப்பு. விட்டுட்டுப் போனேனே என்மேலே தான் தப்பு. அட்பாவி, சாம்பல் தூவறதானு இப்படியா செடி தலையிலே கொட்டறது? மரகதம், ஏம்மா சோர்ந்துபோய் நிக்கறே? உன்னைத் தவிக்க விட்டேன்னு கோவமா?

தங்க. மறுபடியும் பித்துப்பிடிச்சாப்பல பேச ஆரம்பிச்சாச்சா செடியோட?

கருப். தங்கம், உனக்குத் தெரியாது அதுங்களோட அருமை. ஒத்தருக்குமே தெரியாது. எனக்குத் தான் தெரியும்.

ஐயா. கருப்பா, ஊரிலிருந்து வந்த களைப்புகூட ஆத்திக்காம இங்கேயே உக்காந்துட்டயே.

கருப். என் குழந்தைங்க கோவம் ஆத்தற வரைக்கும் இங்கே விட்டு அசைய மாட்டேனுங்க. அதுங்க எங்கிட்ட பேசணும், சிரிக்கணும், ரோஸு, என்னைப் பாத்துச்சிரிக்க மாட்டே?

தங். பைத்தியமே, பைத்தியமே.

ஐயா. கருப்பா, நீ யில்லாம இந்தத்தோட்டமும் இருக்காது. இந்தத் தோட்டம் இல்லாம நீயும் இருக்க முடியாது.

4

தபால்காரன்

கேதாரி. என் பங்கஜம், மணி பத்தரை ஆகறது. இன்னுமா தபால்காரன் வரலே?

பங். பத்தரை யாச்சுன்னு... தபால்காரன் வந்து போயிருப்பானோ என்னமோ ஒருவேளை.

கேதாரி. வந்து போயிருந்தா நமக்குத் தெரியாமலா?

பங். நம்ம வீட்டுக்கு வந்தான்னு நமக்குத் தெரியப் போறது.

கே. நம்ம வீட்டுக்கு வராமலா. எனக்கு முக்கிய மான தபால் வரணும் இன்னிக்கு!

பங். உங்களுக்கு முக்கியமான தபால்வராத நாள் தான் என்னிக்கு. தினமும் தபால் தபால்னு உசுரை விட்றதாயிருக்கே ஒழிய தபால் வரவழியாக் காணோம்.

கே. நீ இப்படிச் சாபம் குடுத்தா தபால் எங்கி ருந்து வரும், கேக்கறேன்.

பங். இதிலே நான் சாபம் குடுக்கறது என்ன இருக்கு? எழுதறவா எழுதினா கடுதாசி தன்னாலே வரது. இதுக்காக நீங்க தவிச்சா வந்துடுமா, இல்லேன்னா நான் சாபம் குடுத்தா வரது நின்னு போயிடுமா?

கே. நீ சாபம் குடுக்கறதினாலே தான் எழுதறவா எழுதாம இருக்காளோ என்னமோ.

பங். ரேங்க கடுதாசி எழுதற அழகுக்கு மத்தவா எழுதலேன்னு சொல்ல வேண்டியதுதான்.

கே. ஏன், நான் கடுதாசி எழுதாமத்தான் இருக்கேனோ ?

பங். சந்தேகமென்ன. அப்பா கிட்டேருந்து கடுதாசி வந்து நாள் பத்தாகப் போறது. பதில் ஒருவரி எழுதிப் போட்டேளா ?

கே. அப்பா எழுதின கடுதாசியிலே என்ன இருந்துது பதில்போட ? நான் க்ஷேமம், நீ க்ஷேமமான்னு திருப்பி திருப்பி...

பங். ஓகோ, இதெல்லாம் உங்களுக்கு முக்கியமான தபால்லே சேர்த்தி இல்லையோ ?

கே. உனக்கு முக்கியமான தபாலாத் தோண றதோ என்னமோ ?

பங். பின்னே முக்கியமான தபால் ஆகாசத்திலே ருந்து குதிக்கப்போறதோ உங்களுக்கு. போயும் வந்தும் ரெண்டு ஸ்நேகிதா, மாமா, அப்பா. வேறே என்ன முக்கியத் தபாலோ, ஈசுவரனுக்குத்தான் வெளிச்சம்.

கே. பாத்திண்டே இரேன். ஒருநா இல்லாட்டா ஒருநாள் திடுதிப்பின்னு வந்து நிற்கப்போறது.

பங். வரப்போறது வரப்போறதுங்கறது இருக்கட்டும். என்ன எதிர்பார்க்கறேள் தபால்லே, அதையாவது சொல்லுங்கோ.

கே. எதிர்பார்க்கறது தபால்லே வரதில் என்ன ஆனந்தம். உங்கப்பா கிட்டேருந்து ஒரு வாரத்துக்கு ஒரு லெட்டர் வரதை எதிர்பார்க்கறோம். வந்தா ஏதேனும் சந்தோஷம் இருக்கா ?

பங். எதிர்பாரர்த லக்ஷரூபார்ய்ச் செக் வந்து குதிக்கப் போறதாக்கும்.

கே. லக்ஷரூபாய்ச் செக்கு தபால்லேயா வரும். பாங்குக்காரனே நேரே ஓடி வரமாட்டாளு ?

தபால். (வாயிலில் இருந்து) ஸார் தபால்!

கே. பாத்தயா பங்கஜம். இன்னிக்கு வரும்னு சொன்னது பலிச்சுதா இல்லையா ?

பங். (தூர இருந்து) அவன் எதிர் வீட்டிலேன்னு ஏதோ குடுக்கருன்!

கே. எதிர் வீட்டிலேயே. இங்கே கூப்பிட்டுட்டுப் போயிருக்கான் போலிருக்கு. குடுத்துட்டு இங்கேதான் வருவன்.

பங். இல்லையே. நேரேன்னு போருன்!

கே. பராங்குசம், எம்பா, உன்னைத்தானே.

த. (வந்துகொண்டே) நமஸ்காரம் ஸார். தபால் தானே, ஒண்ணுமில்லிங்களே. இருங்க எதுக்கும் பாத்துச் சொல்லறேன்.

கே. இருக்கும் பாரு. இன்னிக்குக் கட்டாயம் வர வேண்டிய தபால் அது.

த. இன்னிக்கு வரவேண்டியதுங்களா. ஒருவேளை வழியிலே வந்துகிட்டிருக்கோ என்னமோ, சிக்கிரம் வந்துடும், பொறுங்க.

கே. என்னப்பா தமாஷ் பண்றே, ஒண்ணுமே இல்லையா ?

த. இருந்தா நேரே போவாளு இந்தப் பராங்குசம். ஏன் ஸார், கதவு மூடிருந்தாலும் கதவைத்தட்டித் தொந்தரவு பண்ணிக்குடுத்துட்டுப் போகமாட்டேளு!

பங். அன்னிக்கு அப்படித்தான் தொந்தரவு பண்ணிக் கதவைத் தட்டினே. தூங்கிண்டிருந்தவ அலறியடிச்சுண்டு எழுந்திருந்து வந்தேன். இவ்வளவுக்கும் மேலே நீ குடுத்த தென்னடான்னு ஒரு புக்போஸ்ட்.

கே. அதுவும் என்ன, இன்ஷ்யூரன்ஸ் பணம் கட்டச்சொல்லி நோட்டீஸ்.

த. அதுக்கு நான் என்ன பண்றதுங்க, நீங்க இன்ஷ்யூரன்ஸ் பணம் கட்டத்தவறின உடனே அவங்க நோட்டீஸ் அனுப்பிச்சுடறாங்க. அதை எடுத்துட்டு வரது என் பொறுப்பாயிடுது, நான் என்ன செய்யறது?

கே. அதுக்குச் சொல்லலே. நீ கதவு இடிச்சுக்கூப்பிட்டு குடுக்கறதெல்லாம் இந்த ரகத்தைச் சேந்த துன்னுதான் சொல்றோம்.

த, அதுக்குள்ளேயுமா மறந்திட்டிங்க ஸார்? போன புதனுக்கு முந்தின புதன்கிழமை அந்த மணியார்டர் உங்களுக்குக் குடுக்கறதுக்காக, உங்களைத்தேடி எத்தனை தூரம் எங்கெல்லாம் நடந்திருப்பேன், யோசிச்சுப் பாருங்க.

பங். எது, கோபாலன் அனுப்பியிருந்த நூறு ரூபாய்ப் பணத்தைச் சொல்றே?

கே. ஆமாம். அதைத்தான்.

பங். இதைப்போய்ப்பிரமாதமாச்சொல்ல வரானேக்கும்.

த. யார் அனுப்பியிருந்தா என்னங்க. பணம் பணந்தானுங்களே.

கே. பணம் பணமில்லேன்னு யாரு சொன்னது! ஆனா அது அந்த ஆசாமி எங்கிட்டக்கடன் வாங்கின பணம், பாரம்சம்.

த. பாத்திங்களா பராங்குசம் ராசியை, இந்தக் காலத்திலே, கடன் வாங்கினவங்க கிட்டிபோட்டு நெருங்கிறாலே குடுக்கற வழியாயில்லே. அவங்களாகவே வலுவிலே மணியார்டர் பண்றதுன்னா, பராங்குசம் ராசி இல்லாம வேறே என்னங்க?

கே. ஓகோ, பணம் வந்தா பராங்குசம் ராசி. இன்ஷ்யூரன்ஸ் நோட்டீஸ்வந்தா பொறுப்பு என் தலை மேலே, இல்லையா?

த. ஸார், என்னதான் சொல்லுங்க, ராசிங்கறது தனிதான். ராசியுள்ளவன் ஏன் இப்படி தெருத்தெருவா அல்லாடறேன்னு கேக்காதிங்க. என் ராசி மத்தவங்க சுகப்படறதைப்பார்க்கற ராசி. நீங்களே பாருங்க, அந்த நடுதெரு நாராயணசாமிப்பிள்ளைக்கு லாட்டரி பிரைஸ் விழும்னு யாரானும் சொப்பனத்தில யானும் நினைச்சிருப்பாங்களா?

பங். அவனுக்கு பிரைஸ்விழுந்தா அவன் அதிருஷ்டமா உன் அதிருஷ்டமா, கேக்கறேன்.

த. ஆங், அவர் அதிருஷ்டம் தெரியாதாங் கட்டியும். லாட்டரி பிரைஸ் வரதுக்கு முன்னே பொளேப்புக்கு லாட்டரி அடிச்சிட்டிருந்தவரு.

கே. அத்தனைநாள் அதிருஷ்டக்கட்டையாயிருந்தா அப்பறம் அதிருஷ்டம் அடிக்கப்படாதா என்ன?

பங். இதிலே இவன் ராசி எங்கே வந்துதுன்னு கேக்கறேன்.

த. ராசி இல்லாம என்னங்க. பிரைஸ்விழுந்த சேதியை எடுத்திட்டுப் போனது எந்தக்கை. இதுக்கு முந்தி இந்த (beat) பீட்டுக்கு எத்தனை தபால்காரன் இல்லே. அப்பல்லாம் விழறது தானே பிரைசு.

பெரியவர். அப்பா பராங்குசம், கடுதாசி ஏதேனும் இருக்கா அப்பா?

தபா. கடுதாசியா, இருங்க, பாத்துச்சொல்லறேன் (தாமதித்து) இல்லிங்களே.

பெரி. என்னப்பா, அந்தப்பொண்ணு ஓயாதவருத் தப்பட்டிண்டிருக்கு. தினம் ஒரு நாளைப்போலே இல்லை, இல்லேங்கறயே.

தபா. என்ன பண்றதுங்க? உங்க மருமவன் கடு தாசி எழுதாம இருந்தா காசு மிச்சம்னு பாக்கறாரோ என்னமோ? [தாமதித்து] பாவம் பெரியவர் ரொம்ப நல்ல மாதிரிதான். ஆனா...

பங். ஆனா, உன் ராசியைப்பத்திதான் குறைசொல் றாரோ.

தபா. ரா்சியைக்குறை சொல்லறதா? இதோ பாருங்க அம்மா.

பங். அட்பாவி, கடுதாசி வந்திருக்கற போதேயா இல்லேன்னு சொன்னே. சரியாப்பார்க்கலையா?

தபா. பாக்கறதென்னங்க தேவை. சார்ட்பண்ணற போதே யாருக்கு என்னென்னலெட்டர் வந்திருக்குன்னு ஒரு நிகாவச்சுக்க மாட்டானா பராங்குசம்! பாத்துச்சொல் றேங்கறதெல்லாம் சும்மா.

கேதாரி. பெரியவர் அத்தனை நடை நடந்து வந்தி ருக்கார். கேட்டார்னா இருக்கற லெட்டரைக் குடுத்து அனுப்பறதுக்கில்லாம...

தபா. தபால்காரன்னா என்னங்க, கட்டையால பண்ணின ஓடமா, அவனும் மனிசன்தானே. நானும் பிள்ளைகுட்டிக்காரன். எனக்கும் பெரியவருக்கு இருக்க றுப்பல, வயசுப் பொண்ணு இருக்குது.

பங். அதுக்காக, வந்திருக்கற லெட்டரை மறைச்சு வைக்கச் சொல்லிருக்கோ?

தபா. அம்மா, ஒரு மாசத்துக்குமேலே ஆகுதுங்க. தினமும் லெட்டர் இருக்கா லெட்டர் இருக்கான்னு அந்தப் பொண்ணு கேக்கறதும் நான் இல்லேன்னு சொல்றதுமா இருக்குதுங்க. இல்லேன்னு சொன்ன போது என் மனசு பட்டபாடு எனக்கில்லே தெரியும். பாவம், கலியாணமான புதிசு. புருசன் தூரதேசத்திலே இருக்கான். அப்படிக்கொத்த புருசன்கிட்டேருந்து கடுதாசி இல்லேன்னு சொன்னா அந்தப் பொண்ணு மனசு தான் எப்படி எங்கிப்போகும்! என்னேல்ல சகிக்கும்! பொய்யா நான் சொல்றது.

கேதா. சரிதாம்பா. இத்தனைநாள் கழிச்சு வந்திருக்கற லெட்டரை பெரியவர் கேட்டதும் குடுத்தனுப்பற துக்கென்ன?

தபா. பெரியவர் எங்கே போறார் தெரியுமில்லே? மார்க்கெட்டுக்குப் போறாரு. அவரு மார்கெட்டுலேருந்து திரும்பறத்துக்குள்ளே நான் அவங்க வீட்டுக்குப் போயி லெட்டரைக் குடுத்துட மாட்டேனா.

பங். ஓ, அதுக்காகவா?

தபா. அதுமட்டு மில்லிங்க. இந்த வேளைக்கு அந்தப் பொண்ணு என்ன செஞ்சிட்டிருக்கும் தெரியுமா? நான் வருவேன், வருவேன்னு எதிர்பார்த்து வாசலிலே யிலே சாஞ்சு நின்னிட்டிருக்கும். 'பாராங்குசம், லெட்டர் இருக்கா'ன்னு அது கேக்கணும். 'இந்தாம்மா'ன்னு நான் குடுக்கணும். அப்போ அது முகம் மலர்றதைப் பார்க்கணும். இதை விட்டுப்போட்டு, மார்க்கெட்டுக்குப் போகற பெரியவர் கையில் ஏன் குடுக்கணும். தினமும்

தான் அந்தப் பொண்ணோட வாடினமுகத்தைப் பார்க்கறேன். இப்பவும் பெரியவர் மார்க்கெட்டிலேருந்து வர வரைக்கும் அதைத் தவிக்க விடுவானேன்?

பங். பாவம், யாராருக்கு என்னென்ன லெட்டர் வரதுங்கறதெல்லாம் தலைகீழ் பாடம்தான் போலேருக்கு பராங்குசத்துக்கு!

தபா. பின்னே இல்லாம, இந்த ஊரில் பராங்குசம் வேலைபார்க்காத பீட் கிடையாதுங்க. அந்தந்த பீட்டிலே உள்ள அத்தனை குடும்பமும் ஆதியோடந்தம் அத்துபடியாச்சே இங்கே. கையெழுத்தைப் பார்த்தே சொல்லிடுவேனுங்க, லெட்டர் யார்ட்டேருந்து வந்திருக்குன்னு.

கேதா. அதோ, பராங்குசம், எதிர்வீட்டில் உன்னைக் கூப்பிடறாங்க.

தபா. எதிர் வீட்டிலயா? (உரக்க) ஒண்ணுமில்லிங்களே! இருந்தா தன்னால உங்களைத் தேடிவருங்க!— என்னங்க, நீங்களே பாருங்க, எப்படி எரிச்சலும் புடைச்சலும்ா உள்ளே போறார்னு. வரலேன்னு எம்மேலே கோபிச்சு என்ன பண்றதுங்க. அனுப்பறவங்க அனுப்பாட்டி பழி பராங்குசத்தும்மேலேயா?

கே. மகன்ட்டேருந்து லெட்டர் எதிர்பார்க்கறாரா?

தபா. லெட்டர்கூட இல்லிங்க. மணியார்ட்ர் எதிர் பாக்கறாரு. மாசம் பொறந்தா மாசம் முடியறவரைக்கும் மணியார்டர் மணியார்டர்னு ஒரே நச்சரிப்பு. எங்கேருந்து வருங்க மணியார்டர். இவர் மகன் யோக்யதைதான தெரிஞ்சு கிடக்கே. ஐயாவுக்குப் பணம் அனுப்பிச்சுட்டுத்தான் மறுகாரியம் பார்ப்பான் பாருங்க. பணம் கேட்டுக் கடுதாசு எழுதாம இருக்கானே, அதுவே மேலு.

பங். யாரு, பிராணதார்த்தியா, அவன் வேலைக்குப் போய் ஆறுமாசத்துக்குமேலே ஆகறதே.

தபா. அந்த ஆறுமாசமாத்தான் ஐயாவும் உயிரை விட்டுக்கிட்டிருக்காரு.

கேதா. இப்படி ஆறுமாசம் ஏமாத்தினயானு உனக்கு எப்படிநல்லபேர் வரும்சொல் பராங்குசம். அது தான் ரோசி கெட்ட தபால்காரன்னு புகார் பண்றாரு.

தபா. பராங்குசம் ராசிக்குஇவர் சர்ட்டிபிக்கேட்டுக் கொடுக்க வேண்டாமுங்க. நினைச்சா நாலு மணியாடர் சேந்தாப்போலே கொண்டு தள்ளறதுக்கு ராசி உண்டு பராங்குசத்துக்கு, ஆனா இவருக்கு அவ்வளவுக்கு ராசி ஏது, நல்ல பிள்ளையைப் பெற்ற ராசி எல்லோருக்குமா லபிச்சுடுது?

கேதா. வாஸ்தவத்தில் உன்மேலே கோபந்தான் அவருக்கு.

தபா. என்மேலே கோபிச்சு என்ன செய்யறதுங்க. எத்தினி நாழி இந்தக் கோபமும் குணமும். இன்னிக்கு இவ்வளவு எரிச்சலா உள்ளே போறாரே, ஒருமணியார்டர் மட்டும் குடுத்திருக்கட்டுமே. ஐயா பொக்கை வாயெல்லாம் பல்லா நிறைஞ்சு போயிடாதா.

பங். நம்ம ஐயாவுக்குக் கூட உன்மேலே தான் கோபம்.

தபா. எதுக்குங்க?

பங். வேறே எதுக்கு? நினைக்கறபோதெல்லாம் புதிசு புதுசா லெட்டர் கொண்டு வரலைன்னுதான்

தபா. பார்க்கப்போனா அந்தக் கோவம் இல்லாத வங்க தெய்வப் பிறவின்னுதான் சொல்லும் போலே

ருக்கு. ஆனா இந்த ஊரிலே அந்த மாதிரி தெய்வப்பிறவி ஒத்தரேதான் இருக்காரு.

கேதா. யாரது?

தபா. யாரா நம்ம கீழத்தெரு சாம்பமூர்த்தி அய்யர் தான்.

பங். (சிரித்து) ஓ அவரா? அவருக்கு லெட்டர் எழுதறவா இருந்தான்னா உன்மேலே கோவம் வரப்போறது.

தபா. அவர் ஏகாங்கி. வாஸ்தவந்தானுங்க. ஆனா அவரைப்போலே இருக்கறவங்க எத்தினிபேரு தபால் காரன்மேலே சீறி விழறாங்க.

கேதா. லெட்டர் பைத்தியம்தான் தபால் காரன் மேலே சீறிவிழச் சொல்லறது. வேறே ஒண்ணுமில்லே.

தபா. ஆனா சாம்பமூர்த்தி அய்யருக்கு லெட்டர் பைத்தியம் இல்லிங்களா? என்ன அவரைப்போல லெட்டர் பைத்தியம் பிடிச்சவங்க வேறே இருக்க மாட்டாங்க.

பங். பின்னே அவருக்கு மட்டும் உன்மேலே கோபம் வரலேன்னு சொல்லறையே.

தபா. அதுதானுங்க சூச்சுமம். தன்குறைக்குத் தனே மருந்து தேடிகிட்டாரு, இத்தனே பேருக்குத் தபால் வருதுங்களே அவர் ஒத்தருக்குத்தான் நாள் தவறினாலும் லெட்டர் தவர்ரதில்லிங்க

கேதா. நிஜம்போலே சொல்லறயேப்பா. எழுதறதுக்கு ஆள்கிடையாது. லெட்டர் தவர்ரதில்லேயா?

தபா. மத்தவங்களே எதிர்பார்க்கற வம்பு வச்சுக் கிட்டாத்தானே அவரு? தினம் தவறாம வெவ்வேறே பேரிலேதானே லெட்டர் எழுதறாரு.

கேதா. அட பர்விமனுஷர்!

தபா. இப்படி இருந்தா தபால்காரன்மேலே கோவிச்சுக்கற நிர்பந்தம் எதுங்க?

பங். கிழவர் லேசுபட்டவர் இல்லே போலேருக்கே.

தபா. பராங்குசம் சொல்லறது என்ன தெரியுதுங்களா? லெட்டர் வராட்டி எங்கிட்ட கோவிங்சுக்கவும வேண்டாம். வந்தா பராங்குசத்தை ஆகாசத்தில் தூக்கி வைக்கவும் வேண்டாம், லெட்டர் வர்ரதும் வராததும் எங்கையிலயா, நீங்கள் சொல்லுங்க.

கேதா. வாஸ்தவந்தான்.

தபா. நம்ப பண்ணை வீட்டுப்பையன் இருக்கே,—அதான் இப்போ புதிசாக் கலியாணமாச்சே,—அந்தப் பையனுக்குப் பராங்குசம்னு குலதெய்வந்தான். அவ்வவளவு விசுவாசம். காப்பி உபசாரம் பண்றதும் கலர் வாங்கிக் குடுக்கறதும், வெத்தலே போடச் சொல்லறதும் இந்த காலத்திலே இப்படி எல்லாம் யாரு கொடுப்பாங்க சொல்லுங்க.

பங். எது, யோகந்தான் பராங்குசத்துக்கு.

கேதா. அதுதான் நம்மையெல்லாம் கவனிக்க மாட்டேங்கறுன்.

தபா. இவ்வளவும் எதுக்குங்கறேங்க! அந்தப் பொண்ணு, அதான் புதிசாக்கலியாணமாண பொண்ணு தினம தவறும ஐயாவுக்கு லவ் லெட்டர் ஊர்லேருந்து எழுதுது. அதை எடுத்திட்டு வரானலே பராங்குசம்! அவன் தெய்வப்பிறவி இல்லாம வேறே என்ன?

கேதா. பாத்தையா பங்கஜம், பராங்குசத்தை லேசில ஏமாத்த முடியாது.

பங். போளுப்போறது, ரொம்ப நேரமா வெயில்லே நிக்கருன். கொஞ்சம் மோர்த்தண்ணி தரேன், சாப்பிட்டுப் போ, பராங்குசம்.

தபா. எடுத்து வையுங்க அம்மா. நான் அடுத்த வீடு வரைக்கும் போயிட்டு வந்துடறேன். அப்போ நீர் மோருக்கு அவசியம் இருக்கும்.

கேதா. என் அப்பா, அடுத்த வீடு ரொம்ப உஷ்ணம்போலே சொல்லறயே.

தபா. அதையேன் கேக்கறீங்க. நல்லது பொல்லாதது எல்லாத்துக்கும் பொறுப்பேத்துக்கறது பராங்குசந்தானுங்க. எங்கே கடன் பட்டாரோ பாவம் வக்கில் நோட்டிசு வந்திருக்கு. கொண்டு குடுத்தா அவரு விசுவரூபம் எடுக்கப் போருரு—உம், வரேம்மா ஒரு நொடியிலே. [போகிருன்]

பங். ஐயோ பராங்குசம், நல்ல பராங்குசம் [போய்க் கொண்டே] அவன் வரதுக்குள்ளே அவனுக்கு மோர் எடுத்திண்டு வரேன்.

சீனு. [வந்துகொண்டே] என்ன கேதாரி, போஸ்ட் மேன் வந்தான இந்தப் பக்கம்?

கேதா. அடுத்த வீட்டுக்கு ஏதோ ரிஜிஸ்டர் லெட்டர் குடுக்கப் போயிருக்கான். வந்துடுவான் இப்போ.

சீனு. சே, வரவர, பதிஞெரு மணி பண்ணிரண்டு மணின்னு ஆக்கிடருன்.

கேதா. அதுதான் தாங்காம அவனைத் தேடிண்டு கிளம்பிட்டயோ.

சீனு, என்னப்பா, ஏதோ உண்டு இல்லேன்னு தெரிஞ்சுபோனு அப்பறம் நிம்மதியா மத்த வேலையைக் கவனிக்கலாம்.

கேதா. அது வரைக்கும் வேலை ஓடமாட்டேங்கறதே.

சீனு. வேலையில் புத்தி பிரவேசிச்சாத்தானே. எப்ப பாரு, தபால்காரன் வரானேங்கற பிரமைதான்.

கேதா. அதுவும் நீ பத்திரிகைகளுக்கு எழுதி எழுதி தள்ளறவன். கேப்பானேன். தபாலை எதிர் பார்த்துத் துடி துடிக்கறதுக்கு.

சீனு. என்னதான் சொல்லு கேதாரி, இந்தத் தபால்காரன் சுத்த ராசிகெட்ட தபால்காரன்னு தான் சொல்லுவேன்.

கேதா. ஏன், நீ அனுப்பற கட்டுரை ஒண்ணும் பத்திரிகையில் பிரசுரமாக மாட்டேங்கறதே.

சீனு. என்னப்பா, அனுப்பறதெல்லாம் திருமபித் திரும்பி வரதுன்னு போஸ்ட்மென் ராசியில்லாம வேறே என்ன சொல்லு.

கேதா. நீ நல்லதா எழுதி அனுப்பினு ஏன் திரும்பி வரது.

சீனு. போஸ்ட்மென் ராசிதான் நல்லது அனுப்பிச் சாலும் பிரசுரமாக மாட்டேங்கறது. வேறே போஸ்ட் மென் வந்தாலும் விமோசனம் இருக்கும்.

கேதா. அப்படி திரும்பி வரதுன்னுதான் தெரிய றதே. அவனைத்தேடி வருவானேன்.—இதோ பராங்கு சமே வந்துட்டானே. என்னப்பா, அடுத்தவீட்டு சமா சாரம் என்ன ஆச்சு?

தபா. நல்லவேளை, அவருக்கே வெக்கமாய் போச்சு போலேருக்கு மூச்சுக்காட்டாம வாங்கிட்டாரு.

சீனு. ஏதேனும் இருக்காப்பா?

தபா. ஓ, நீங்களா! ஏதோ ஒரு புக்போஸ்ட் இருக்கு, பாத்துச் சொல்லறேன்.

சீனு. புக்போஸ்டா? சரிதான், அதுவும் திரும்பி வந்துடுத்தா. நான் சொன்னது எப்படி கேதாரி?

தபா. இந்தாங்க ஸார்.

சீனு, அடேடே, 'சஞ்சிவன்' பத்திரிகைன்னு! என் கதை வந்திருக்கா என்ன? (கவரை உடைத்து பார்க்கிறுன்) கேதாரி, இதோ பார்த்தாயா, என் கதை பிரசுரமாயிருக்கு, என் கதை பிரசுரமாயிருக்கு!

கேதா. எங்கே பார்க்கலாம்.

சீனு. இதோ, 'விஷக்கொடி' 'சீனு'—எப்படி?

தபா. என்னங்க, ஒரே குதியாக் குதிக்கறிங்க. நல்ல சமாசாரம் வந்திருக்குதா?

சீனு. நல்லச் சமாசாரமா. பராங்குசம், நீ போற போது கட்டாயம் நம்ம வீட்டுக்கு வந்துட்டுப்போ. நேரே போயிடாதே—கேதாரி வரேன்.

கேதா. சந்தோஷம் தலைகால் தெரியலை பயலுக்கு. ஒரு நிமிஷத்துக்கு முன்னாலேதான் பராங்குசத்தைச் சபிச்சிண்டிருப்பான்.

தபா. பாரங்குசத்துக்கு சாபமும் ஒண்ணுதான், வாழ்த்தும் ஒண்ணுதானுங்க. அவங்க வருத்தம் என்னைக் கோவிச்சாவது மாறட்டுமே. அதுவே எனக்கு திருப்திங்க.

5

வண்டிக்காரன்

வண்டிக்காரச் சடையன். ஹை, ஹை, ஆங். த்ட, த்ட, டே நடராஜா, ஏண்டா இப்படி அன்ன நடை போட்றே. சடையன் குரல் கேட்டா பஞ்சகல்யாணிக் குதிரையாப் பறக்கவேணுமா?

ஐயா. (மண்டையில் இடிபட்டு) அப்பா, ஆ! சடையா கொஞ்சம் பாத்து ஓட்டப்பா.

சடை. பாத்து ஓட்டாமலா எசமான். நம்ம ரோடு தான் உங்களுக்குத் தெரியுமே.

ஐயா. நொண்டு நொடியை ஒதுக்கி ஓட்டேன். வீடு சேர்றதுக்குள்ளே மண்டை போயிடும் போலேருக்கே.

அம்மா. குலுக்கற குலுக்கல்லே உடம்பெல்லாம் பூட்டுப்பூட்டா கயண்டு போயிடும்போல ஆயிடுத்து. வேணும்னே நொண்டு நொடியா பாத்து ஓட்றயா சடையா?

சடை. என்னம்மா அப்படிச் சொல்றிங்க. பாத்து விடறதுக்கு நொண்டுநொடி குறைவா என்ன ரோட்டிலே அதுவும் மழை வேறே பெஞ்சதிலே நொடி இன்னும் அதிகமாப் போச்சு.

ஐயா. அப்பா!

சடை. என்னங்க மண்டையிலயா பட்டுது மறுபடியும்?

ஐயர். விலா எலும்பு போச்சு! போச்சு ஆ!

அம்மா. லக்ஷணந்தான். என்னையா முறத்திலே போட்டுப் புடைக்கற மாதிரி ஆட்டி எடுத்திண்டிருக்கு.

சடை. ஆனைப்பட்ட நம்ம வில்வண்டிக்கே இப்படியானு சாதாரண அச்சு வண்டிங்கள்ளாம் இந்த ரோட்லே என்ன பாடுபடும் பாத்துக்குங்க.

ஐயா. அதை வேகமாகவாவது ஓட்டித் தொலையேன். சடையா, அவ்வளவுக்காவது சித்திரவதை குறையும்.

அம்மா. அதுதான் சாக்குன்னு மாட்டை அடிக்க ஆரம்பிக்கப் போறான்.

சடை. என்னங்க. அப்படி லேசா வார்த்தையை உட்டுட்டிங்களே. பெத்த குழந்தைகூட அவ்வளவு அருமை இல்லிங்க நமக்கு. — நடராசன் முதுகில் ஈ உக்காந்தாக்கூட சம்மதிக்க மாட்டேனே, என்னமாம்மா அதை அடிப்பேன்?

அம்மா. ஆமாம். வண்டிலே பூட்டியாச்சானு அடிக்காம ஓட்றதேது? அடியாத மாடு படியுமா எங்கேயானும்?

சடை. ஊர் மாட்டையும் சொல்லி நடராசனையும் சொல்லாதிங்கம்மா. மாடுன்னு எல்லாம் மாடாயிடுமா? அதுவும் சிடையன கை படறதுதான் தாமசம். நடராசன் சிட்டாப் பறக்கும் தெரியுங்களா. அதுக்காக குண்டும் குழியும் இருந்தா என்ன செய்யறதுங்க? ஹை, ஹை!

ஐயா. வண்டி என்னடா குடைசாயப் பாக்கறது?

சடை. அம்மா, நீங்க கொஞ்சம் முன்னாலே தள்ளி உக்காரணுங்க. மூப்பாரம் குறையுது.

அம்மா. ஏண்டா, சித்தெ முன்னே தான் பின்னாலே தள்ளி ஊக்காரச்சொன்னே. அதுக்குள்ளேயும் முன்னாலே தள்ளி உக்காரணுமோ?

சடை. அப்போ சொன்னு அதுவா கணக்குங்க. முப்பாரம் அதிகமாயிருக்கும், சொல்லியிருப்பேன். நொடியிலே தூக்கிப் போடறதில்தான் முன்னேயும் பின்னேயும் காததூரம் தள்ளுதே.—ஆங், அப்படித்தான். இன்னும் கொஞ்சம் வந்திருங்க முன்னுக்கு.

அம்மா. உயிரையே வாங்கறயே ஒரேயடியா.

சடை. முன்னும் பின்னும் நவந்துக்கிட்றதுக்கே இவ்வளவு சிரமப்படறிங்களே. மாடு என்ன சிரமப்படும். என்னடா, நடராசன் இவ்வளவு மெதுவா போக மாட்டானேன்னு ஓசனை பண்ணினேன். பாத்தா முப்பாரம் குறையுது. வண்டி குடைசாயருப்பல இருந்தா மாடு எப்படி இளுக்கும் சொல்லுங்க.

அம்மா. நீ முப்பாரம் பின்பாரம் சரிபண்றதுக்கு தராசு கெட்டது கேடு போ.

சடை. தராசாவது கொஞ்சம் முன்னே பின்னே இருந்தா பாதகமில்லிங்க. ஒத்தை மாட்டுவண்டி மட்டும் தங்க நிறைன்னு தங்க நிறையா இருக்கணும். வேறே என்ன பாவமும் பெரிசில்லிங்க. ரிசபம் களுத்து நோகும்படி பண்ணக்கூடாது. வாயில்லாச் சீவன், நாம வைக்கற அருமை தானுங்களே அதுக்கு.

ஐயா. அவன் சொல்லருப்பல, பாரம் சரியானப்பறம்தான், அது வேகமாப்போக ஆரம்பிச்சிருக்கு.

சடை. எசமான், நீங்க கொஞ்சம் பின்னுக்குப் போகணும். கொஞ்சம்... ஒரு இஞ்சு நகந்தாப் போதும்.

ஐயா. இப்போ சரிதானு ?

சடை. ஆங், அவ்வளவுதான். இப்போ சரியா யிருக்குங்க.

ஐயா. என்டா, நீ பாரம் கூடறது, குறையற துன்னு சொல்றதெல்லாம், அளப்புத்தானு ?

சடை. என் எசமான் அப்படிக் கேக்கறிங்க ?

ஐயா. நான் இம்மிகூட நகராம சரிதானுன்னு கேட்டேன். ரொம்ப தாராளமா சரிங்கறயே.

சடை. நீங்க இப்படியெல்லாம் பரிசோதனை பண்ணிஞ நான் என்ன செய்யறதுங்க. மாட்டுக்கு நல்லதைச் சொல்லுவேன்—அவ்வளவு தானுங்க சடையனுக்குத் தெரிஞ்சது.

ஐயா. என்ன, சடையா, தமாஷுக்குச் சொன்னு அதுக்குள்ளேயும் கோவிச்சுக்கறயே.

சடை. கோவம் ஒண்ணும் இல்லிங்க. ஹை, ஹை

ஐயா. மாட்டுக்கு இன்னிக்கு, சரியான நடை, இல்லையா, சடையா ?

சடை. போகவர பத்து மைலுக்கு மேலே இருக்குமே. வீடுபோன உடனே என்ன செய்யப்போறேன் தெரியுங்களா. நல்ல சுடச்சுட வெந்நி வைச்சு நடராசன் காலுக்கு ஒத்தடம் குடுக்கப்போறேன். அப்பறம் தானுங்க மத்தகாரியம்.

அம்மா. அதுக்குக் காலம்பற தினி ஏதேனும் வச்சியா சடையா ?

சடை. தீனியா, நல்லாக் கேட்டிங்க. நான் நடராசனுக்கு பாத்துப்பாத்து தினி வைக்கறுப்பல ஒத்தொத்தனும் வைச்சான்னு ஊர்லே நோஞ்ச மாடு ஏதுங்க. புறப்

பட்றபோது பருத்திவிதையும் புண்ணாக்கும் கலந்து வைச்சேன். போதாதுக்கு கையோட வைக்கோலென்ன, பருத்திவிதை என்ன, எல்லாம் எடுத்திட்டு வரலே. என் வயத்துப்பசிகூட எனக்குத் தெரியாதுங்க. நடராசன் வயறு வாட்டவிடுவேனா என்ன ?

ஐயா. ஏன் சடையா, மாட்டுக்கு லாடம்கட்டி நாளாறதில்லே...?

சடை. நாள் ஒண்ணும் ஆயிட்லிங்க. ரெண்டு வாரம்கூட ஆகலே. அதுக்குள்ளேயும் கால் தாங்குது. இந்த வேலுசாமி லாடங்கட்டறது வரவர மோசமுங்க. ஒரே துருப்பிடிச்ச லாடம், ஒடிஞ்ச ஆணி.

ஐயா. எதுக்கும் விடுபோனதும், அவன்கிட்டே கொண்டு காட்டி லாடம் தேஞ்சுபோயிருந்தா மாத்தச் சொல்றயா ?

சடை. அதெல்லாம் நீங்க சொல்லவா வேணும். என்னிக்காவது நீங்க சொல்லி லாடம் கட்டிருப்பேனா ? பாருங்க பாருங்க, ஊருக்குள்ளே வந்திட்டோமாம். என்ன சிட்டாப் பறக்குது பாருங்க நட்ராசன்.

அம்மா. வீதியில் குழந்தைகளும் குட்டிகளும் விளையாடிண்டிருக்கு. கொஞ்சம் அட்க்கி ஓட்டு சடையா.

சடை. நடராசன் துள்ளி ஓடறானேன்னு பாக்கிறீங்களா. அதெல்லாம் எதிரே யாரையேனும் கண்டா சடன் ப்ரேக்தானுங்க.—மாட்டா அது. அந்த அறிவு நடக்கறவங்களுக்கு இருந்தாப் போதுங்க.

ஐயா. குரல் குடுத்திண்டே போ, சடையா.

சடை. ஹை, ஹை, ஏ தம்பி, என்ன மானம் பாத்துக்கிட்டே வரே? வீட்டில் சொல்லிட்டு வந்திட்டயா!

போம்மா, போம்மா. ஏ பெரியவரே, ரோட்டைப்பாத்து நடங்க. என்னப்பா கந்தசாமி, ஓகோ, புதுவேட்டியா? ஹா, ஹா, த்ஸு த்ஸு!

ஐயர். என்ன, நிறுத்திட்டே சடையா?

அம்மா். பீடி வாங்கிக்குடிக்கப் போருனே?

சடை. பீடியா? உங்க முன்னே எப்பவாவது பீடி குடிச்சிருக்கேனு. இதோ வந்துட்டேனுங்க. (போய்க் கொண்டே) கொண்டாப்பா.

அம்மா். பழம் நீங்க வாங்கச்சொன்னேளா் என்ன?

ஐயா். இல்லையே; பழம் எதுக்கு, சடையா?

சடை. (வந்துகொண்டே) நடராசனுக்கு தினமும் ரெண்டு கதலிப்பழம் குடுக்கறது வழக்கமாச்சுங்களே. இந்தாடா. அதுக்குத் தெரியுங்க. இந்தக்கடை எதிரே வந்தாச்சுன்னு தன்னுல நின்னுடும். ஹை, ஹை, இப்ப ஓடு பாக்கலாம். வீட்டுக்கு வா, அலுப்புத்திர காலுக்கு வெந்நி ஊத்தறேன்.

அம்மா. அப்பா, என்ன ஓட்டம் ஓட்றது!

சடை. முன்னுல ஏதேனும் வண்டியைக் கண்டாச் சாறு அதை முந்தி ஆகணுங்க நடராசனுக்கு. பத்து ரூவா பந்தயம்லே கெலிச்சுக் குடுத்திருக்கான் சும்மாவா?

ஐயா. பந்தயத்துக்கு வேறே விட்றயா நம்ம மாட்டை?

சடை. நாறு கூப்பிட்டா தப்புத்தானுங்க. மத்தவன் நம்மகிட்ட வீருப்பு பேசறபோது பின்வாங்கறதா? நடராசன் கௌரவத்தைக் காப்பாத்தறது என்பொறுப் பில்லே? பாத்திங்களா, கண்மூடிக் கண் திறக்கறதுக் குள்ளே வீடு வந்திருக்து. ஹாவ், ஹாவ், ப்ப, ப்ப,

த்ஸே. (தட்டிக் கொடுக்கருன்)— அம்மா, இறங்குங்கம்மா. எசமான், நான் வண்டியைக் கொண்டுபோய்க் கொட்டாயிலே கட்டிட்டு, நடராசன் காலைத்தேச்சு விட்றேன். அம்மா, அந்த தேங்கா மூடியிலே ஒண்ணு இங்கே போடுங்க, பசியாயிருக்கு. (போய்க்கொண்டே) ஹை, ஹை, த்ட், த்ட்.

எதிர் வீட்டுக்காரர். (வந்துகொண்டே) என்ன பண்ணையார்வாள், எங்கே காலம்பற ஸர்க்கூட் போயிட்டு வராப்பலே?

ஐயா. ஸர்க்கூட் ஒண்ணுமில்லே, பன்னீர் மலைக்குப் போயிட்டு வரோம், சுவாமி தரிசனத்துக்கு.

எதிர் வீட். ரொம்ப பேஷ், சனிக்கிழமை, ரொம்ப விசேஷமா இருக்குமே தரிசனம்.

ஐயா. எப்போதுமே அங்கே தரிசனம் விசேஷம் தானே. நிக்கறேளே, உக்காருங்கோ.

எதிர்வீட். பாதகமில்லே. நீங்க கொஞ்சம் சிரம பரிகாரம் பண்ணிக்குங்கோ.—வந்து, ஒரு ஒத்தாசை செய்யணும் நீங்க.

ஐயா. சொல்லுங்கோ, காத்திண்டிருக்கேன்.

எதிர்வீட். ஒருவாரமா நெல்லு கட்டிப் போட்டுக் கிடக்கு, மெஷினுக்குக் கொண்டுபோக முடியாம. அதென்ன கிட்டே இருக்கா, ஆள் தலையில் வச்சுக் கொண்டு போகணும்ங்கறதுக்கு?

ஐயா. ரொம்ப சிரமந்தான்.

எதிர்வீட். உங்க வண்டி மாடு கொஞ்சம் குடுத்தா உபகாரமாயிருக்கும்.

ஐயா. வண்டி மாட்டா!...ம்... இப்பத்தான் போயிட்டு வந்திருக்கு.— நீங்க போறது நேரம் பிடிக்குமோ ?

எதிர்வீட். நேரமா ஊஹும், அரைமணின்னு அரை மணிக்குள்ளே வேலையை முடிச்சிண்டு திரும்பிட மாட்டேனா ?

ஐயா. சரி, கொஞ்சம் இருங்கோ. (உள் பக்கம் பார்த்து) சடையா, சடையா !

எதிர்வீட். சடையன் எதுக்கு, நானே ஓட்டிண்டு போயிடுவேன்.

ஐயா. எப்படியும் வண்டி பூட்டிண்டு வரணு மோல்லியோ ?

சடை. (வந்துகொண்டே) கூப்பிட்டிங்களா எசமான்?

ஐயா. ஐயர்வுக்கு, நெல் அரைச்சிட்டு வரப்போக ணுமாம், வண்டியைக் கொஞ்சம் ஓட்டிக்கொண்டு வந்து கொடு.

சடை. இப்போ சொன்னா என்ன செய்யறதுங்க. மைபோடறதுக்காக கடையாணி சக்கரம் எல்லாம் கழட்டிப் போட்டிருக்கேன். மாடு வேறே கால்தாங்குது. ஒரு கால் லாடம் முழுக்க போயிடுத்து. அதுவேறே கட்டி வரணும்.

எதிர்வீட். வண்டிச் சக்கரத்தை மறுபடி மாட்ட என்னநேரம் பிடிக்கும் ?

சடை. உங்களுக்கென்ன, சொல்லுவிங்க. இப்பத் தான் வைக்கோலைப் பொசுக்கி மை குழைக்கலாம்னு பாத்தா விளக்கெண்ணெய் காணும். கடைக்குப் போயி விளக்கெண்ணெய் வாங்கி வரணும். அதுக்குமேலே மை குழைச்சு, அச்சுக்கெல்லாம் போட்டு சக்கரத்தை

மாட்டிடறதுன்னு லேசுங்களா வேலே. சாயங்காலம் ஆறுமணி வரைக்கும் ஆகுங்க.

ஐயர். என்ன, இப்படிச் சொல்லருனே !

எதிர்வீட். அப்பறம் உங்க இஷ்டம். வாடகை வண்டி பாத்துக்கறேன், என்ன செய்யறது! (போகிருர்)

ஐயா. பாத்தயா சடையா, ஐயரு கோவமாப் போருரு.

சடை. கோவமாப்போனு போக வேண்டியது தாங்க. அதுக்கு நாம் என்ன செய்யறது ?

ஐயர். ஆமாம்,-அதுக்குள்ளேயா, வண்டி மொத்தம் கழுட்டிப்போட்டுட்டே?

சடை. அதெல்லாம் கப்ஸா எசமான். இப்பதான் மாட்டே அவுத்துவிட்டேன், இவரும் வந்தாரு.

ஐயா. கடேசில, சாமி வரங்குடுத்தும் பூசாரி வரங் குடுக்கலேங்கற கதையாப்போச்சா, அவருக்கு ?

சடை. வண்டி தரதாகவா சொன்னிங்க அவர் கிட்டே ?

ஐயர். பின்னே, வந்து பல்லிளிக்கறபோது என்ன செய்யறது, சொல்லு.

சடை. நல்ல அளப்பு பாத்திங்க எசமான்! மாடு என்னத்துக்கு ஆகறது. அதுவும் நெல்லுமூட்டை சுமந்திட்டுப் போறதுக்கு நம்ம வில்வண்டிதான் கேக்குதோ ? சக்கடா வண்டின்னு நினைச்சாரா!

ஐயா. போருர் மனுஷன். நீபோய் மாட்டுக்குத் தீனிவச்சுட்டு, அப்படியே வீட்டுக்குப்போய், சாப்பிட்ற தானு சாப்பிட்டுட்டுவா.

சடை. இன்னிக்கு சாப்பாடு பண்ணே வீட்டிலே தானுங்க. அம்மாகிட்ட அப்பவே சொல்லிட்டேன். முதல்லே வண்டியை ஆத்துக்கு ஓட்டிக்கிட்டுப்போயி மாட்டையும் குளிப்பாட்டி வண்டியையும் அலம்பிட்டு வரேனுங்க.

ஐயா. எதிர்வீட்டு ஐயா கண்ணெதிரே, வண்டி ஓட்டிண்டுபோற வேணும்னே குடுக்கலேன்னு, தெரிஞ் சுக்கப்போருரு.

சடை. அதுக்கெல்லாம் பயப்படறது சடையன் இல்லேங்க.

ஐயா. எதுக்கும், வண்டியை தோட்டத்தாலே ஓட் டிண்டு போயிடு, சடையா.

சடை. சரிங்க. (போகிருன். சட்டென்று திரும்பி) நடராசனுக்கு கொம்புச்சலங்கை என்னிக்கு வாங்கற துங்க? அப்பேர்க்கொத்த மாடு, கொம்புச்சலங்கை இல் லாம போறதுன்னு அவமானமா யிருக்குங்க.

ஐயா. அம்மாகிட்ட பணம் வாங்கிண்டு போய் இன்னிக்கே வேணும்னலும், வாங்கேன். நான வேண் டாம்ங்கறேன் ?

சடை. நீங்களும் அம்மாகிட்ட சொல்லிடுங்க.

அம்மா, (வந்துகொண்டே) சடையன் வண்டியைப் பூட்டிண்டு எங்கேயேனும் போகப்போருன என்ன ?

சடை. ஆமங்க. தலைக்குமேலே கிடக்குங்க வேலே.

அம். வரபோது கடை வீதியில் ரவை ஆப்பிட்டா கொஞ்சம் வாங்கிண்டுவா.

சடை. ஆறு எங்கேயிருக்கு கடைவீதி எங்கே ருக்குங்க. இதுவேறே அலேச்சலா ?

அம். கொஞ்சம் பழையது இருக்கு சாப்பிட்டுட்டுப்போடா.

சடை. அதை அப்பவே சொல்றதுக்கென்னங்க? காலையிலே வயறு குளிர பளயது போட்டா ரொம்ப நல்லதுங்க. என்ன வேலை சொன்னாலும் செய்ய ரெடி சடையன். (போய்க்கொண்டே) இதோ ஒரு நொடியிலே வந்துட்டேன்.

[சற்று நேரம் பொறுத்து சடையன் வண்டியோட்டிக்கொண்டு செல்கிறான்].

கந்த. ஏ சடையா என்னப்பா, லகானைக்கையில் பிடிச்சதும் எதிர்லே வர ஆளைக்கூட கவனிக்க மாட்டேங்கறே? ஏறிக்கலாமா?

சடை. கேக்காம ஏறுடா. கந்தசாமிக்கு இல்லாத இடமா, வண்டியிலே!

கந்த. ஐயா அம்மா எல்லாரையும் பன்னீர் மலைக்கு ஓட்டிட்டு போனயாக்கும்.

சடை. ஆமாண்டா. இந்தா வெற்றிலைபாக்கு போட்றியா; ஏண்டா புதுவேட்டி இன்னிக்கு?

கந்த. புதுக்குளம் தெப்போற்சவமில்லே இன்னிக்கு? மறந்திட்டியா?

சடை. அடேடே, பன்னீர்மலை ஞாபகத்தில புதுக்குளம் ஞாபகமே மறந்துபோச்சு. தெப்போற்சவம் பாக்கப்போறயா நீ?

கந்தா. போகலாம்னு தான் நினைச்சிட்டிருக்கேன், உன் தயவு இருந்தா.

சடை. என் தயவு எதுக்கப்பா?

கந்த. தங்கச்சியும் 'தெப்பம் பாக்க வாணும்னு சொல்லிட்டிருக்கு.

சடை. யாரு, பொன்னுயியா? அவளையும் நடத்திய அழைச்சிட்டுப் போகப்போறே?

கந்த. எனக்குத் தெரியும், தங்கச்சி நடக்க நீ சம்மதிக்க மாட்டேன்னு.

சடை. என் அதிகாரத்திலே ஒரு வில்வண்டி இருக்கறபோது அவளை நடக்கவிடுவேனு? அப்படி விட்டா அவளைக்கண்ணாலம் கட்டிக்க எனக்கு என்ன யோக்கிதி?

கந்த. புதுக்குளம் வரைக்கும் வண்டி ஓட்டியார முடியுமா?

சடை. முடியாம என்ன? அதுக்குப் பின்வாங்கற வனு இந்தச் சடையன்?

கந்த. இல்லே, இப்பத்தானே மாடு பத்து மைல் நடந்து வந்திருக்கு.

சடை. எனக்காக நூறு மைல் வேணும்னாலும் நடக்கும் தெரியுமா; பொன்னுயி புறப்படத்தயாரா யிருப்பளா இப்போ?

கந்த. வீட்டிலே பண்ணை ஐயா இட்டமாட்டாரா?

சடை. அப்படித்திட்டறதாயிருந்தா, இத்தனை நாள்வேலை செஞ்சதுக்குத் தான் பலன் என்ன கந்த சாமி? என்ன பிரயாதம்? மிஞ்சினு நாலுமணி ஆகப் போகுது. இதுக்குக்கூடவா உரிமையில்லை.-ஹை, ஹை, ஓடு நடராஜா ஓடு! பொன்னுயி காத்திட்டிருக்கா.

[சற்றுப்பொறுத்து பண்ணை வீட்டில்]

எதிர்வீட். பண்ணையார்வாள், நம்ம சிநேகிதம் வீண் போகும்னு நான் நினைக்கவே இல்லை.

ஐயர். என்ன ஸ்வாமி, என்ன புதிர் போட்டறேள்?

எதிர்வீட். ஒரு சமயத்துக்கு வண்டி வேணும்னு கேட்டா ஆயிரம் சாக்குப்போக்குச் சொல்லித் தட்டிக் கழிச்சேளே.

ஐயர். நான் இல்லேன்னு சொன்னேனு. வண்டிக் காரன் வண்டியை பூட்டுப்பூட்டாக் க்ழட்டிப் போட்ட்ப் பறம், என்ன செய்யறது சொல்லுங்கோ.

எதிர்வீட். வண்டியைப் பூட்டுப் பூட்டாக் கழட்டின வன்தான் புதுக்குளம் தெப்பம்பாக்க வண்டி ஓட்டிண்டு வந்தானே ?

ஐயர். புதுக்குளத்துக்கா? தெப்பம் பார்க்கவா? ஒண்ணும் புரியலேயே, நீங்க சொல்றது.

எதிர்வீட். புதுக்குளம் தெப்பத்துக்கு உங்க அருமை வண்டிக்காரன் உங்க அருமை வண்டியை ஓட்டிண்டு வந்ததை இந்தக் கண்ணால்தான் பார்த்தேன்.

ஐயர். நிஜமாவா ? வண்டியை அலம்பிண்டு வரேனனு ஆத்தங்கரைக்குன்னு ஓட்டிண்டு போனுன்!

எதிர்வீட். வண்டியிலே அவன் மட்டும் இருந்தா தேவலேயே. சிநேகிதா என்ன, பொண்டுக என்ன ?

ஐயர். சடையன் இதுக்கெல்லாமா உபயோகப் படுத்தருன், வண்டியை ?

எதிர்வீட். நீங்க என்னடான்னு ஒரு ஸ்நேகத்தைக் கருதி அரைமணிக்கு இரவல் தர யோசிக்கறேள். பாக்கப்போனு சம்பளத்துக்கு இருக்கற வேலேக்காரன்! சொந்தவண்டி மாதிரி மஜா பண்ருன்.

ஐயர். வரட்டும் சொல்றேன் அந்தப்பய.

[வண்டிச் சத்தம்]

சடை. ஹை: ஹை, பா, பா.

ஐயர். எங்கே போயிட்டு வரேடா. இத்தனை நேரம் கழிச்சு.

சடை. என்னங்க? ஓ, எங்கே போனேன்னு கேக்க றிங்களா. ஆத்திலே குளிப்பாட்டி வந்திருக்கேனே, பார்க்கலையா?

ஐயர். நேரே ஆத்துக்குப் போயிட்டு, நேரே திரும்பி வர இத்தனை நாழி, இல்லையா?

சடை. எசமான், பொய் எதுக்குச் சொல்லணுங்க. புதுக்குளம் தெப்பத்துக்கு போயிருந்தேன், போதுங் களா?

எதிர். பார்த்தேளா ஸார், நான் சொன்னது பொய்யா?

சடை. எசமான், இந்த ஐயர் புதுக்குளத்துக்கு எப்படி வந்தார்னு கேளுங்க. ரொம்ப யோக்யமா நெல்லு மிஷினுக்குப் போறதாச் சொன்னுங்களே. வண்டி இர வல் கேட்டது எதுக்கு தெரியுதுங்களா?

எதிர். ஏ, வாயை அடக்கிப்பேசு.

சடை. நான் உங்ககிட்ட ஒண்ணும் பேசலிங்க.

ஐயா. நீ புதுக்குளத்துக்கு எங்கே போனேன்னு, இதெல்லாம் என்னடா வம்பு?

சடை. எசமான், உங்ககிட்ட் சொல்லாம போனது தப்புத்தான். ஆனு இதுக்குகூட் உரிமையில்லிங்களா! நான் வேறே யாரையும் அழைச்சிட்டு போலிங்க. தாலி கட்டற பொண்ணுக்காகத் தானுங்க இந்த தப்பு செய் யத் துணிஞ்சேன்.

ஐயா. போடா, போடா, உள்ளேபோய் வேலை யைப்பாரு போ.

எதிர். பாத்தேளா, கொஞ்சம் இடம்குடுத்தா இவ னுக்கெல்லாம் என்ன துடுக்கு ஏறிப்போறதுன்னு!

ஐயா. அவன் சொல்றதும் நியாயம்தானேய்யா. என்னமோ அந்த மாட்டோட, வண்டியோட ராப்பகலா, பாடுபட்ருன். ஒருநா, அரைநா, அவன் சந்தோஷத் துக்குத்தான் உதவட்டுமே இது.

சடை. (வந்துகொண்டே) எசமான், ஒண்ணு கேக்க மறந்திட்டேனுங்க நாளைக்கு எனக்கு லீவு வேணுங்க.

ஐயா. லீவா, எதுக்கு?

சடை. வீட்டில் விருந்தாளுங்க வராங்க. நாளைக் குத்தான் அந்தப் பொண்ணுக்குப் பரிசம் போடப் போருேம்.

ஐயா. ஓகோகோ, நாளைக்குத்தான் நம்ம வீட்டுக் கும் நம்ம சம்மந்தி ஐயா வரதா இருக்காரு, ஸ்டேஷ னுக்கு வண்டியனுப்பணும்னு இருந்தேன்.

சடை. முன்னலேயே சொல்லியிருந்தா வேறே ஏற்பாடானும் பண்ணிருப்பேனுங்க. நாளைக்குத்தான் நல்ல நாளா இருக்கு.

ஐயா. அப்படியானு போய்ட்டு வா. ஸ்டேஷனுக்கு நானே வண்டி ஒட்டிண்டு போறேன்.

சடை. வேறே ஆளு வேணும்னு ஏற்பாடு பண்ண றேனுங்க.

ஐயா. வேண்டாம், நானே பாத்துக்கறேன்.

சடை. ஒட்டிப்பளக்கமில்லே, கொஞ்சம் சாக்கிர தையா ஒட்டணுங்க.

ஐயா. அதெல்லாம் சமாளிச்சுப்பேன், நீபோ!

[தரமதம்]

சடை. கந்நா, இவ்வளவு சீக்கிரம் எல்லாம் ஆகும்னு தெரிஞ்சா நான் ஐயாகிட்ட லீவே கேட்டிருக்க வேண்டாம்.

கந்த. கேட்டதிலே என்ன முழுகிப்போச்சு இப்போ?

சடை. ஐயா வீட்டுக்கு சம்மந்தி ஐயா வாராங்களாம். டேசனுக்குப்போய் அழைச்சுவர அவரே வண்டி ஓட்டிட்டு போகும்படி ஆயிருச்சு.

கந்த. அதுவும் மேலுதானே. சம்மந்தி ஐயர்வை அழைக்க நேரிலேபோறது செலாக்கியமில்லே.

சடை. செலாக்கியந்தான், இல்லேங்கலே—அட, யாரது இப்படி ஓட்டிவாரான் வண்டியை. கண்மண் தெரியாம! மாடு மிரண்டிருச்சா?—நம்ம நடராசன்லே! ஐயாவுக்கு அடங்காமல்லே ஓடியாருது!

[வண்டி வரும் சத்தம்]

ஐயா. ஹை, ஹை, ஒதுங்குங்க வண்டி, வண்டி!

சடை. எசமான், எசமான்!

ஐயா. (தூர இருந்து) சடையா, வண்டியை நிறுத்தேன், வண்டியை நிறுத்தேன்!

சடை. ஏ, நடராசா, நில்லு, நில்லு நடராசா!

கந்த. என்னப்பா, உன் குரல் கேட்டதுமே தயங்கி நின்னிருச்சு?

சடை. நடராசா, என்னப்பா? ஹை, தட், தட், (தட்டிக் கொடுக்கிறான்.) எசமான், அடி ஏதும் படலிங்களே.

ஐயா. சடையா, இப்போ நீ வராபோனா எங்கே கொண்டு மோதிருக்குமோ சொல்லமுடியாது. நல்ல வேளை தப்பித்து.

சடை. அதென்னங்க, நம்ம நடராசன் அப்படி மிரளாதுங்களே ஒருகாலும்.

ஐயா. எவ்ளோ குடையை விரிச்சிண்டு போயிண்டிருந்தான். பாத்ததோ இல்லியோ, ஒரேயடியா மிரண்டு ஓட ஆரம்பிச்சுடுத்து.

சடை. பாத்திங்களா, குடையைக்கண்டா அதுக்கு நடுக்கந்தானுங்க. அப்போ மெதுவா தட்டிக்குடுத்தா போதுங்களே!

ஐயா. எனக்கு ஒண்ணும் புரியலே. அது நெளிவு சுளுவெல்லாம், நீ தெரிஞ்சு வச்சிண்டிருக்கே.

சடை. மாடுன்னு எப்போதும் ஒரு கைப்பாடா இருக்கணுங்க. அது யந்திரமா என்ன, யாரும் ஓட்டறதுக்கு! உயிர்ச் சீவனில்லே?

ஐயா. நல்லவேளை, சம்மந்தி ஐயா வரலியோ, தப்பினேனோ! இல்லேன்னு மானக்கேடாயிருக்கும் போ.

சடை. நடராசா, நடராசா. ஏறுங்க எசமான், வீட்டண்டை கொண்டு உட்டுடறேன்.

6

வேலைக்காரன்

பொன். நானும் பாக்கறேன், நீங்க மாணிக்கத்தைக் கண்டிக்கறதே கிடையாது. மணி என்ன ஆகுது பாத்திங்களே; ஒம்பது மணி வரைக்கும்மா வராம இருப்பான் ஒரு வேலைக்காரன்?

முத்து. என்னமோ அவன் வரதும் வராததும் எங்கையில இருக்காப்பல பேசறயே, பொன்னம்மா; என்னைக்கேட்டு வாரானு என்னைக் கேட்டுக்கிட்டு போருனு?

பொன். அதுதான் நீங்க குடுக்கற எடம்ங்கறேன், உங்க கையில இல்லாம என்ன; நாம சொல்றதைக் கேக்க அவன் இருக்கானு, அவன் சொல்றபடி ஆடற துக்கு நாம இருக்காமா, தெரியலேயே எனக்கு.

முத்து. தினமும் ஒரு நாளைப்போல ஒம்பது மணிக்குத் தான் வரான், அவனை என்ன செய்யறது, நீயே சொல்லு.

பொன். என்ன செய்யறதா; மரியாதையா ஏழு மணிக்கு வராதாயிருந்தா வேலைக்கு வா, இல்லேன்னு நின்னுக்கோ—அப்படின்னு சொன்னு அரண்டு போயிட மாட்டானு அரண்டு!

முத்து. நின்னுக்கன்னு சொல்றது வேறயா; வேலையை விட்டுப் போயிடாதேன்னு கெஞ்சறதுக்கே நேரம் சரியாயிருக்கே...!

பொ. கெஞ்சறது வேறே லச்சணமா; என்னமோ சீமையிலேயே வேறே வேலைக்காரன் ஆப்படார்த-மாதிரில்லே பேச்றிங்க-கூரையிலே சோறு எறிஞ்சா ஆயிரம் காக்கா,

மு. வேலைக்காரங்க, வெள்ளைக்காக்கா ஆயிட்டாங்களே இந்தநாள்ளே,-ஆயிரம் காக்காய்க்கு எங்கே போறது?

பொ. இடும்பு பண்றதில குறைச்சல் இல்லே, பையனுக்கு ஒம்பதரை மணிக்குள்ளே பள்ளிக்கூடத்துக்குப் போகணும், யாரு கொண்டு விடறது; அப்புறம் நாம பத்து மணிக்கு வெளியில கிளம்பறதா வேறே இருக்கு.

மு. நான்தான் ஷண்முகத்தைப் பாத்திட்டு வரலாம்னு போறேன். உனக்கு என்னவாம்?

பொ. எனக்கென்னவா; பெரிய முதலியார் வீட்டில கல்யாணம் முடிஞ்சு ஊர்திரும்பி ஒரு வாரமாகப் போகுது. இன்னும் நான் கல்யாணம் விசாரிச்ச பாடில்லே, இப்படி வேலைக்காரன் இருந்தா வீட்டை விட்டு எப்படி நகர்றது சொல்லுங்க.

மு. ஓகோகோ, நீவேறே வீட்டில இருக்க மாட்டோயா; சரிதான் வீட்டுக்காவலுக்கு நான் இருக்கேன், நீ போயிட்டு வா.

பொ. எதுக்காகவோ; நீங்களே மகராசரா போய் வாங்க, நான் வீட்டைக் காத்திட்டு உக்கார்ரதுன்னு தான் ஏற்பட்டுப் போச்சே.

மு. அந்தப்புகார் வேண்டாம்னுதான், நான் வீட்டில இருக்கேன்னு சொல்லறேன்.

பொ. இப்படியெல்லாம் விண் தகராறு வரும்னு தான் நேத்து அவ்வளவு தூரம் படிச்சு படிச்சுச் சொல்லியிருக்கேன்-ஏழு மணிக்கெல்லாம் வந்துடுன்னு.

மாணி. (வந்துகொண்டே) அம்மா இந்தாங்கம்மா, அவரைக்காய் வேணும்னு ரொம்பநாளா சொல்லிட்டிருந் திங்களே, வர வழியிலே கண்ணிலெ பட்டுது, வாங்கியாந் தேன். பாத்திங்களா, எப்படிப்பட்ட பிஞ்சுன்னு.

பொ. அவரைக்காய் இருக்கட்டும். உன்னே எத் தனே மணிக்கு வரச்சொன்னேன். எத்தனே மணிக்கு வந்து நிக்கறே?

மா. என்னம்மா, கருக்கல்லே எளுந்திருச்சி, அரைகப் காப்பி கூட குடிக்காம ஓட்ட ஓட்டமா ஓடி யாறேன், நேரமாயிட்டு துங்கிறிங்க.

பொ. அவ்வளவு சீக்கிரம் தூங்கி எழுந்திருக்கறே போல இருக்கு துரை, காப்பி வேறே குடிக்கலியா-ஒம் பவுஷு!

மா. அ! ஆ அம்மா! இங்க வர்ரங்காட்டியும் நீங்க வச்சிருக்கிற காப்பி ஆறிப்புடுமேன்னு அந்த எட்டுலே ஓட்டமா ஓடியாந்தேன்.

பொ. மணி ஒம்பதரை ஆகப்போவுது, தூங்கி எழுந்திருந்ததும் வந்தாரும். காப்பிபோட்டு வச்சுக் கிட்டு நான் காத்துக்கிடக்கணுமா ஐயாவுக்கு! கேட்டயா கூத்தை.

மா. என்னங்க, அப்படி சொல்லிபோட்டீங்க! வூரு இருக்கற நிலைமையிலே ஏளெங்க என்னமோ தூங்கை யிலே அலாரம்வச்சுவச்சுகிட்டு தூங்கமுடியாது?காக்கா கத்தற சத்தத்திலே கண் முளிக்கிற நேரத்துலே எளுந்

திருச்சு ஓடியாறேன். எவேதா மவராசி நீங்களர் பாத்து ஒரு கெடியாரம் வாங்கி கொடுத்தா......

மு. நீ விட்டில கூட தூங்கறதுன்னு வச்சிட்டிருக்கயா, மாணிக்கம்!

மாணி. அப்ப என்னங்க இங்கே முளுக்க முளுக்க தூங்கறேன்னு அர்த்தமா.

பொ. சரி, சரி, பையன் பள்ளிக்கூடம் போக நேரமாச்சு. காலாகாலத்திலே அவனுக்கு உடுப்பெல்லாம் போட்டு பள்ளிக்கூடத்துக்கு அிளச்சுக்கிட்டுபோ.

(போய்க்கொண்டே)

மாணி. செய்யுங்க!

பொ. செய்யறதா; யாரு நாஞ நீயா?

மா. நாந்தானுங்க-இருக்கிறேனே, எள்ங்கறதுக்கு; முன்னல எண்ணெயா நிக்க மாட்டாஞ மாணிக்கம்!

மு. (உரக்க) மாணிக்கம், அப்படியே நீ வரபோது கொஞ்சம் சீவல் பாக்கு வாங்கிட்டுவா மறக்காதே......

மா. (திரும்பி வந்துகொண்டு) செய்யுங்க-ஓ சீவப் பாக்கா! நேத்து வாங்கிட்டு வந்து அலமாரியில வைச்சேனே, பாக்கலே?

மு. நேத்து வாங்கிட்டு வந்தயா? நான் சொல்லலேயே!

மா. இதெல்லாம் சொல்லித்தான் செய்யணுமா, எங்க? ஐயாவுக்கு எவ்வளவு பாக்கு நிதம் வேணும்ங்கறது எனக்கு தெரியாதுங்களா; நேத்து வெத்தலே போடறதுக்கு பாக்கு தேடி தேடிப்பார்த்தேன். ரவை கூட அம்படலிங்க. அதுக்குத்தான் வாங்கியாந்து ஷ்டாக்கா வச்சுட்டேன். (போகிறுன்)

மு. மாணிக்கத்தைத, என்னதான் சொல்லு, பொன்னம்மா, வேலையில, அவன் கருக்கா இருக்கறது, அது, தனிதான்.

பொ. ஆமாம் அவன் வெத்திலே போடறத்துக்கு நம்ப கணக்குலே சிவல் பாக்கு வாங்கிட்டு வந்திட்டாவில்லே, கேப்பானேன்!

மு. சிவல் வாங்கி வந்த தோடயா; உனக்கு அவரக்காய் வேறே வாங்கி வர்லே!

பொ. ஆமாம், அவரைக்காய் வாங்கிட்டு வரலேன்னு தான் அழுதுது இங்கே.

மு. வாஸ்தவத்திலே நல்ல பிஞ்சாப்பாத்துத்தான் வாங்கி வந்திருக்கான். என்னமோ குறைப்பட்டுக் கறயே, அதை வேணும்னு, உப்புலே சுண்டி, வத்தலா போட்டுவையேன்.

பொ. இந்த அவரக்காயே சுண்டவும் சுண்டவாமே என்னவோ! நாலணு அவரைக்காயிலே ரெண்டணுசுங்கம் அடிச்சிருப்பான். தெரியாதா?

மாணி. (வந்து கொண்டே) அம்மா, சிவக்கொளுந்து வரமாட்டேங்குது பள்ளிக்கூடத்துக்கு.

பொ. பள்ளிக்கூடத்துக்கு போகமாட்டானு; நல்லாருக்கே கதை, என்ன செய்யப்போருன் வீட்டிலே?

மா. வீட்டிலே இருந்தாத்தானுங்களே, வரமுடியாதுன்னு சொல்லிட்டு கோலி குண்டை எடுத்திக்கிட்டு ஓடிருச்சு.

பொ. கோழிக்குஞ்சையா! சிவ சிவா அவன் ஓட்ற வரைக்கும் நீ பாத்திண்டிருந்தயோ, எண்டா?

மா. கோளிக்குஞ்சு இல்லே. அம்மா கோலி-கோலி குண்டு......அத்தை எடுத்துக்கிட்டு ஓடிடிச்சு......ஒரே ஓட்டமா. நான என்ன செய்யறதுங்க. வரேன்னு சொன்னு அளேச்சுக்கிட்டுப்போவேன். அடிச்சு அளேச்சுக்கிட்டு போவ நான் என்ன அண்ணுவியா?

பொ. பாத்திங்களே சேதியை; பள்ளிக்கூடம் போகமாட்டேன்னு அவன் ஓடருனும். இவன் வேடிக்கை பாத்துக்கிட்டு நிக்கருனும்.

மு. உன்மவன், பள்ளிக்கூடத்துக்கு மட்டம் போட்டா மாணிக்கம் என்ன செய்வான், பாவம்?

பொ. இவன் காலாகாலத்தில வந்தால்லே புள்ளேக்கு பள்ளிக்கூடம் போகற நினேப்பு ஏற்படும்.

மா. இப்பவே ஏன் வந்தேன்னு அடிக்குதுங்க சின்னேயா. சீக்கிரம் வந்திருந்தா உண்டு இல்லேன்னு பண்ணிருக்கும்.

மு. மாணிக்கம், அவன் போருப்போருன். நீ மெத்தையில போய் என் சட்டை, அங்கவஸ்திரம் எல்லாம் எடுத்திட்டுவா.

மா. செய்யுங்க!

மு. உன்னே எடுத்துகிட்டு வரச்சொன்ன, நான் செய்யறதா, எடு செருப்பு.

மு. அம்மாகூட வெளியில கிளம்பத் தயாரால்லே இருக்காங்க போல இருக்கு.

பொ. நேத்து அவ்வளவு தூரம் சொல்லிருக்கேன். புதுசா கேக்கருன் பாருங்க.

மா. அப்போ, ரெண்டுபேரும் வெளியில போயிட்டா.

பெர். நான் வரதுக்கு நேரம் ஆனாலும் ஆகும் வீட்டை சாக்கிரதையாகப் பார்த்துக்க. நடுவில எங்கே யேனும் சவாரி விட்டுட்டுப்போறே.

மா. செய்யுங்க (போய்க்கொண்டே) அட சங்கட்ட மால்லபோச்சு.மத்தியான ஆட்டத்துக்கு ஜினிமாவுக்குப் போவலாம்லே ப்ளான் போட்டிருந்தேன்-அது பனலா யிடுச்சு. ஊம்.

பெர். இந்தப் பய பள்ளிக்கூடத்துக்குப் போகாம சுத்துவான்னு தெரிஞ்சா அவனேயும் எங்கூட அழேச் சுக்கிட்டு போயிருப்பேனே.

மா. (வந்து) இந்தாங்க, சட்டை, அங்கவஸ்திரம்... செருப்பு.

மு. செருப்பு யாருடா கொண்டாரச்சொன்ன?

மா. எசமான்தானே சொன்னீங்க......

மு. எடு செருப்பு......

மா. செய்யுங்க......இதே எடுத்துப்போங்க.

மு. சரி சரி இதை வச்சுட்டு,மாடியிலேருந்து அந்த ஸ்லிப்பர் ரெண்டையும் கொண்டுவந்திடேன்; கொஞ்சம்.

மா. செய்யுங்க என்னங்கா, ஸிலுப்பருங்களா? அது சமையலறையிலில்லே இருக்குங்க.

மு. என், ஸ்லிப்பர், சமையலறைக்கு எதுக்குப் போகணும்? ஏன் பொன்னி?

பொ. எனக்கென்ன தெரியும்; உங்க ஆளு கொண்டு போய் பத்திரமா வச்சிருப்பான் அங்கே— ஏண்டா போச்சு?

மா. என்னம்மா! என்னை கேக்கறிங்க. நீங்க தானுங்களே—மோரு சிலுப்பிட்டு வச்சிங்க சமையலறை யிலே—சிலுப்பாதை.

மு. (சிரித்துக்கொண்டே) அட பிரகஸ்பதி-சிலுப் பாதில்லே......என் ஜோடு......கால்லே போட்டுக்கறது. ஹ......ஹா.

பொ. சிரியுங்க—உங்க—ஆளு சமத்துக்கு.

மா. என்னுங்க—என்னை மடையனுக்கறிங்க......... அத்தை முன்னடியே சொல்லி யிருந்தா...ஹி...

பொ. நீங்க இப்படி அவனுக்கு எடம் கொடுத்தா அவன் ஏன் குதிரை ஏறமாட்டான்?

மா. மாணிக்கத்துகிட்ட நாயமான வேலை சொல் லுங்க உடனே செய்யாட்டிக் கேளுங்க. செருப்பைத் தூக்கறதும் கால் பிடிக்கறதும்......இதெல்லாம் செய்ய றேன்னு தெரிஞ்சா ஊர்லே சிரிச்சுப் போகும்.

பொ. அடேடே, அவ்வளவு நாகரிக வேலைக்காரனு நீ; வீட்டை ஒழுங்கா பாத்துக்கறது உன் நாகரிகத்திலே சேர்த்தியா அதுவும் இல்லையா?

மானி. நான் மாட்டேன்னு சொன்னேனு எப்ப வானும்? சாமான்களை மட்டும் பத்திரமா உள்ளே வச்சு பூட்டிட்டுப்போங்க, அப்பறம் அதுகாணும் இது காணும்னு புகார் வரலாம்.

(தாமதம்)

மாரி. (வந்துகொண்டே) ஏ! மாணிக்கம், என் னப்பா காலை நேரத்தில இப்படி உக்காந்துகிட்டே தூங்கி வழியறே!

மா. யாரு; ஓ மாரியா?

மாரி. என்ன, வீட்டிலே ஐயர் அம்மா ஒருத்தரும் இல்லையோ?

மா. இல்லேப்பா. ரெண்டு பேரும் நம்மைக்காவல் வச்சுப்போட்டு வெளியில போயிருக்காங்க.

மாரி. அதுதான் நீ ஆனந்தமா சோபாவில சாய்ஞ்சுக்கிட்டுத் தூங்கறயாக்கும்.

மா. நீயும் அந்த சோபாவிலே உக்காரப்பா, நிக்காதே, புளுக்கமா இருந்தா பேனே வேணும்னு போட்டுமா?

மாரி. தேவலையே மாணிக்கம், ரொம்ப பிரியாத் தான் எல்லாம் நடக்காரப்பல இருக்கு.

மா. பின்னே, நமக்குப்போக மிச்சந்தானப்பா.

மாரி. நான் இப்ப வேலையை விட்டுட்டேன் தெரியு மில்லே?

மா. வேலையை விட்டுட்டயா; சரிகைத்தலேப்பா வீட்டிலே இருக்கறதால்லே நினைச்சிட்டிருக்கேன்.

மாரி. நாம இருக்கணும்ங்கற ஆசை அவங் களுக்கு இல்லாதபோது நாம எதுக்கப்பா இருக்கிறது; அய்யா முகம்பாத்துக்கற கண்ணுடியிலே நான் முகம் பாத்து மீசையை ஒளுங்கு படுத்திகிட்டிருந்தேனும். பிர மாதமா கோவம் வந்திருச்சு ஐயாவுக்கு.

மா. என்னென்னலும், அதெல்லாம் அவங்க தலே மறைவில செய்யணும் தம்பி.

மாரி. அவரு கீழே இறங்கிப் போயிட்டாராக்கும்னு நினைச்சேன் அப்பா. திடீர்னு ஏதோ எடுக்க வந்து தொலேஞ்சுட்டாரு. அதுக்கு நானு ஜவாப்தாரி.

மா. உட்னே டிசிமிச் பன்னிட்டாரா என்ன?

மாரி. அவரு டிச்மிச் பண்றதென்ன; என்னமோர் தாறுமாறுக் கப்பாடுபோட்டாரு, சரிதானப்பா உம்ம வேலையுமாச்சு நீருமாச்சுன்னு வெளியே வந்திட்டேன்.

மா. அப்பறம் இப்ப என்னப்பா செய்யறே?

மாரி. வேலைக்கா பஞ்சம், அண்ணே, ஹாய்யா சேட் கம்பெனியில வாச்மென் உத்தியோகம், பதினைஞ்சு ரூபா சம்பளம், உடுப்பென்ன, டவாலி என்ன, வில்லை என்ன, ஒரே மோக்ளாதான்.

மா. தேவலையே உன்பாடு.

மாரி. உனக்கென்ன சம்பளம் கிடைக்குது இங்கே.

மா. என்ன, எட்டு ரூவா தாராரு, மாசம், மேலே ஒரு ஆறு ஏழு ரூபா தேறும், அப்படி அப்படித்தான்.

மாரி. எனக்கும் மேல் வரும்படிக்கு குறைவில்லே. வரவங்க போறவங்க கிட்டே தண்டிப் பறிச்சு நாளைக்கு ஒண்ணு ரெண்டு சம்பாதிச்சுடுவேன்.

மா. வீட்டில வேலை செய்யற போதே அவ்வளவு மேல் வரும்படி தட்டினவனாச்சே, இதில கேட்பானேன்.

மாரி. வீடுன்னா அதுமாதிரி வேறேதான், ஒருதரம் கடைக்கு போயிட்டு வந்தா குறைஞ்சது ரெண்டணா லாவமில்லே.

மா. ஆமா தம்பி, நமக்கும் காபி பலகாரம்னு செலவுக இருந்திட்டிருக்கு பாரு.

மாரி. நான் ஒண்ணு சொல்லுவேன் கேப்பயா மாணிக்கம்; இப்பகூட சேட்கம்பெனியிலே ஒரு வேலை காலியா இருக்கு. ஆள்கிடைக்காம திண்டாடிட்டிருக்

காங்க. பேசாமவந்திடு. சம்பளத்துக்கு சம்பளம். கௌரவத்துக்கு கௌரவம்.

மா. கௌரவம் கிடக்குதம்பி.வைக்காட்டா விடறது யாரு; ஆனா...

மாரி. வீட்டைவிட்டு வர இஷ்டமில்லையா?

மா. என்னதான் இருந்தாலும் சொந்தவீடுமாதிரி பளகினப்பறம் விட்டுட்டுப் போறதுன்னு மனசு கேக்கத்தான் மாட்டேங்குது.

மாரி. அப்பறம் உன் இஷ்டம். சொல்லலியேங்கற பொல்லாப்பு இல்லாம நான் சொல்லியாச்சு. அவ்வளவுதான்.

மா. யோசிச்சுச் சொல்றேன், சரிதானா?

மாரி. (தணிவாக) அடே, வண்டி ஏதோ வந்து நிக்குது. அம்மாதான் இறங்கறதா?

மா. அம்மாவா, டே மாரி இங்கேவந்து இந்த சோபாவை இந்தப்பக்கத்தில பிடி, சொல்றேன்.

மாரி. எதுக்கப்பா?

மா. பேசாம பிடி அப்பா...அந்தப்பக்கமா இளுத்துப் போடு. அப்படித்தான். இதைப்பிடி...

பொ. (வந்துகொண்டே) என்ன மாணிக்கம், சோபாவெல்லாம என்ன செஞ்சிட்டிருக்கே?

மா. நீங்களோ வெளியில போயிருக்கீங்களே, வெயில்லே காயப்போடுவோம்னு எடுத்துப்போட்டேனுங்க. அதுங்காட்டியும் மழை வந்திச்சு...அம்மா அம்மா வெவிலே புலிகாயுது-புலிமேலே மழை விழுந்து

பொ. என்னடா உளர்றே-புலியாவது பூனையாவது! சரி, இதோ பாரு நம்ம பெரிய முதலியார் வீடு

இருக்கல்ல, அங்கே பெரிய சா திக்காய்பெட்டி ஒண்ணு கிடக்குது, ஒரு ஆள் தூக்கற-மா திரி-போய் எடுத்திட்டு வந்திடணும் இப்பவேகூட போகலாம் தெரிஞ்சுதா.

மா. ஆள்காரன் கிடைப்பானில்லே, அங்கே?

பொ. ஆள்காரனு எதுக்கு?

மா. தூக்கிட்டு வரத்தான்.

பொ. ஏன் அது உன் தலையிலே ஏருதோ?

மா. பாத்தியா மாரி; ஓட்டை சாதிக்காப் பெட்டியைத் தலையிலத்தூக்கிக்கிட்டு நடுத்தெரு வோட வரணுமாம். என்ன, வேலேக்காரன் இதுக்குத்தானே இருக்கான்!

பொ. ஏன், சாதிக்காப் பெட்டியைத் தலையில தூக்கிஞ தலையில இருக்கற கிரீடம் நசுங்கிப்போயிடும்னு பயப்படறியா?

மா. எதுக்கிங்க வீண்பேச்சு. என்னால தூக்கிட்டு வாமுடியாதுன்ன, முடியாதுதான்.

பொ. ஆள்காரன் தலையில வச்சிட்டு வரதுக்கு நீ அண்ணுவியா, ஏண்டா?

மா. அம்மா, நான் கூலிக்காரன் இல்லே, வேலேக்காரன்.

பொ. வேலேக்காரனைப்பாக்கலே வேலேக்காரனே. எதுக்குத்தான் இருக்கேன்னு தெரியலே எனக்கு.

மா. வீட்டில வேலேக்காரன் இருக்கான்ங்கற கௌரவம் ஒண்ணே போதுங்களே.

பொ. கடேசிலே அதை எடுத்துண்டு வரப்போறதில்லே நீ.

மா. அதான் சொன்னேனுங்களே. சீ போன்னு எம்மா தாஸ்தி வெறுட்ரீங்க.

பொ. நிச்சயந்தானே.

மா. நம்பலாமுங்க.

பொ. அய்யா வரட்டும், சொல்லி என்ன செய்ய றேன் பாரு.

மா. செய்யுங்க. அதோ அய்யாவே வந்திட்டாங்க. உங்களுக்கு செமமர் இருந்தா நானே சொல்றேம்மா.

பொ. (போய்க்கொண்டே) கூட யாரோ வராங்க. அப்பறம்பாரு. அவ்வளவு துடுக்கா உனக்கு.

மாணி. அ, ஆ...இந்த தாட்டு பூட்டுக்கெல்லாம் அரள்றவனு மாணிக்கம்.

மாரி. அடேடே,கூட்வரது யாரு பாத்தேல்லே.

மாணி. யாரு அய்யா சிநேகிதர்யாரானும் இருக்கும்.

மாரி. அவரு நம்ம பளய எசமான்ல்லே.

மாணி. யாரு கண்ணாடியிலே முகம் பாக்கக்கூடா துன்னு சொன்ன புண்ணியவானு?

முத்து. (வந்துகொண்டே) இதென்ன பிரமாதம் ஷண்முகம், நம்ம பயகிட்டேயே சொல்லி...அடே, மாணிக்கம்கூட இருக்கானே. அம்மா இன்னும் வரலேயா மாணிக்கம்?

மாணி. இப்பத்தான் வந்தாங்க.

முத்து. கூடயாரு?

மாணி. யாருமில்லிங்க. நம்பூரு பையங்க.

ஷன். என்னப்பா, மாரியா; நீ இங்கே வேலே செய்யறயா என்ன?

மாரி. இல்லிங்க...சும்மாத்தானுங்க.

ஷண். இவன உங்க விட்டிலயா வேலே செய்யருன்?

முத்தும் இல்லேயே. யாரு இந்தப்புள்ளி?

ஷண். நம்ம வீட்டில் வேலே செஞ்சிட்டிருந்தான்னு சொல்லலே. அந்தப் பையன்தான். தங்கமானபய என்ன சௌக்யந்தானு மாரி!

மாரி. ஏதோ இருக்கேனுங்க. கடவுளு புண்ணியத் திலே. (மெதுவாக) அய்யா இரங்கிட்டாரு...

ஷண். என் அப்பறம் நம்ம வீட்டுப்பக்கமே வர இல்லேன்னு வச்சிட்டே.

மாரி. வர்ரனும்னுதான்...எங்கே டயமில்லிங்க.

ஷண். சாதாரணமா என்னமோ சொன்னு அதை இப்படிப் பிரமாதப் படுத்திட்டயே, ஏம்பா.

மாரி. அது ஏங்க அந்தப்பேச்சு...சரி விட்டிருங்க...

ஷண். போனது போகுது. இப்ப ஏதேனும் வேலே பாத்திட்டிருக்கயா என்ன?

மாரி. உங்க வீட்டை விட்டா கதியில்லேன்னு நினேச்சிங்களா, ஏங்க?

மாணி. அவன் சேட்டு கம்பெனியிலே பதினேந்து ரூவா சம்பளமில்லே வாங்கருன்!

ஷண். மாரி, இதோபாரு. அந்தப் பதினேஞ்சு ரூபாய்க்கு பதினெட்டு ரூபாயா நான் தரேன். நாளே முதல் வந்துடு நம்ம வீட்டுக்கு...

மாரி. இந்த பாருங்க. மாரிக்கு பணம் பெரிசில் லிங்க. மருவாதைதானுங்க பெரிசு. மருவாதை கொடுத்து மருவாதை வாங்கறவனுங்க மாரி.

ஷண். அட் சரிதாம்பா. அப்படி என்ன அவமரி யாதை பண்ணிட்டாங்க உன்னே?

மாரி. என்னுங்க. பெரிய மனுசங்க நீங்களே சொல் லுங்க. கண்ணுடியிலே முவத்தைப் பாத்துக்கிட்டா, கண் ணுடி கரிச்சா போயிடுங்க? இதைவிடவா அவிமானம் வேணும்? (போய்க்கொண்டே) நான் வர்ரேம்பா மாணிக் கம். நான் சொன்னதைப்பத்தி ரோசனே செய்.

ஷண். என்ன துடுக்கு பாத்திங்களா அவனுக்கு?

முத்து. மாணிக்கம், ஐயாவுக்கு, நீதான் ஒரு ஆள் பாத்து சொல்லேன்.

மாணி. ஆளுக்கு எங்கே போறதுங்க இந்த காலத் திலே...அல்லாருமே நம்பமாருதி நாய் கணக்கர்ப்படிஞ்சி கிடப்பானுவளா?

முத்து. பாருங்க ஷண்முகம், வெளியில் எட்டி விழுந்த எட்மெல்லாம், வேலையாயிருக்கா, வீட்டு வேலேக்கு ஆள் கிடைக்கறது குதிரைக் கொம்பா போயிட்டது.

ஷண். ஆமாம் ஸார். இப்ப என்ன செய்யறேன்னு நினேச்சிங்க? ஆபீசு ப்யூனேயே கெஞ்சி, வீட்டுக்கு வந்து போயிட்டிருக்கச் சொல்றேன். ஆபீஸ் வேலே முடிஞ் சப்பறம் நம்ம வீட்டில்வந்து ஔப்பித்தள்ளறதுக்கு பத்துரூவா அவனுக்கு.

முத்து. அப்படித்தான் சமாளிச்சுக்க வேண்டி யிருக்கு. என்ன செய்யறது வேறே வேலேக்காரன் கிடைக்கறவரைக்கும்...

ஷண். உங்களுக்கு நல்ல தங்கமான வேலேக்காரன் கிடைச்சிருக்கான்.

முத்து. சந்தேகமென்ன? மாணிக்கம் மாதிரி வேலைக்காரன் கிடைக்கறது லேசா?

ஷண். சரி நான் வரேன்.

முத்து. சரி ஷண்முகம்.

மாணி. (வந்துகொண்டே) இன்னுங்க, ஒண்ணு கேக்கணும்.

முத்து. என்ன மாணிக்கம்.

மாணி. ரொம்பநாளா சொல்லணும்னு இருந்தே னுங்க. நமக்கு இனி இந்த ஊட்டுவேலை செய்யறதுக்கு மாலாதுங்க...நீங்க கொடுக்கற சம்பளம் காப்பி செலவுக் குக்கூட கட்றதில்லிங்க...நாளையிலேருந்து நான் நின்னு கிட்றேனுங்க, நம்ப கணக்கை தீத்துக் கொடுத்திடுங்க.

முத்து. என்ன, மாணிக்கம், நீகூட...

மாணி. அம்மா! அம்மா! ஜல்திவாங்க...ஐயா ஏதோ மழக்கமா விளுந்திட்டாரு ..தன்னி கொண் டாங்க.

பொன்னி. என்னடா, என்னது, என்ன ஆச்சு, இந்தாங்க...இதபாருங்க இந்த தண்ணியை குடியுங்க... என்னடா சொன்னே, ஏன் இப்படி?

மாணி. ஒன்னும் இல்லீங்க. சம்பலம் கட்டலை நாளை தேதி நின்னுகிடறேன்னேன்.

பொன். போடா பைத்தியக்காரா ... சம்பளந்தா னேடா நான் போட்டுத்தரச் சொல்றேன். எத்தினி வேணும் பதினைஞ்சு ரூவா கொடுக்க சொல்லட்டுமா!

மாணி. செய்யுங்க...

முத்து. மாணிக்கம், மாணிக்கம், எடு செருப்பை.

மாணி. செய்யுங்க...எசமான்...இதோ...எடுத்துட் டேன்.

7

தையற்காரன்

தம்புசாமி. ஏகுப்பா, என்னடா செஞ்சிட்டிருக்கே? அந்தச் சட்டையில் காசாப்போடச் சொல்லி எத்தனை நாளி ஆவுது.

குப். நூல் ஆயிப்போயிருச்சுங்க, ஊசியில் நூல் கோத்திட்டிருக்கேன். இதோ ஆயிருங்க.

தம்பு. என்னடா. ஒரு ஊசியில் நூல் கோக்கற துக்கா இத்தனை நேரம்; இதுக்குள்ளேயும் ஒரு பாவு முருக்க நூல் கோத்து-முடியுமேடா.

குப். இதோ ஆயிடுத்துங்க, இந்த நூலு கொஞ்சம் மொத்து, ஊசிக்கண்ணும் சின்னது.

தம்பு. கண்ணு சின்னதா; எங்கே இனி ஒருதரம் சொல்லு. கண்ணு சின்னதாம். ஒங்கண்ணு மாதிரி இருட்டு முளி முளிச்சிட்டிருக்கே. இதையா சின்ன கண்ணுன்னு சொல்லறே; இந்த வயசிலே இந்தத் திண் டாட்டமாடா உனக்கு.

குப். இதோ கோத்திட்டேனுங்க, இனிமே அரை நொடியிலே ஆயிடுங்க.

தம்பு. இனிமே அரைநொடியிலே ஆகப்போவுதோ. இத்தனை நேரம் ஆகாமே; அஞ்சு மணிக்குள்ளே ஆகணும்னு சொன்னேனா இல்லையடா உனக்கு.

குப். நடுவிலே அந்தக் கோட்டுக்குப் பொத்தான் வாங்கிட்டுவரச் சொன்னிங்க போயிருந்தேன்.

தம்பு. அதுவேறே பாக்கி இருக்குதா; பொத் தானே இன்னம் தெக்கலே;-எங்கே போனான் இந்தப்பய அல்லாப்பிச்சை.

குப். நடுத்தெருவுக்குப் போயிருக்கானுங்க. சட் டையெல்லாம் குடுத்திட்டு வரச்சொன்னிங்களே.

தம்பு. பெரிய தொல்லேடா உங்களாலே. ஒரு மனுசன் எவ்வளவுடா செய்யமுடியும்; அந்த மனிசன் ஆபீசு விட்டுப்போகறவேளே. சனிசுவரன் மாதிரி வந்து நிக்கப்போறான்னு சொல்லிருந்தா-இன்னும் காசாப்போட்டபாடில்லே. போதாக்குறைக்கு கோட் டுக்குப் பொத்தானும் தெச்சபாடில்லே. கோட்டுக் காரன் வந்து நின்னு என்ன சொல்றது; செய்யறதெல் லாம் செஞ்சிட்டு, அவன்கிட்ட பல்லே இளிக்கிறதா.

குப்பு. கோட்டுப் பொத்தானேயும் நானே தெச்சுட றேனுங்க; ஒரு நொடியில.

தம்பு. போடா போடா, எல்லாம் ஒரு நொடிதான் உனக்கு, அதோ வரான்பாரு கோட்டுக்காரன், குரங்கு சாகக் குடுத்த ஆண்டி மாதிரி. சுத்த தரித்திரப்பசங் கன்னு இவங்களேத்தான் சொல்லனும். கோட்டெல் லாம் தாறுதாரா கிழிஞ்சப்புறம் புதுசு தைக்கக் குடுக் கறது. அப்பறம் தையக்காரன் கடைக்கு கால்தேய நடக்கறது, சாவகாசமாத் தைச்சோங்கற பேச்சுக் கிடையாது.

கோட்டுக்காரன். என்ன தம்புசாமி, கோட்டு ரெடியா!

தம்பு. ரெடியாயிடுத்துங்க. பொத்தான் மட்டும் தான் பாக்கி.

கோட். என்னப்பா, இன்னிக்குக் கட்டாயம்

கிடைக்கும்னு சொன்னே. வந்தா இன்னும் இழுத் தடிக்கறயே.

தம்பு. இளுத்தடிக்கிறதென்னங்க; ஒரு அஞ்சு நிமிஷம் உக்காந்திருங்க. நாலு பொத்தான் தைக்கறது தானு பிரமாதம்,

கோட். நாலு பொத்தானு; டபிள் ப்லெஸ்ட் கோட் அப்பா, மறந்து போயிட்டயா.

தம்பு. அட, ஒரு பேச்சுக்குச்சொன்னு அப்படியே எடுத்துக்கிட்டா என்ன பண்றது; குடுத்த ஆர்டருக்கு ஒரு இம்மியாவது தவறி நடந்திருப்பானு தம்புசாமி;- உக்காருங்க. இதோ அஞ்சு நிமிஷத்தில் ஆயிடும்.

கோட். எனக்கு உக்காந்திருக்க நேரமில்லேயப்பா, அவசரமா போறேன். கையோட் வாங்கிட்டும் போக லாம்னு பாத்தா மறுபடியும் அலேய வைக்கறே.

தம்பு. என்னமோ வேலே ஆகாததுபோல சொல் றிங்களே. காலம்பறவே கோட்டு முளுக்கத் தெச்சு ரெடியாயிட்டுதுங்க. ஆச்சு, அந்தப் பொத்தானேச் தெச்சு இஸ்திரியும் வச்சாச்சின்னு.

கோட். இன்னும் இஸ்திரி வைக்கறது வேறே பாக்கி இருக்கா.

தம்பு. பின்னே இஸ்திரி வைக்காட்டி கோட்டு பார்வையா யிருக்குங்களா; எல்லாம் என்ன ஆகப்போவு துங்க; மிஞ்சினு அரைமணி...

கோட். அதெல்லாம் அரை நிமிஷம் கூடக் காத் திருக்க எனக்கு நேரமில்லே. நாளேக்குக் காலம்பற வரு வேன்-கட்டாயம் வச்சிருக்கணும், சால்ஜாப்பு சொல் லக்கூடாது.

தம்பு. சால்ஜாப்பா; கோட்டு இப்பவே வாங்கிட்டுப் போங்கன்னு சொல்லறேனே.

கோட். நாளைக்கு ஆபீஸுக்கு அதைத்தான் போட்டுக்கிட்டு போகணும். [போகிறன்]

தம்பு. தணிவாக பின்னே உமக்கும் நமக்கும் தரித்திரம் விடியறதுதான் எப்போ; ஒரே கோட்டை சோப்பு போட்டுப் போட்டுக் கந்தலாக்கறது. அப்பறம் நம்ம மென்னியைப் பிடிக்கறது. நல்லா வந்து சேர்ந்தாங்க-அட, எதுக்கு திரும்பிவரான போனவன்;-என்னங்க.

கோட். (வந்துகொண்டே) அந்தக் கோட்டை எடு பார்க்கலாம். போட்டுப் பாத்துட்டா, சரியாத் தைச்சிருக்கான்னு தெரிஞ்சுபோயிடும்.

தம்பு. தாராளம்மா போட்டுப் பாருங்க. உங்களுக்குண்ணுதான் மாட்டியிருக்கு நிலைக்கண்ணாடி, அளவுன்னு அளவாத்தான் இருக்குங்க; தம்புசாமி வேலை. கையைக்கொண்டாங்க, நான் மாட்டிவிட்டறேன்.

கோட். இதென்ன தம்புசாமி, காலர் இப்படியா வைக்கச் சொன்னேன்.

தம்பு. பின்னே எப்படிங்க.

கோட். 'வி' காலர் வைக்கச்சொன்னா இப்படி திம்லா காலர் வச்சிருக்கயே.

தம்பு. 'வி' காலர் நீங்கவைக்கச் சொன்னாலும் நான் வைப்பேனா, ஏங்க; 'வி' காலர் பேஷனா இருந்தது போயி ஒருவருஷம் ஆயிருச்சே. அதுக்கப்புறம் காலர் பதினெட்டு விதமா மாறி இப்ப எங்கே பார்த்தாலும இந்த மாதிரி திமான் காலர்தான். தெரியுங்களா.

கோட். அதெல்லாம் யாரப்பா கேட்டது. 'வி' காலர் வைக்கச் சொன்னு நீ வைக்க வேண்டியது தானே.

தம்பு. அப்படி வைச்சா என்பேரு போயிடுங்க. கோட்டைப் போட்டுக்கிட்டு வெளியில் கிளம்பினு தம்பு சாமி தைச்ச கோட்டுன்னு சொல்லும்படியா இருக்க வேண்டாம். நாலு பேர் கேக்க, நீங்க சொல்ல-"தம்பு சாமியா இப்படி பத்தாம்பசலி காலர் வச்சிருக்கான்" அப்படின்னு பேச்சு வரத்துக்கா!

கோட். காலர் பார்க்க சகிக்கலே. இதைப் பெரு மையாச் சொல்லவரயே.

தம்பு. அதெல்லாம் பார்த்தா பேஷன் நடக்கா துங்க இப்ப. இந்தக் காலருக்கு என்ன கிராக்கின்னு ஐயாவுக்குத் தெரியாது போலே இருக்கு. இதைப் போட்டுக்கிட்டு ஆபீசுக்குப் போனு மானேஜரே எழுந்து நின்று சல்யூட் அடிப்பாரே, தெரியுங்களா.

கோட். எனக்கு இந்தக் காலர் கொஞ்சங்கூட பிடிக்கலே.

தம்பு. அதனுல் என்னவா; பேஷனு இருக்கிற தெல்லாம் நமக்கு பிடிக்கும்னு அர்த்தமா; நம்ம பிடித் தத்துக்கு இதில் இடமே இல்லிங்க. ஊர்க்காரங்களுக்கு பிடிச்சா சரி. அதுதான் பேஷன்.

கோட். என்னமோ அளக்கறியே ஒழிய...

தம்பு. இது அளப்புங்களா; வேணும்னு இந்தப் புஸ்தகத்தைப்பாருங்க. லேடிஸ் பேஷன் மாடலுங்கள் ளாம் இதில் போட்டிருக்கு. இதைப்பாக்காம தம்புசாமி ஒரு காரியம் செயயறதில்லிங்க, சொன்னு நமபுங்க.

கோட், கால்ர் தொலையறது. இங்கே ஒரு வாட்ச் பாக்கெட் வைக்கச்சொன்னேனே, அது கூடவா மறந்து போயிடுத்து.

தம்பு. (சிரித்து) என்னங்க, வாட்ச் பாக்கெட்டா; நிசமாகவே வாச்பாக்கெட்டா வைக்கச் சொன்னிங்க.

கோட். சொல்லாமலா இப்ப எங்கேன்னு கேக்கறேன்.

தம்பு. இந்தப் பாருங்க. உங்க அப்பாரு நாளை யிலே போட்டுக்கிட்டிருந்த கோட்டு எதாச்சும் வீட்டில் பாத்திட்டு வந்து அந்த திட்டத்துக்குத் தைக்கச் சொன்னு யாருங்க தைக்கறது. வாச்பாக்கெட்டாமே, வாச் பாக்கெட் வைக்கற நாளா இது.

கோட். வாச்பாக்கெட் வச்சுக்கறதுக்கு நான்வேறே பார்க்கணுமோ பஞ்சாங்கத்திலே.

தம்பு. ஆண்டு மாறிப் பஞ்சாங்கத்தில் கூட அந்த நாள் ஆப்படாதுங்க. என்னமோ அந்த நாளையிலே அவங்கவங்க ஒரு சுண்ணும்பு கரண்டாம் மாதிரி கடியா ரத்தை சங்கிலியில் கோத்துக் கழுத்தில் மாட்டிக்கிட்டுத் திரிஞ்சாங்க. அப்போ வாச்பாக்கெட் வேண்டியிருந் தது. இப்ப என்னடான்னு ஒரு தோட்டியைப் பார்த் தாலும் ரிஸ்ட்வாச் கட்டிக்கிட்டு திரியருனே, பாக்கெட் வாச்சைச் சிந்தறவங்க யாரு; பாக்கெட் வாச் இருந் தால்லே வாச்பாக்கெட் பேஷன் ஆ இருக்கும்.

கோட். வாச் போட்டுக்கறதுக்குத்தாஞ வாச் பாக்கெட்? சும்மா அழகுக்கு வைக்கச்சொன்ஞ...

தம்பு. அதாஞ்சொல்றேனே, ஏதோ அந்த நாளைய கோட்டைப் பாத்திட்டு அதுவே அளகுன்னு

தோணிப்போச்சு உங்களுக்கு. நீங்க சொன்னாலும் கேக்கற தம்புசாமிக்கு மதி இல்லிங்களா.

கோட். இதோ பின்னால் என்னமோ ரெண்டாக் கத்தரிச்சு வால்மாதிரி விட்டிருக்கயே, இதுவும் பேஷன் தானே.

தம்பு. சொன்னா நம்புங்க, எதுக்கு வீண்வம்பு? நாளைக்கு இதைப் போட்டுக்கிட்டு ஆபீசுக்குப் போங்க, மானேஜர் எழுந்திருந்து நின்று சல்யூட் அடிக்காட்டா கூலி தரவேண்டாங்க.

கோட். எப்படியேனும் தொலையறது. நாளைக்குள்ளே பொத்தானைத் தெச்சு ரெடியாவர்வது வச்சிரு.

தம்பு. அதெல்லாம் டக்கா இருக்கும். அதிருப்தியோட போகாதிங்க. திருப்தியாப்போங்க.-கஷ்டகாலம் குருடனை ராஜமுளி முளிக்கச் சொன்னா...? முன்னே பின்னே கோட் போட்டிருந்தால்லே பாசன் தெரியப் போகுது. ஆனா அவனைச் சொல்லித்தான் என்னகுத் தம்; ராவாப் பகலா இதிலேயே அடிபடறேன். நமக்கே புரியமாட்டேங்குதே இந்தப்பாழும் பாசன்!-காசா இன்னுமாடா போடலே? அதோ பாருடா அந்த ஐயரு வந்திட்டாரு.

நடேசன். என்ன தம்புசாமி. சட்டையைக் குடுக்கறயா.

தம்பு. இதோ ஆயிடுச்சுங்க, உக்காருங்க,

நடே. உக்காறத்துக்கு நேரமில்லே. இன்னும் வேலே பாக்கி இருக்கா என்ன?

தம்பு. ஆங்...அதெல்லாம் வேலே பாக்கி தங்குமா தம்புசாமி கிட்டே? எல்லாம் டக்காப் போச்சு. அதோ

பாருங்க. உங்க சட்டைதான் பய காசாப் போட்டுக்கிட்டிருக்கான்.

நடே. நாசமாப்போச்சு. நானும் பார்த்தாச்சு தம்புச்சாமி, இது ஒரு சாக்கு உனக்கு. எப்பப்பாரு, பய காசா போடறதுதான பாக்கி.

தம்பு. பின்னே காசான்னு லேசா ஸாமி? சட்டை தெக்கறதெல்லாம் என்ன பிரமாதமுங்க! மெஷின்லே வச்சு ரெண்டு இளுப்பு இளுத்தாத் தீந்துது. இதிலே முக்கியமான வேலே! கண்ணே ஊனிக்கிட்டு கையாலே சாமர்த்தியமா செய்யவேண்டிய வேலே இல்லே!

நடே. அம்மா வேறே ஜாக்கெட் துணி குடுக்கணும்னு சொல்லிட்டிருந்தாங்க, சட்டையை வாங்கிட்டு கையோட உன்னேயும் அழைச்சிண்டு போலாம்னு வந்தா...

தம்பு. நீங்க மயங்காதிங்க ஸாமி. வூட்டண்டை போயி காப்பி டிபன் சாப்பிட்டிட்டிருங்க, அதுக்குள்ளாற நானே கையோட சட்டையையும் டேப்பையும் எடுத்திட்டுவாறேன்.

நடே. கட்டாயம் வரணும். நான் மறுபடியும் வந்து அலேயும்படி வச்சுககக் கூடாது.

தம்பு. தமபுசாமிக்கு அதெல்லாம் சொல்லணுமா ஸாமி? புதிசா கிருக்கி கொண்டுவந்த மாதிரி பேசறிங்களே. நீங்க போங்க. நொடியில் வந்துடறேன்.

* * * *

மனேவி. மறந்து போயிட்டேளா என்ன.

நடே. என்னது?

மனேவி. வரபோது தம்புசாமியைக் கையோட அழைச்சிண்டு வரதாச் சொன்னேளே.

ந. என் சட்டை இன்னும் முடிஞ்சபாடில்லே. அது ஆனதும் எடுத்திண்டு வரதாச் சொன்னன்.

ம. உஙக சட்டை இன்னிக்குக் காலமபறவே குடுக்கறதாச் சொன்னனே.

ந. வாயால சொல்றதுக் கென்ன? காரியம்னு வர போது காசாப் போடலேன்னு நிட்டூரான்.

ம. இவங்களுக்கு ஒண்ணு ஆம்பிட்டுது இது. காசாப்போட்றது.

ந. அவனுந்தான் என்ன செய்வான் பாவம். ஊரில் நன்னாத் தைக்கற தையக்காரன் அவன் ஒத்தன் தான். எல்லாரும் அவன் கிட்டேயே வேலையைக் குடுத்தா, ஒத்தனால் எப்படி சமாளிக்கமுடியும்?

ம. சமாளிக்க முடியாட்டா ஆள்வச்சு வேலே வாங்கணும். இல்லாத போனா என்னால் முடியாதுன்னு சொல்லணும்.

ந. அப்படி முறிச்சாப்பலே சொல்றது லேசா? இப்போ நம்ம துணியைத்தான் வாங்கிக்க மாட்டேங் கறான்னு வச்சுக்கோ. நமக்கு எப்படி இருக்கும்?

ம. இவனை விட்டா வேறே புகலே இல்லாத மாதிரி சொல்றேளே.

ந. அவன் வராதபோனா அப்போதெரியும்.

ம. சொல்றேளே, இன்னிக்கு குருசாமி வக்கில் வீட்டுக்குப் போயிருந்தேன். என்ன செய்யறா தெரியு மோனோ? வீட்டில் மெஷின் வச்சிண்டிருக்கா. ஒரு தலை யணை உரையிலேருந்து அவர் ஷர்ட் வரைக்கும எல்லாம் அந்த மாமியே தனகையாலே தைச்சுக்கறா. எனக்குப் பொறாமையாயிருந்தது.

ந. ஓகோ, குருசாமி வக்கிலுக்கு பிராக்டீஸ் நாளுக்கு நாள் இறங்கிண்டு வரதுக்குக் காரணம் இப்போ தெரியறது.

ம. பொய்யா சொல்றேன்? ஒண்ணொண்ணும் என்ன அழகா தைக்கறா தெரியுமா? நம்ம வீட்டிலேயும் ஒரு மெஷின் இருந்தா நீங்க இப்படி தம்புசாமி கிட்ட நடையா நடக்கும்படியா இருக்கும்.

ந. சரிதான். இதுக்காக நானூறு ஐநூறுன்னு குடுத்து தையல் மெஷின் வேறே வாங்கணுமோ! சரி யான ஏற்பாடுதான்.

ம. என் கையால் உங்களுக்கு ஒரு சட்டையாவது தைச்சுக்குடுத்தாத்தான் என ஆசை தீரும்.

ந. இப்படி ஒத்தொத்தரும் வீட்டிலேயே தைச்சுக் கறதாயிருந்தா அப்பறம் தம்புசாமி பிழைப்பு நடம் தாப்பலதான்.

ம. பாத்திண்டிருங்கோ,-நான் அவர் வீட்டு மெஷினை கொஞ்ச நாளைக்கு வாங்கிண்டு வந்தாவது உங்களுக்கு சட்டை தெச்சுக்குடுக்கத்தான் போறேன்.

த. (வந்துகொண்டே) ஸாமி, ஸாமி!

ந. தம்புசாமியே வந்துட்டான். என்னப்பா, கொண்டு வந்தயா சட்டை.

த. அதெல்லாம் கரெக்டா சொன்னபடிக்கு வந்து டாதா; இத்தனைக்கும் வேலை ஒரே மட்டாக் குமிஞ்சு போயிருக்குங்க. அதெல்லாம் அப்படியே போட்டுட்டு இதைதக்கவனிச்சேன். அதென்ன அப்படிப் பாக்கி றீங்க; அளவுன்னு அளவா யிருக்குங்க. சந்தேக மிருந்தா போட்டுப் பாத்துக்குங்க. நானு வேண்டாம் ங்கறேன்.-அம்மா, உங்க ஜாக்கெட்டுக்கு துணியும் அளவு சட்டையும் குடுத்திடுங்க. பாசின்லாம நான் பாத்து தைச்சுக்கொண்டுவரேன். ஆனு ஒண்ணு சொல் லிட்டேன். நெரிச்சுப் பிரயோசனமில்லே. குறைஞ்சுது பத்து நாளாவது ஆகும்.

ம. என்ன, பத்துநாளா? கேட்டேளா? பத்து நாளாகுமாம்.

த. ஆமாங்க, முன்னுல் குடுக்கறேன்னு சொல்லி அப்புறம் உங்களை நடக்க வைக்கறது சரிங்களா?

ம. ஜாக்கெட் தைக்கறதென்ன பிரமாதவேலையா! உக்காந்தா பதினைந்து நிமிஷம் தாராளம்...

த. சரியாப்போச்சுபோங்க,அதென்ன அந்தக்கால மா;தலைகாணி உரைமாதிரி ரவிக்கைபோட; இப்பல்லாம் சூட் தைக்கறது கூட அவ்வளவு நேரம் பிடிக்காதுங்க. ஜாக்கெட் சினனதுன்னு யோசிக்கிறீங்களா; அதிலே இருக்கற வேலை வேறே எதிலயும் இருக்காது தெரியுங் களா; சுருக்கமென்ன, காலர் என்ன, லேஸ், டைபிங்...

அப்பப்பா, ஒரு ஜாக்கெட் தைக்கறதும்சரி, பத்துஷர்ட் தைக்கறதும சரி.

ந. தம்புசாமி, இதென்னப்பா, கை இவ்வளவு நீளமா வைச்சுட்டே; உள்ளங்கை மறைய தொங்கறதே.

த. புதுத்துணி பின்னே எப்படி இருக்குங்க.

ம. தாத்தா சட்டை மாதிரி தொள தொளன்னு தைச்சிருக்கானே.

த. ஒரு வெளுப்புக்குப் போட்டு வரட்டுங்க. அப்பறம் மெச்சுவிங்க தம்புசாமி முன் யோசனையை, நீங்க குடுத்த அளவுக்கே தைச்சா இப்ப போடறதுக்கு சரியாத்தான இருக்குங்க. அப்பறம் வெளுத்து வந்து முழங்கை வரைக்கும் கை ஏறிப்போச்சுன்னு தம்புசாமியைத் தானே திட்டத்தோணும். நேருக்குநேர் நல்ல பேர் வாங்கறது பெரிசில்லிங்க. தலை மறைவிலேயும் தம்புசாமின்னு மெச்சத்தோணனும். என்னம்மா நான் சொல்றது.

ம. நீ இப்படி ஏதேனும் வாய் இனிக்கப்பேசறதைக் கேட்டுட்டு அய்யா ஆடறுரு.

த. வாய் இனிக்கப் பேசி என்ன ஆறதுங்க; மனம் இனிக்க வேலையும் செய்யணுங்க.

ந. ஐயா, அவனுக்குக் குடுக்க வேண்டிய துணியும் அளவு சட்டையும் குடுத்து அவனை அனுப்பு சீக்கிரம்.

ம. அவன் என்னமோ பத்து நாளாகும்னு சொல்றுனே.

த. பத்துநாள்தான் ஆகும்ங்க. அதுக்குக் குறைஞ்சு நம்மால் முடியாது.

ந. ஜாக்கெட் தைக்கறதுக்கு பத்து நாளா; என்னப்பா கதை பண்ணறே.

த. என்னைக்குத்தம் சொல்லி என்ன பண்ணறதுங்க. ஒரு சுருக்கம் குறைச்சலா இருந்தா என்னைச் சும்மா விடுவாங்களா; இந்தக்காலத்தில் என்ன தெரி

யுங்களா் ஒரு ஜா்க்கெட் தெச்சு ஙல்லபேர் வாங்கிட்டா் அவன் தானுங்க தையக்காரன.

ம. நான் துணி குடுக்கப்போறதில்லே இவன் கியட்டே.

த. அப்புறம் உங்க இஷ்டங்க. குடுத்தா மனசு போல தைச்சுக்குடுப்பேன். இல்லேயா, வேலே மிச் சம்னு இருப்பேன். அவ்வளவுதான். போய் வரே ணுங்க.

ந. முதல் தேதி வந்து பணம் வாங்கிண்டுபோ,

த. பணத்தைப்பத்தி என்னங்க; மனம்போல குடுங்க (போகிருன்)

ந. (சற்றுப் பொறுத்து) என்ன ஐயா, இவனே வெறுமே அனுப்பிட்டயே. வேறே தையக்காரன் யாரு இருக்கான் நமக்கு.

ம. தையக்காரன் இல்லாட்டா; ஒழிஞ்சவேளேயில் குருசாமி வக்கில் வீட்டுககுப்போய் அந்த மெஷின்லே தைச்சிண்டு வந்தா தீந்துது. இதுவா பிரமாதம; உங் களுக்கும் ஷர்ட் இனிமே நானே தைச்சுந்தரேன். தெரிஞ்சுதா.

ந. எனக்கென்ன; எப்படியாவது துணித்தட்டில் லாம இருக்கவேண்டியது, அவ்வளவுதான.

ஜம்பு. என்னப்பா, நடேசா, பாத்தா பேசக்கூட மாட்டேங்கறே; உன்னேத்தேடி உன்வீடு வரவேண்டி யிருக்கு.

ந. வா ஜம்பு. ஏது, பேன்ட்டும் ஷர்ட்டும் ஒரே அமக்களமா இருக்கு! மெட்ராஸ் போயிருந்தயே, அங்கே தைச்சின்டு வந்தயா என்ன.

ஜ. மெட்ராஸா; பேன்டும் ஷர்ட்டும் அங்கேதான் தைக்க முடியுமா என்ன.

ந. கட்டும் தையலும் அமக்களமா இருக்கேன்னு கேட்டேன்.

ஜ. ரியலி; நம்ம தம்புசாமி இருக்கிறபோது மெட் ராஸுக்கு ஏனப்பா போகணும்.

ந. தம்புசாமி தெச்சதா! அப்படி சொல்லு.

உம். உனக்கென்ன.

ஐ. ஆமாம ஒண்ணு கேக்கணும்னு இருந்தேன். நீ என ஏதோ விளக்கெண்ணெய் குடிச்சவன மாதிரி திரியறே; எதையோ பறி குடுத்தவன் மாதிரி இருக்கயே!

ந. அதையேன கேக்கறேப்பா, வெளியில் வரதுக்கே வெக்கமா இருக்கு. இந்த ஷர்ட்டைப பாததேல்லியோ.

ஐ. (சிரிதது) அடே, ஆபீஸில் எல்லாம் இதைப் பத்திததான பேச்சு.

ந தெரியும எனக்கு. தலைமறைவில் பேசறுங்களா காலிப்பசங்க.

ஐ. எந்தத்தையக்காரன அபபா தைச்சான் இவ்வளவு அற்புதமா.

ந. வயத்தெரிச்சலைக் கிளப்பாதே அப்பா. வெளியில் சொனனு வெககக் கேடு. சொனனுக் கேட்டாத்தானே.

ஐ. ஓகோ, புரிஞ்சுக்கிட்டேனய்யா, புரிஞ்சுக்கிட்டேன். ஸஹதர்மிணி அனபளிபபா; அப்படிச்சொல்லு.

ந. டே, வெளியில் மட்டும் சொனனே, மண்டையை உடைச்சுடுவேன், பத்திரம்.

ஐ, சேசே, சொல்லுவேனு; ஆனு இதுக்கு நீ விளக்கெண்ணெய் குடிச்ச மாதிரி மூஞ்சியை வச்சுக்கவேண்டாம். சரி, நான் வரேமபா.

மனைவி, (வந்துகொண்டே) ஆமாம, உங்க ஸ்நேகிதர்ட்டசொனனேளோ. நான தைச்சதைப்பத்தி.

ந, பின்னே அவன் கேட்டா நான என்ன பண்றது.

ம. இதெல்லாம என்ன கேள்வி சிநேகிதங்களுக்கு.

ந. பைததியம் பிடிச்சவன் மாதிரி ஏதோ தலைகாணி உரையை சட்டைன்னு போட்டுண்டு திரிஞ்சா கேக்கத் தோணுதா.

ம. அது எப்பவோ ஸ்கூல்லே கத்துண்டது. கொஞ்சம் கொஞ்சம் மறந்திருக்கு. இன்னும் கொஞ்ச நாள்ளே சரியாயிடும்.

ந. இன்னும் கொஞ்ச நாளா; போதும்மா. போதும் இதையே தம்புசாமி கிட்டக் குடுத்துச் சரிப்படுத்தலா மான்னு நான் யோசனை பண்ணிண்டிருக்கேன்.

ம. எனக்குக்கூட என் ஜாக்கெட்டுகளை சரிப்படுத் திக்கலாமான்னு யோசனையா இருக்கு.

ந. அதான் நான் சொல்றது. அததுக்கு ஏற் பட்டவன் செஞ்சாத்தான் அதது சரிப்பட்றது.

தம்பு. (வாசலிலிருந்து) ஸாமி, ஸாமி!

ந. தம்புசாமிதான். பணத்துக்கு வந்திருக்கான் போலேருக்கு. இப்பவே சரிப்படுத்தச் சொல்லிக் குடுத்துடலாமா.

ம. ஆனா நான் தெச்சதுன்னு மட்டும் சொல்லா தேங்கோ; தயவு பண்ணி.

த. (வந்து கொண்டே) என்னங்க, கொஞ்சநாளா அய்யர் தயவே இல்லே.

ந. அதென்னப்பா அப்படிச் சொல்லறே.

த. பின்னே என்னங்க! ஒண்ணுமே தைக்கக்குடுக் கலேயே: கோவமா என்மேலே.

ந. கோவம் ஒண்ணும் இல்லேப்பா. நானே உன் கிட்ட வரணும்னுதான் இருந்தேன்.

ம. தம்புசாமி, இதெல்லாம் சரிப்படுத்திக்கொண்டு வருவயா?

த. என்னங்க, பெரிசாப் போச்சுங்களா?

ந. ஆமாம்பா, திட்டம் தெரியாம தெச்சிருக்கான். அளவு எடுத்து சின்னது பண்ணிக்கொண்டு வரணும்.

த. அந்தத் தலகாணியையும் கொண்டு வாங்க. நானே அளவு எடுத்து சரிபண்ணிடறேன்.

ம. தலகாணியா?

த, பின்னே இதுவெல்லாம் தலைகாணி உரைங்க தானே.

ந. விளையாடாதே தம்புசாமி, இதெல்லாம் அம்மா ஜாக்கெட்டு, இது என ஷர்ட்.

த. உங்க ஷர்ட்டா? மெத்தை உரையன்னில்லே நினைச்சேன், இவ்வளவு அபாரமா எந்தத் தையக்காரன் தெச்சதுங்க?

ந, அம்மா பட்டணம் போயிருந்தாங்க நடுவிலே, அங்கே எவனோ தையக்காரன் கிட்டே குடுத்து நாசம் பண்ணிட்டா.

ம. சரிப்படுத்த முடியுமா முடியாதா?

த. முடியாம என்னங்க? தம்புசாமி கைவைச்சா முடியாமலா போயிடும்?—இதோ பாத்திங்களா, புது பாசன் ஜாக்கெட்டுங்க. இதே மாதிரி தெச்சு வந்தா போதுங்களா?

ம. ரொம்ப நன்னாருக்கே, யாரு வீட்டுக்குத் தெச்சிண்டு போறே?

த. நமம குருசாமி வக்கில் இருக்காரில்லே—அவர் வீட்டுக்குததான.

ம. என்ன, வக்கில் வீட்டுக்கா? அவா வீட்டில் மெஷின இருக்கு, அந்தமமானா எல்லாம தைக்கறு?

த. அந்தம்மா தைக்கறதா? அதெல்லாம் கதை அம்மா, மெஷின் இருக்கு, அளுக்கு, ஆனா தைக்கற தெல்லாம் தம்புசாமிதான.

ம. சரியாப்போச்சு நிசம்போல சொன்னாளே அந்தமமா.

த. தமபுசாமி கிட்டே நாள முன்னே பின்னே ஆனாலும வேலை சுத்தம இருக்குங்க. ஆள்பாதி ஆடை பாதின்னு சொல்லுவாங்களே, தமபுசாமி தெச்சுககுடுத் தானா அரை ஆளை ஒண்ணரை ஆளா ஆக்கிடுங்க. போய்வரட்டுங்களா? அடுத்தவாரம வரேனுங்க.

சூரியகாந்தி

ந. சிதம்பர சுப்ரமண்யன்

இன்று இதர நாட்டு சிறு கதை எழுத்தாளர்களோடு ஒப்பிடக்கூடிய தமிழ்ச் சிறுகதை எழுத்தாளர்களை விரல் விட்டு எண்ணி விடலாம். அப்படிப் பட்டவர்களில் ந. சிதம்பர சுப்ரமண்யம் ஒருவர். அவருடைய கதைகள் ஒவ்வொன்றும் ஆழ்ந்த கலைச் சுவையும், வேதாந்தப் பொருளும் நிரம்பியவை. அவருடைய கதைகளிலே சிறந்த கதைகள் என்று போற்றப்பட்ட கதைகளைத் தொகுத்து வெளியிடுகிறோம்.

★

அழகிய உயர்ந்த பதிப்பு

ஜோதி வெளியீடு

குற்றமும் தண்டனையும்

பிரபல ரஷ்ய ஆசிரியர் டாஸ்டாவ்ஸ்கியின் இணையற்ற நாவல்.

மயிர்கூச்செறியும் சம்பவங்கள் நிறைந்த இந்த நாவலில் குற்றவாளியின் உள்ளத்தை உணர்ச்சி ததும்பச் சித்திரித்திருக்கிறார் ஆசிரியர் டாஸ்டாவ்ஸ்கி. குற்றவாளி, ஒரு கலாசாலை மாணவன். லட்சியவாதி.

சமூகத்தின் ஊழல்கள் அவன் வாழ்க்கையையும் மனதையும் பெரிதும் பாதித்துவிடுகின்றன. மனோ தத்துவ விஞ்ஞானியான அவன், உலகில் குற்றங்கள் தோன்றுவதற்கே காரணம் சமூகத்தின் அடிப்படையில் மல்கிக்கிடக்கும் அநீதிகள் தான் என்ற முடிவுக்கு வருகிறான். இதைப் பற்றித் தீவிரமாகச் சிந்திக்கிறான்.

தன் துன்பங்களிலிருந்து விடுபட - தன் லட்சியத்தை காரிய ரூபத்தில் கொண்டுவர ஒரு கொலைக்கு இரு கொலையாகச் செய்துவிட்டு தன் குற்றங்களைத் தானே ஒப்புக்கொண்டு அதற்கான தண்டனையை ஏற்கவும் தயாராகிறான்.

கொலைகாரனாவதற்கு முன்னும் கொலைகாரனான பின்பும் அவன் மனத்தில் ஏற்படும் எண்ணச் சுழல்களையும் உணர்ச்சி அலைகளையும் வெகு நுணுக்கமாக ஆராய்கிறார் ஆசிரியர்.

கதைப் போக்கில் பல்வேறு பாத்திரங்கள் பல்வேறு சம்பவங்களில் தோன்றி கதையின் ஸ்வாரஸ்யத்தை உச்ச நிலைக்குக்கொண்டு செல்கிறார்கள்.

உலகப் பிரசித்திபெற்ற இந்நாவலை தமிழில் பெருமையுடன் வெளியிடுகிறோம்.

-: ஜோதி வெளியீடு :-

COVER PRINTED AT JOTHI PRESS, MADRAS. 5.